901

கதர் மலர்

மலர் 5 | காந்தீய - சர்வோதய தத்துவப் பிரசார மாதப் பத்திரிகை | இதழ் 9

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 JUN 1952
MADRAS

★ ★



454

★

நந்தன-வருடம்

ஆனி-மீ

★

போட்டோ:— கனு காந்தி — காந்தி சித்திராலயம், ராஜ்கோட் ★ ★

வருட சந்தா ரூ. 3 | ஸர்வோதய பிரசுராலயம், வீரபாண்டி, திருப்பூர் | விலை அணா 4

இலங்கையில் தனிப் பிரதி: 30 சதம்

கதர் மலர்

நந்தன-ஆனி தொடர் நெ. 57

பொருளடக்கம்

சுதேசி தர்மம்:

— *மகாத்மா காந்தி*

காசி - சேவாபுரியில் சர்வோதய சம்மேளனம்:

— *வினோபாஜி*

கர்மத்தின் மூலம் சமூக சேவையும் ஆத்ம லாபமும்:

— *வினோபாஜி*

காந்திஜியின் பிரதம தரிசனம்:

— *ஆச்சாரிய கிருபலானி*

காந்தியும் மார்க்ஸும்:

— *வினோபாஜி*

தரித்திரநாராயணன் சேவை:

— *வினோபாஜி*

இந்தியாவில் துணி ஆலைத் தொழில்:

— *கந்துபாய் தேசாய்*

வர்தா:

— *சத்தியன்*

பூமிதான விநியோகம்— குடியானவனின் பூரிப்பு:

சர்க்கார் சம்பளமும் நிர்மாண ஊழியரும்:

— *ஸ்ரீகிருஷ்ணதாஸ் ஜாஜு*

கதாயி மண்டல வேலை — புதிய வழியும் யுக்தியும் தேவை:

— *சஹஸ்ரபுத்தே*

மில் பொருள் பகிஷ்கார சங்கற்பம்:

குறிப்பும் செய்தியும்:

ஸர்வோதய பிரசுராலயம்

முக்கிய அறிவிப்பு

அகில பாரத சர்வ சேவா சங்கம் தென்னாட்டில் காந்தீய-சர்வோதய இலக்கியத்தைப் பரப்புவதற்குத் தனது பிரசுர இலாகாவை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளது. அதன்படி சர்க்கா சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளையின் ஸர்வோதய பிரசுராலயத்தை ஏற்று நடத்த முன்வந்துள்ள செய்தியை அன்பர்கள் வரவேற்பார்கள்.

1952-௵ ஜூன்-௴ 1-௳ முதல் திருப்பூர் வீரபாண்டியில் சர்க்கா சங்க வித்தியாலயத்திலுள்ள ஸர்வோதய பிரசுராலயத்தையும், அதன் மூலம் நடந்து வரும் கதர் மலர், *The Khadi World* (கதர் உலகம்) பத்திரிகைகளையும் சர்க்கா சங்கம் சர்வ சேவா சங்கத்திடம் அதன் நன்மதிப்புடன் ஒப்படைத்துவிட்டது.

இனி ஸர்வோதய பிரசுராலயத்தின் பிரசுரங்களும் பத்திரிகைகளும் சர்வ சேவா சங்கத்தின் ஆதரவில், இப்போதுள்ள இடத்திலேயே, இதுவரையுள்ள ஆசிரியர் நிர்வாகத்தின்கீழ் தொடர்ந்து நடைபெறும். விலாசத்தில் மாறுதல் ஒன்றும் இல்லை.

சர்வ சேவா சங்கத்தின் நிர்வாகத்திலும், காந்தி நிதியின் ஆதரவிலும் காந்தீய-சர்வோதய இலக்கியம் மேன்மேலும் விரிவடைந்து வளர்ந்துவரும். மேலும், பூமிதான யக்ஞ இயக்கத்தை விசேஷமாகப் பிரசாரம் செய்யவும் ஸர்வோதய பிரசுராலயத்திற்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

"கதர் மலர்" "ஸர்வோதய"மாக மாறும்

கதர் மலரை இப்போது சர்வ சேவா சங்கம் எடுத்து நடத்துவதால் அதற்கும் அதன் லட்சியத்திற்கும் "ஸர்வோதயம்" என்ற பெயர் மிகப் பொருத்தமாக இருக்கும் என்று பல அன்பர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆதலால் சர்க்கார் அனுமதி கிடைத்தவுடன் "கதர் மலர்" ஸர்வோதயம் என்ற பெயரில் வெளியாகும்.

எனினும், சென்ற நான்கு ஆண்டு ஒன்பது மாதகாலமாக கதர் மலராக அன்பர்களின் மனதில் பதிந்து, அவர்களின் ஆதரவையும் மதிப்பையும் பெற்ற நற்பெயரை விட உத்தேசமில்லை. ஸர்வோதயம் என்ற பெயருடன் 'இத்துடன் கதர் மலர் இணைக்கப்பட்டது' என்றும் பத்திரிகையின் முகப்பில் அச்சிடப்பெறும் என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கதர்  மலர்

மலர் 5 | நந்தன-௵ * ஆனி-௴ | இதழ் 9

★ சுதேசி தர்மம் ★

மகாத்மா காந்தி

சுதேசி என்பது இந்த யுகம் நமக்கு விதித்துள்ள பரம தர்மமாகும். இயற்கையின் விதிகளைப் போலவே தார்மிக விதிகளையும் எவரும் இயற்றவேண்டியதில்லை. அவை தாமே இயங்குவன. ஆனால் அறியாமையினாலோ, வேறு காரணங்களினாலோ மனிதன் அடிக்கடி அவைகளை அசட்டை செய்யவோ, புறக்கணிக்கவோ செய்கிறான். அப்பொழுது தான் அவனுடைய போக்கை உறுதிபெறச் செய்வதற்கு விரதங்கள் தேவையாகின்றன. பழக்கமாகவே சைவ போஜனம் உண்டு வருவோனுக்குத் தன் புலால் மறுப்பை உறுதிப்படுத்துவதற்கு விரதம் எதுவும் தேவையில்லை. ஏனெனில் மாமிச உணவைக் கண்டதும் அவனுக்கு அதில் ஆசை பிறப்பதற்கு மாறாக அருவருப்பே உண்டாகும். சுதேசி தத்துவம் மனிதரிடம் இயற்கையிலேயே அமைந்துள்ளதொன்று. ஆனால் அது இப்பொழுது நமக்கு மறந்தே போய் விட்டது. இதனாலேயே சுதேசியைப்பற்றிய விரதம் இப்பொழுது தேவையாயிருக்கிறது. அதன் பாரமார்த்திக இறுதிப் பொருளில் சுதேசி என்பது இந்த உலகக் கட்டிலிருந்து ஆன்மாவை முற்றிலும் விடுவிப்பதையே குறிக்கும். ஏனெனில் இந்தப் பூத உடல் அதன் இயற்கையான, நிலைத்த வீடாய் இல்லாமல் அதன் முன்னேற்றத்தில் ஒரு தடையாக, மற்ற உயிர்களும் தானும் ஒன்றே என்பதை உணரவிடாமல் தடுப்பதாய் இருக்கிறது. ஆகவே, சுதேசியின் பக்தன் சிருஷ்டி அனைத்திலும் தன்னை ஐக்கியப்படுத்திக்கொள்ளும் முயற்சியில் இந்தப் பூத உடலின் கட்டினின்றும் விடுதலை பெறவே முயலுகிறான்.

சுதேசிக்கு நாம் கூறும் இந்த விளக்கம் சரியென்றால் அதை அனுஷ்டிப்பவன் தன் முதல் கடமையாகத் தன் அண்டை அயலாரின் பணிக்குத் தன்னை அர்ப்பணித்து விடுவான். இதனால் மற்றவர்களின் நலன்களைப் புறக்கணிக்கவும், தேவையானால் அசட்டை செய்யவும் வேண்டியிருக்கும். ஆனால் இந்தப் புறக்கணிப்பும் அசட்டையும் வெளிப் பார்வைக்குத்தான் அவ்வாறு காணப்படும். அண்டை அயலாருக்குச் செய்யப்படும் புனிதமான பணி இயற்கையிலேயே ஒரு பொழுதும் தொலைவிலுள்ளவர்களுக்குத் தீமையாக முடியாது. அவர்களுக்கும் அதனால் நன்மையே விளையும். 'அணுவில் போலவேதான் அண்டத்திலும்' என்பது என்றும் பழுதுபடாத ஒரு தத்துவமாகும். அதை நாம் என்றும் மறவாதிருத்தல் நலம். இதற்கு மாறாக தூரத்துப் பச்சையைக் கண்டு மயங்கிப் பணிபுரியும் நோக்குடன் நாடு நாடாகச் சுற்றித் திரிவோனுடைய ஆசை ஏமாற்றத்தில் முடிவதோடு, அவன் தன் அண்டை அயலாருக்குச் செய்யவேண்டிய கடமையிலும் தவறியவனாகிறான். ஒரு ஸ்தூலமான உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். நான் இருந்துவரும் இடத்தில் என் உறவினரும் என்னை அண்டினவருமான சில அண்டை அயலார் உண்டு. இயற்கையிலேயே அவர்களுக்கு என்னிடம் சில உரிமைகள் உண்டாகையால், அவர்கள் என்னிடமே ஆதரவும் உதவியும் எதிர்பார்க்கிறார்கள். நான் அவர்களையெல்லாம் திடுதொப்பென்று விட்டுவிட்டு தொலைவிலுள்ள ஜனங்களுக்கு சேவை செய்யப் புறப்படுவதாக வைத்துக்கொள்வோம். என் முடிவு என்னைச் சுற்றியுள்ள சிறிய உலகத்தை ஒரு பக்கம் குழப்பத்தில் ஆழ்த்தி விட, என்னுடைய சேவா யாத்திரை அநேகமாக நான் போகும் புதிய இடத்தின் சூழ்நிலையையும் குழப்பவே செய்யும். இவ்வாறு என் அருகாமையில் உள்ளவர்களை அசட்டை செய்தலென்ற மன்னிக்க முடியாத பாவமும், நான் விரும்பாமலிருந்தும் நான் உதவி செய்ய விரும்பிய ஜனங்களுக்கு நேர்ந்த சிரமமுமே நான் சுதேசி தர்மத்தை மீறியதற்கு எனக்குக் கிடைத்த முதல் வெகுமானங்கள்.

"சுதர்மம் அல்லது தன் கடமையைச் செய்துகொண்டே சாதல் சாலச் சிறந்தது:

பரதர்மம் அல்லது பிறருடைய கடமையைச் செய்தல் ஆபத்தாக முடியும்." இதை சுதர்மத்தைப் பற்றிக் கூறுவது சுதேசிக்கும் முற்றிலும் பொருந்தும். ஏனெனில் சுதேசி என்பது நமக்கு மிகவும் அண்மையில் உள்ளவர்களின் விஷயத்தில் நாம் அனுஷ்டிக்க வேண்டிய சுதர்மமே யன்றி வேறல்ல. சுதேசி தர்மத்தை நாம் தவருகப் புரிந்து கொள்ளும் பொழுது தான் அதிலிருந்து தீமை விளைகிறது. உதாரணமாக, என் குடும்பத்தாரைச் சம்பிரமமாக வைக்கவேண்டி நியாய அநியாயம் பாராமல் பணத்தைச் சுரண்டிச் சேர்க்கத் தொடங்குதல் சுதேசி தர்மத்திற்கு முரணனதாகும். நியாயமான உபாயங்களினுல் என் குடும்பத்தாருக்கு நான் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துவதற்கதிகமாக சுதேசி தர்மம் என்னிடமிருந்து வேறெதையும் எதிர்பார்க்கவில்லை. அதைச் செய்வதற்கு நான் செய்யும் முயற்சியின் மூலமாகவே எனக்கு எல்லா தர்மங்களும் தெளிவாகும். சுதேசி தர்மத்தை அனுஷ்டிப்பதனுல் எவருக்கும் யாதொரு தீங்கும் விளையாது. விளையுமானுல், எனக்குத் தூண்டுதலாயிருந்தது சுதர்மமல்ல, அகங்காரமே என்று உணரவேண்டும்.

சுதேசி தர்மத்தை அனுஷ்டிப்பவன் உலக நலனுக்காகத் தன் குடும்பத்தின் நலனைப் புறக்கணிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் எழலாம். இவ்வகையில் மகிழ்ச்சியுடன் அளிக்கப்பட்ட பலி குடும்பத்திற்குச் செய்த தலை சிறந்த சேவையாகக் கருதப்படும். சுதேசியில் சுயநலத்திற்கு இடமேயில்லை. அதில் சுயநலம் இருப்பதாகத் தோன்றுமானுல் அந்த சுயநலத்திற்கும் மிகச் சிறந்த தியாகத்திற்கும் வேற்றுமையிராது. மிகவும் தூய சுதேசியை உலக மனத்திற்கும் செய்த சேவையின் சிகரம் எனத் தகும்.

இவ்வகையில் ஆலோசனை செய்ததன் விளைவாகவே நான் சுதேசித் தத்துவத்தை சமூகத்துறையில் பிரயோகிக்கும்பொழுது கதர் அதன் முக்கியமானதும் இன்றியமையாததுமான பகுதியாகும் என்பதை உணர்ந்தேன். நான் என்னையே கேட்டுக்கொண்டதாவது: "இந்தியாவின் கோடிக்கணக்கான மக்களுக்கு தற்சமயம் மிகவும் தேவையாயிருப்பதும், அவர்கள் அனைவரும் சுளுவாகப் புரிந்துகொண்டு அனுபவிக்கக்கூடியதும், சுலபமாகச் செய்யக்கூடியதும், அரைவயிற்றுச் சோற்றுடன் துன்புறும் நம் நாட்டு மக்கள் உயிர்வாழ உதவக்கூடியதுமான அந்த சேவை யாது?" இந்தக் கேள்விக்கு கதர் அல்லது ராட்டையை எங்கும் பரப்புவதனுல்தான் இவையெல்லாம் கைகூடும் என்ற பதில் கிடைத்தது.

குறிப்பிட்ட அளவு நூலை எப்படியோ நூற்று அதைக்கொண்டு தயாரித்த கதரை உடுத்துவதிலேயே சுதேசி தர்மம் முழுவதும் அடங்கிவிட்டது என்று எண்ணிக்கொள்வதைப் போன்ற பெரும் பிழை வேறு இருக்க முடியாது. சமூகத்தின் விஷயத்தில் சுதேசி தர்மத்தை அனுஷ்டிப்போருக்கு கதரென்பது தவிர்க்கமுடியாத முதல் படியேயாகும். கதரை மட்டும் உடுத்திக்கொண்டு மற்ற எல்லாத் தேவைகளுக்கும் வெளிநாட்டுச் சரக்குகளையே வேண்டியமட்டும் வாங்கி உபயோகிப்பவர்கள் இருக்கிருர்கள். அவர்களை சுதேசி தர்மத்தை அனுசரிப்பவர்களென்று சொல்வதற்கில்லை. அவர்கள் எல்லோரும் செய்யும் ஒன்றைத்தாமும் செய்கிருர்களேயன்றி வேறல்ல. சுதேசி தர்மத்தை அனுஷ்டிப்பவரோ தம் அக்கம்பக்கத்தின் நிலையை கவனித்தறிந்து உள்ளூரிலேயே தயாராகும் பொருள்கள் வெளியிடங்களில் தயாராகும் சரக்கைவிட மட்ட ரகமாகவும் அதிக விலையுள்ளதாகவும் இருந்தபோதிலும், இயன்றபொழுதெல்லாம் உள்ளூர்ச் சரக்கையே வாங்குவதன்மூலம் தம் அண்டை அயலாருக்கு உதவ முயலுவார். அவர் அவைகளில் உள்ள குறைபாடுகளை நீக்க முயலுவாரே தவிர, அவைகளில் குற்றமிருக்கிறதென்று, அவைகளை வாங்குவதை விடுத்து வெளிநாட்டுப் பண்டங்களை வாங்கி உபயோகிக்கமாட்டார்.

ஆனல் சுதேசி தர்மத்திலும் அர்த்தமில்லாத குருட்டுப் பிடிவாதம் காட்டுதல் சரியல்ல. நாம் இந்த ஆபத்திலிருந்து தப்பும் விஷயத்தில் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஒரு பொருள் அந்நிய நாட்டில் தயாராவது என்பதற்காகவே அதை வாங்க மறுத்துவிட்டு நாட்டின் நேரத்தையும் பணத்தையும் இந்நாட்டில் நடைபெற முடியாத தொழில்களை வளர்ப்பதற்குச் செய்யும் முயற்சி கொடிய அறியாமையாவதோடு சுதேசி தத்துவத்திற்கு முற்றிலும் முரணனதுமாகும். சுதேசி தர்மத்தை உண்மையாகப் பின் பற்றுவோன் அன்னிய நாட்டாரை ஒரு பொழுதும் துவேஷிக்க மாட்டான். அவன் உலகத்தில் யாரையுமே தன் விரோதியெனக் கருதான். சுதேசி தத்துவம் துவேஷத்தை வளர்ப்பதற்கெனத் தோன்றியதல்ல. அது மிகவும் புனிதமான அஹிம்சை அல்லது அன்பிலிருந்து எழும் சுயநலமற்ற சேவையைக் குறிக்கும் தத்துவமாகும்.

★ ★ ★

'ராட்டை—தத்துவ விளக்கம்'

127788

காசி - சேவாபுரியில் சர்வோதய சம்மேளனம்

வினேபாஜியின் இரண்டாம் நாள் (14—4—'52) பிரசங்கம்

தேசத்தில் 25 லட்சம் ஏக்கர் நிலம் பூமிதான யக்ஞமாகச் சேகரித்து நிலமில்லாத விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய வேண்டுமென்று சர்வ சேவா சங்கம் தீர்மானம் செய்தது. தீர்மானத்தை சம்மேளனத்தில் ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் படித்தார். பின்னர் வினேபாஜி பூமி தான யக்ஞத்தின் அடிப்படைத் தத்துவத்தை விளக்கி இதைப்பற்றி எழும் பல சந்தேகங்களையும் நீக்கினர். அவர் செய்த பிரசங்கம் மகத்துவமானது. அதை அப்படியே மொழி பெயர்த்து இங்கு கொடுத்திருக்கிறோம்.

நம்முடைய இந்த பூமிதான வேள்வியைத் தொடர்ந்து, நாங்கள் தினமும் ஒரு கிராமத்தில் தங்குகிறோம். நகரமாக இருந்தாலும் சரி, கிராமமாக இருந்தாலும் சரி, இரண்டு இடங்களிலும் சமமான நேரந்தான் தங்குகிறோம். ஊழியர்களுடன் சம்பாஷிக்கவும் விவாதம் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததனல், இரண்டு மூன்று இடங்களில் ஒரு தினத்திற்கு அதிகமாகத் தங்க வேண்டியதாயிற்று. அந்நாட்களைத்தவிர மீதி நாட்களில் சமமாகச் சுற்றிக்கொண்டேயிருந்தேன். நமது பணிவு எந்த அளவுக்கு அதிகரிக்குமோ அந்த அளவு அதிக வெற்றி நமக்குக் கிடைக்கும், நம்முடைய சங்கற்பமும் அந்த அளவுக்கு அதிக மங்களமாக சித்தியாகக்கூடும் என்பது அனுபவத்தில் நான் கண்ட எல்லாவற்றிலும் பெரிதாகும். பணிவின்றி நமது சங்கற்பம் சித்தியுமாகாது, சுத்தியுமாகாது. ஆகையால் நான் பகவானிடம், "விரும்புகிறது நடைபெறட்டும், நான் உனது ஊழியனக இருக்கிறேன்" என்று பிரார்த்தனை செய்கிறேன். முடிவு என்னவாக இருந்தாலும் சரி, மனதில் அதைப்பற்றிய சிந்தனை ஏற்படக்கூடாது என்று கீதை நமக்குக் கற்பித்திருக்கிறது. யாசகம் வாங்குவோருக்கு சில சமயம் அதிகமாகக் கிடைக்கிறது, சில சமயம் குறைவாகக் கிடைக்கிறது என்ற அனுபவம் ஏற்படுகிறது. ஒவ்வொரு நாளும் அவர்களுக்கு சோதனைக் காலமாக இருக்கிறது. உண்மையில் யாசகமும் ஒரு மேலான தர்மம். நான் ஆரம்பித்திருக்கும் வேலை யாசக வேலையே யாகும். "நிலத்தை யாசகம் என்ற முறையில் நான் கேட்கிறதில்லை, உரிமை என்ற முறையில்தான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்" என்று எல்லோரையும் கருத்தில் வைத்து நான் சொன்ன போதிலும், கடைசியில் நான் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். தரித்திர நாராயணன் சார்பில் கேட்கிறேன், ஆகையால் தான் யாசகம் கேட்பதில்லை என்று சொல்கிறேன். ஆனல் என் நோக்கத்தில் எனக்கு இது யாசகமேயாகும். எப்போதாவது ஏதோ காரணத்தினல் எனக்கு உத்வேகம் ஏற்பட்டு விட்டால் இன்றைய தினம் வீணுகிவிட்டது என்று நான் உணர்கிறேன். இதயத்தில் சமத்துவ எண்ணம் இருக்கும்போது இன்றைய தினம் மங்களமாகக் கழிந்தது என்று கருதுகிறேன். ஆகையால் இன்று இங்கே நாம் இருபத்தைந்து லட்சம் ஏக்கர் நிலம் சேர்ப்பது என்று சங்கற்பம் செய்திருக்கிறோம். இது ஒரு மிகப் பெரிய விஷயமாகும். இருபத்தைந்து லட்சம் ஏக்கர் நிலம், நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். ஆனல் எங்கிருந்து கொடுப்போம்? நம்மிடத்திலோ ஒரு அங்குல நிலங்கூட இல்லை. பின்னர், இவ்வளவு நிலம் நிலமில்லாதோருக்குக் கொடுப்பதற்கு நம்மிடம் என்ன பலம் இருக்கிறது? யாரிடமாவது நிலம் இருக்கிறது என்றல் அவர்கள் நாம் தான் என்பதே பலமாகும். நமக்கு விருப்பம் ஏற்பட்டால் அவர்களுக்கும் விருப்பம் ஏற்பட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள். இம்மாதிரி தரித்திர நாராயணனின் சார்பில் நான் நிலம் கேட்கும்போது அவர்களுடன் ஒன்றறக் கலந்தே கேட்கிறேன். தானம் கொடுப்பவர்களிடமிருந்து நிலத்தைப் பெற்றுக்கொள்ளும் பொழுதும் அவர்களுடன் ஒன்றறக் கலந்துவிடுகிறேன். இங்கு தரித்திர நாராயணன், அங்கு பூமி நாராயணன், இருவருக்கும் மத்தியில் இருவரின் நண்பரைப்போன்று நான் இருவருக்கும் பூரண நன்மையை விரும்புகிறேன். இருவரது நன்மையிலும் விரோதம் இருக்கிறது என்று கருதுபவர்கள் சமூகத்திற்கு நன்மை செய்தவராகமாட்டார்கள்.

சர்வோதய ஊழியர்களின் லட்சியம்

சர்வோதய ஊழியர்களின் வாழ்க்கையில், பணிவு இருக்கவேண்டும்; பணிவுடன் கேட்க வேண்டும். நம்முள்ளே அத்யாத்மீக சக்தி இருக்கவேண்டும் என்பது இதன் பொருளாகும். அஹிம்சையை வேலைசெய்ய அனுமதிப்பதும் அகங்காரத்திலிருந்து விடுபட்டு இருப்பதும் என்பதுதான் அத்யாத்மீக சக்தியின் பொருளாகும். அகங்காரம் இருக்குமானால், வேலை நடக்காது; அல்லது குறைவாக நடக்கும்; இல்லையெனில் விபரீதமாகும். நம்முடைய வேலை மிகக் குறைந்த அளவில் நடக்கக்கூடாது; விபரீதமாகவும் போகக்கூடாது. நல்ல முடிவில் பூரண அளவில் நடைபெற வேண்டுமானால் ஆத்ம மலர்ச்சிக்குப் பூரண சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். அகங்காரத்தை அழிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவேண்டும்.

5 கோடி ஏக்கர் வேண்டும்

நான் உத்தரப் பிரதேசத்திற்கு வந்த போது இங்குள்ள இரண்டு மூன்று வேலையில்லாதவர்கள் என்னுடன் சேர்ந்துகொண்டார்கள். அவர்களின் காரணமாகத்தான் இங்கு வேலை நடைபெற்றது. பின் மதுராவில் ஒரு மகாநாடு நடைபெற்றது. அம் மகாநாட்டில் அவர்கள் ஏதோ சங்கற்பம் செய்ய விரும்புகிறார்களென்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் பத்து லட்சம் ஏக்கர் நிலம் தானம் வாங்க சங்கற்பம் செய்வதாக எண்ணியிருந்தார்கள். பத்துலட்சம் அதிகம், ஐந்துலட்சம் ஏக்கர் நிலம் தானம் வாங்குவதாக சங்கற்பம் செய்யுங்கள் என்று நான் அவர்களிடம் கூறினேன். தேசம் முழுவதிலுமிருந்து ஐந்து கோடி ஏக்கர் நிலம் கிடைக்க வேண்டுமென்பது எனது கோரிக்கை. கங்கையும், யமுனையும் பாய்கிற இந்த உத்தரப் பிரதேசமானது தேசத்தின் ஐந்தில் ஒரு பாகம்; ஆகையால், இந்தப் பிரதேசத்திலிருந்து ஒரு கோடி ஏக்கர் நிலம் கிடைக்கவேண்டும் என்று விரும்புகிறேன். தேசம் முழுவதிலும் சுமார் முப்பது கோடி ஏக்கர் நிலம் விவசாயத்தின் கீழ் இருக்கிறது என்று என் மனதில் ஒரு கணக்கிட்டு வைத்திருக்கிறேன். ஒவ்வொரு குடும்பத்திலும் ஐந்து நபர் இருக்கிறார்களென்றால் ஆறாவது நபர் தரித்திர நாராயணன் என்று கருதவேண்டும். அதாவது, மேலெழுந்தவாரியாகக் கணக்கிட்டால் ஆறில் ஒரு பங்கு ஐந்துகோடி ஏக்கர் நிலமாகும். இந்தக் கணக்கின் பிரகாரம் நான் ஐந்து கோடி ஏக்கர் கோரியிருந்தேன். நம்முடைய சாஸ்திரங்களிலும் ஆறில் ஒரு பாகம் அரசனுக்குக் கொடுக்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆறில் ஒரு பாகம் அரசன் வாங்கிக்கொள்ளவேண்டுமானால், இன்று இந்திய நாட்டை ஆளுபவர் யார்? தரித்திர நாராயணனே இந்தியாவின் அரசராவார், அவருக்கு ஆறில் ஒருபாகம் கொடுக்கவேண்டும் என்று தெரிந்து கொள்வோமானால், அவர்களுக்காகக் கோரியிருக்கும் ஐந்து கோடி ஏக்கர் நிலம் உசிதமானது என்று புலனாகும். குர்ரானில் ஒரு கதை இருக்கிறது. மகம்மது நபி தன்னுடைய நண்பர்களுடன் தனியாக காட்டில் இருந்தபோது, எதிரிகளினால் ஆக்கிரமிப்பு ஏற்படுவதாக இருந்தது. அப்போது அவருடைய நண்பர்கள், "மகமது, எதிரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது, நாமோ மூவர்தான் இருக்கிறோம்" என்று சொன்னார்கள். "நாம் மூவர்மட்டும் அல்ல, நான்காவது நபர் ஒருவரும் இருக்கிறார். கண்ணுக்குத்தெரிவதில்லை; ஆனால் அவர் சக்தி வாய்ந்தவர்" என்று நபி பதிலளித்தார். ஆகையால் நான் ஒவ்வொரு இடத்திலும், "நீங்கள் ஐந்து பேர் இருக்கிறீர்களென்றால் ஆறாவது நபர் ஒருவரும் இருக்கிறார், அவர் சக்திமான்" என்று தெரிவிக்கிறேன்.

இம்மாதிரி இந்தியா முழுவதிலுமிருந்து ஐந்து கோடி ஏக்கர் நிலமும், உத்தரப் பிரதேசத்திலிருந்து ஒரு கோடி ஏக்கர் நிலமும் கிடைக்கவேண்டுமென்பது எனது கோரிக்கையாகும். முதல் தவணையென்ற முறையில் மதுராவில் உத்தரப் பிரதேச வாசிகளைக் கொண்டு ஐந்து லட்சம் ஏக்கர் நிலம் தானம் வாங்குவதாக சங்கற்பம் செய்வித்தேன். சங்கற்பம் எப்பொழுதும் வரையறுக்கப்பட வேண்டும்.

உத்தரப் பிரதேசத்தில் 5 லட்சம் ஏக்கர்

என்னுடைய இந்த ஐந்து லட்சம் ஏக்கர் சங்கற்பத்திற்கு வேறொரு கணக்கும் இருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான கிராமங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஐந்து ஏக்கர் நிலம் பெற முடிந்தால் அங்கு ஒரு சர்வோதய குடும்பத்தைக் குடியேற்றமுடியும். இம்முறையில் இந்த ஒரு லட்சம் கிராமங்களிலிருந்தும் ஐந்து லட்சம் ஏக்கர் நிலம் கிடைக்கக்கூடும். இதனால் பிரசினை தீர்ந்துவிடுகிறது என்பதல்ல. பிரசினையை ஈசுவரன் தான் தீர்க்கக்கூடும். ஒரு லட்சம் கிராமங்களிலும் ஒவ்வொரு சர்வோதயக் குடும்பத்தைக் குடியேற்றிவிட்டால் அதன் மூலம் ஒரு நல்ல சூழ்நிலை

ஏற்படும். சகோதரர்களே, நீங்கள் என்னை உங்கள் பையனாகவோ சகோதரனாகவோ கருதுங்கள் என்று அனைவருக்கும் எடுத்துரைத்தேன். இதன் பயனாக உத்தரப் பிரதேசத்திலிருந்து இதுவரை சுமார் எழுபத்தைந்து ஆயிரம் ஏக்கர் நிலமும், மற்ற மாகாணங்களிலிருந்து இருபத்தைந்து ஆயிரம் ஏக்கர் நிலமும், ஆக மொத்தம் இது வரையில் ஒரு லட்சம் ஏக்கர் நிலம் எனக்குக் கிடைத்திருக்கிறது.

ஜனாதிபதியின் ஆசீர்வாதம்

கிடைத்த நிலம் இவ்வளவுதான். ஆனால் இத்துடன் கிடைத்திருக்கும் அனுதாபத்தின் மகத்துவமோ அதிகமாகும். கடைசியில்,இம் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியும் இந்த பூமிதான வேள்வி இயக்கத்தில் அனைவரும் உதவி செய்ய வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அவர்கள் ஒரு 'பட்சம்' கூடக் கொண்டாடினார்கள். நான் டெல்லியிலிருந்தபோது நம்முடைய ஜனாதிபதியுங்கூட, தனது சார்பில், இந்த வேள்விக்கு நிலம் கொடுத்தார். நான் இதை அவருடைய ஆசீர்வாதமாகக் கருதுகிறேன். இங்கு வந்திருப்பவர்களும் ஏதாவது தானம் கொடுக்க வேண்டுமென்று பாபா ராகவதாஸ் இன்று கூறினார். பாபா ராகவதாஸ் தானும் தானம் கொடுத்திருக்கிறார். அவரிடம் அப்படி ஒன்றுமில்லை. இருந்த போதிலும், சட்டசபை அங்கத்தினர் என்ற முறையில் சென்ற நாட்களில் சம்பளம் என்ற வகையில் கிடைத்த பணத்திலிருந்து நிலம் வாங்கிக் கொடுப்பதாக சங்கற்பம செய்தார். ரிஷிக்குச் சமமான, பூஜிக்கத்தக்க, ஸ்ரீ டண்டன்ஜியும் தன்னுடைய பூரண ஆசீர்வாதத்தை இன்று நமக்கு அளித்திருக்கிறார். அவர் தனது திட்டத்தையும் மகாநாட்டில் சமர்ப்பித்துள்ளார். இரண்டு வருடங்களுக்கு முன் அவர் பவனார் வந்திருந்த போதும் என்னிடம் இத் திட்டத்தைக் கூறினார். அவருடைய திட்டம் எனக்குப் பிடித்திருக்கிறது. அந்த மாதிரியில் தான் நாங்கள் பவனாரில் வேலை செய்துகொண்டிருக்கிறோம். இங்கு உத்தரப் பிரதேசத்தில் நடைபெறுகிற வேலை அவரது ஆலோசனையின் கீழ் நடைபெற வேண்டுமென்பது என் விருப்பம்.

ஒரு கம்யூனிஸ்டு பூதானம் செய்தார்

இம்மாதிரி, இவ்வேலைக்கு நமது ஜனாதிபதியின் ஆசீர்வாதம் நமக்குக் கிடைத்திருக்கிறது. பண்டித ஜவாஹர்லால்ஜியின் அனுதாபமும் நமக்கு இருக்கிறது. கிஸான் மஜ்தூர் பிரஜா கட்சியின் தலைவரான ஸ்ரீ கிருபலானிஜியின் பூரண அனுதாபமும் நமக்கு இருக்கிறது. அவருடைய அநேக நண்பர்கள் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். சோஷலிஸ்ட் சகோதரர்களும் அநேக இடங்களில் நமக்குப் பூரண ஒத்துழைப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களில் பொறுப்பு வாய்ந்த தொண்டர் ஒருவர் இரண்டு மாதம் வரை எங்களுடன் இருந்தார். கம்யூனிஸ்டு சகோதரர்களும் நம்முடைய இந்த வேலைக்கு அனுதாபம் தெரிவித்திருக்கிறார்கள். ஒன்றிரண்டு இடங்களில் அவர்கள் உபசாரப் பத்திரமும் வாசித்தளித்தார்கள். ஒரு இடத்தில் கம்யூனிஸ்டு சகோதரர் ஒருவரிடமிருந்து எங்களுக்கு பூமிதானம் கிடைத்தது. கம்யூனிஸ்டு சகோதரர்களின் இதயத்தில் உண்மையும் சேவா மனப்பான்மையும் இருப்பதால், அவர்களையும் நம்முடன் சேர்த்துக்கொள்ளக் கூடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

சர்வ சேவா சங்கத்தின் தீர்மானம்

சர்வ சேவா சங்கம் ஏற்றுக்கொண்ட தீர்மானத்தை நீங்கள் தெரிந்துகொள்வதற்காக உங்கள்முன் அது சமர்ப்பிக்கப்படுகிறது. ஆகையால்தான் நான் விரிவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நேரிடையாக நடைமுறை வேலையைச் செய்யும் ஸ்தாபனம் சர்வ சேவா சங்கம். அது தேசத்தின் எல்லாப் பிரசினைகளைப் பற்றியும் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. அரசியல் சம்பந்தமான காரியங்களில், தான் பங்கெடுத்துக் கொள்ளாவிட்டாலும், அது தனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறது. சர்வ சேவா சங்கமானது யாராவது ஒருவருடைய பலத்தைக்கொண்டு மட்டும் வேலை செய்ய முடியாது. அதற்கு எல்லோருடைய பலத்தின் ஆதாரமும் வேண்டும். அது தனியாக எனது பலத்தை மட்டும் கொண்டோ அல்லது அதன் காரியதரிசியினுடைய பலத்தை மட்டும் கொண்டோ வேலை செய்ய இயலாது. சர்வ சேவா சங்கத்தின் அங்கத்தினர்களுடைய பலத்தை மட்டும் கொண்டோ வேலை செய்ய முடியாது. ஆனால் அது இந்தியாவிலுள்ள அனைவரின் பலத்தையும் ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. இந்தியாவினுடைய பலம் தரித்திர நாராயணனைச் சேர்ந்ததாகும், அல்லது ஸ்ரீமந் நாராயணனைச் சேர்ந்ததாகும். அனைவருள்ளும் ஆண்டவன் இருக்கிறார் என்று ரிஷிகள் நமக்குப் போதித்திருக்கிறார்கள். ஆகையால் அவர், தரித்திர நாராயணர்களின் உள்ளிருப்பதைப் போன்றே பணக்காரர்களுள்ளும் இருக்கிறார்.

அரசியல் சம்பந்தமற்ற அன்பின் சங்கற்பம்

நாம் இங்கு எந்த விதமான தீர்மானமும் நிறைவேற்றுவதில்லை. உங்களின் முன் சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் தீர்மானம் சர்வ சேவா சங்கத்தினுடையதாகும். இதற்கு எந்தவிதமான அரசியல் சம்பந்தமும் கிடையாது. இது அன்பின் ஒரு சங்கற்பமாகும். ஆகையால், இங்கிருந்து சென்று நாம் செய்யவேண்டிய வேலைக்கு அனைவரின் ஒத்துழைப்பையும் நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். பஞ்சாயத்துக்கள், சர்க்கார் ஊழியர்கள், எல்லாவிதமான சமூக ஊழியர் முதலிய அனைவரின் ஒத்துழைப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் பலாத்காரத்தை மட்டும் தவிர்க்க வேண்டும். ஆத்மீகத் தூண்டுதலை நான் தவிர்க்க வேண்டுமென்று கூறவில்லை. ஏனென்றால் ஆத்மீகத் தூண்டுதலின்றி இந்த வேலையைச் செய்ய வேண்டியிருக்குமானால் நான் இதை விட்டுவிடவேண்டும். "நீங்கள் எங்கு செல்கிறீர்களோ அங்கு உங்கள் முன்னிலையில் அதிக வேலை நடக்கிறது" என்று ஜனங்கள் என்னிடம் கூறுகிறார்கள். நான் இருப்பதன் காரணமாக ஜனங்களுக்கு எனது ஆத்மீகத் தூண்டுதல் ஏற்படுமானால் அஹிம்சையிலும் அவ்வளவு தூண்டும் சக்தி இருக்கிறது.

தானம் என்பது சமமான பங்கீடே

சகோதரர் ஒருவர் 'தானம்' என்ற வார்த்தையை ஆட்சேபித்தார். தானம் என்ற வார்த்தையில் தானம் பெற்றுக்கொள்பவர்களின் சுயமரியாதையைக் குறைக்கக் கூடிய பொருள் இருப்பதாக அவருக்குத் தோன்றுகிறது. ஆனால் அது அப்படியல்ல. தானம் கொடுத்தல் என்பது சமமாகப் பங்கிடுதல் என்று நேற்று என்னுடைய பிரசங்கத்தில் கூறினேன். தத்துவத்தின் சாரத்தை அறிந்தவர்கள் வார்த்தைகளின் சக்தியை குறைப்பதில்லை, அதிகரிக்கச் செய்கிறார்கள். நாம் பழைய வார்த்தைகளை விட்டுவிடுகிறோம், ஆனால் புதிய வார்த்தை ஒன்றையும் சிருஷ்டிப்பதில்லை. தானம், கருணை, பரோபகாரம், சந்நியாசம், வைராக்கியம் முதலான வார்த்தைகள் பிடிக்காதவர்களுக்கு அவற்றின் பொருளை துர்ப்பிரயோகம் செய்வதற்கு அதிகாரம் உண்டு. அதேபோல, அவற்றிற்குப் புதிய பொருளை ஊட்டுவதற்கு நமக்கும் ஏன் அதிகாரமில்லை? ஒவ்வொரு வார்த்தையாக நாம் விட்டுவிட்டோமானால் நம்முடைய சாஸ்திரமே சூனியமாகிவிடும். பழைய வார்த்தைகளுக்கு கீதை புதிய அர்த்தத்தைக் கொடுத்திருக்கிறது. தானம் என்ற வார்த்தையில் புதிய கருத்தைப் புகுத்தவேண்டிய அவசியம். நமது சாஸ்திரக்காரர்களும் இப்படிப் புதிய கருத்தை அதில் புகுத்தியிருக்கிறார்கள். தானம் என்றால் சமமாகப் பகிர்தல் என்று சங்கராச்சாரியர் பொருள் கூறியிருக்கிறார். ஆயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முன்பு சங்கராச்சாரியர், பொருளாதார சாஸ்திர நிபுணராக இல்லாத போது இந்த அர்த்தத்தை எழுதியிருக்கிறார். குரு பரம்பரையின் மூலமாக அவருக்குக் கிடைத்த ஞானத்தை அவர் வெளியிட்டிருக்கிறார். தானம் தினசரிக் கடமையென்று நம்மிடம் கூறப்பட்டிருக்கிறது. பணம் கால்பந்தைப் போன்று ஒருவரிடமிருந்து உடனே மற்றொருவரிடம் போகவேண்டும். இம்மாதிரி தினசரி வேலையினால் சமபாகம் ஏற்படவேண்டும். இம்மாதிரி உத்தமமான கருத்துக்கள் நிறைந்திருக்கும் நம்முடைய வார்த்தைகளை நாம் இழப்போமானால் இந்த பாரத பூமியில் நாம் ஒரு வேலையும் செய்யமுடியாது. தானம் என்ற வார்த்தையிலிருந்து கேவலம் என்ற கருத்து மனதுக்குத் தோன்றுமானால் அந்தக் குற்றம் அந்த வார்த்தையைச் சாராது, நம்முடைய பண்பைத்தான் சாரும். மேலும், அது ஞானம் இல்லாததன் குற்றமே. வேள்வி, தானம், தவம் இம் மூன்றும் எப்பொழுதும் செய்யத் தகுந்தவை என்று கீதை கூறியிருக்கிறது. இந்த மூன்று வார்த்தைகளில் ஒவ்வொன்றிலும் நீங்கள் ஏதாவது குற்றம் காணக்கூடும். இதுபோன்று இம் மூன்று கடமைகளையும் வாழ்க்கையிலிருந்து அகற்றிவிட விரும்பினால் இந்தியாவில் நீங்கள் எந்த வேலையும் செய்யமுடியாது. இங்கு வேலை செய்ய முடிந்தவர்கள் யாவரும் இங்குள்ள பண்புடன் ஒன்றாக முடிந்தது. ஆகையால் தான் அவர்களால் வேலைசெய்ய இயன்றது. காந்திஜி நமக்குக் கொடுத்த வார்த்தைகள் யாவற்றையும் பழைய பண்பிலிருந்தே ஆராய்ந்து கொடுத்திருக்கிறார். இம்மாதிரியே திலகர், சங்கராச்சாரியர், ராமானுஜர் முதலியவர்களும் கொடுத்திருக்கிறார்கள். ஞானேஸ்வரரும் கீதையை ஆதாரமாகக் கொண்டார். அவர் அக்காலத்திய புரட்சிகரமான பெரிய அவதார புருஷராக இருந்தார். அவரை நாம் நினைக்கவேண்டும். இன்றும் காந்திஜி, திலகர், அரவிந்தர் முதலிய அனைவருக்கும் கீதையினால் தான் சக்தி கிடைத்திருக்கிறது. பழைய வார்த்தைகளை இழக்கக்கூடாது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

நமது அகங்காரம் நீங்கவேண்டும்

இப்போது உங்கள் முன் சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் தீர்மானத்தை வெற்றியடையச் செய்வதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் அவசியமாகும். இவ்வேலை எப்படி வெற்றியடையும் என்ற சந்தேகம் யாருக்காவது இருக்கலாம். நமக்கு ஒரு நிச்சயமான வேலை கிடைத்திருக்கிறது. நம்முடைய அகங்காரம் முழுவதும் விட்டுவிடும் போதுதான் இவ்வேலையை நாம் வெற்றியடையச் செய்யக்கூடும். பகவான் எனக்கு இவ்வேலையை ஒப்படைத்திருக்கிறாரென்றால், என்னை இவ்வேலைக்குத் தகுதியுடையவனாகச் செய்யவேண்டுமென்றும் நம்மனைவரையும் அகந்தையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்றும் நான் அவரிடம் பிரார்த்தனை செய்கிறேன். நம் அக்கம் பக்கத்திலுள்ள அனைவரின் ஒத்துழைப்பையும் இந்த வேலைக்கு நாம் பெறவேண்டும். அனைவரின் கௌரவத்தையும் உயர்த்தவேண்டும். யாருடைய கௌரவத்தையும் குறைக்கக் கூடாது. வாக்கில் பணிவு இருக்கவேண்டும். முழு கவனமும் செலுத்தாமல் இவ்வேலை நடைபெறாது. ஆகையால் முழு நேரமும் வேலை செய்ய வேண்டும். நான் தினமும் கடிதப் போக்குவரத்து முதலிய மற்ற வேலைகள் செய்கிறேனென்றாலும், பூமிதான வேள்வியில் முழு கவனமும் காட்டுகிறேன். நான் தினமும் பேசவேண்டியிருக்கிறது. தினமும் புதிது புதிதாக எங்கிருந்து தோன்றுகிறது என்று எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. கேட்பவர்களுக்கும் ஆச்சரியமாகத்தான் இருக்கும். நிலத்தில் ஒரு விதை விதைத்தால் அதிலிருந்து விதவிதமான பழங்கள் கிடைப்பதைப் போன்று, இந்த விதையினாலும் எனக்குப் புதிய சுவை கிடைத்துக்கொண்டிருக்கிறது. அனைவருக்கும் இம்மாதிரி மகிழ்ச்சி கிடைக்கக்கூடும். அகந்தையை விட்டுவிட்டு இதில் ஈடுபடவேண்டியது அவசியம்.

முழு யோகசக்தியுடன் ஈடுபடவேண்டும்

இவ்வேலையைச் செய்வதற்காக நம்மிடம் ஏற்கெனவேயுள்ள வேலையை விட்டுவிட வேண்டுமென்பதல்ல. நாம் சாதம் சாப்பிடுவதையோ, உடை அணிவதையோ, தூங்குவதையோ விடுவதில்லை. இவை யாவும் தினசரி நடந்துகொண்டிருக்கின்றன. நாம் தினமும் நூல் நூற்கிறோம். இன்று நாம் செய்துகொண்டிருக்கும் வேலையைப் பூரணமாகச் செய்வதற்காக அவைகளை விட்டுவிட வேண்டியதில்லை. ஆனால் இதை நாம் ஓய்வு நேர வேலை என்று கருதிச் செய்தால் வேலை நடைபெறாது. ஆழ்ந்த தூக்கத்திலும் நம் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்க வேண்டும். ஆழ்ந்த தூக்கம் வரவில்லையானால் நம் வேலை சரியாக நடக்கவில்லை என்று கருதவேண்டும். முழு யோக சக்தியுடன் நாம் இதில் ஈடுபட வேண்டும். சென்ற தடவை நான் டில்லியிலிருந்து கிளம்பியபோது, காய்ச்சலுடன் புறப்பட்டேன். மூன்று தினங்களுக்குப் பிறகு காய்ச்சல் நீங்கிவிட்டது. அப்போது. எனக்கு அதிசயமான ஒரு அனுபவம் கிடைத்தது. ஜனங்களுக்கும் ஆச்சரியம் ஏற்பட்டது. முதலில் யாருக்கும் அந்த காய்ச்சலைப் பற்றிய எண்ணம் இல்லை. எனக்கும் இல்லை. பிறகு தான் தெரிந்தது. டில்லி வாசிகளுக்கு விஷயம் தெரிந்தபோது அங்கிருந்து டாக்டர் வந்தார். அவர் கொயினா மாத்திரை உட்கொள்ளும்படி ஆலோசனை கூறினார். யாருக்கு எந்த தேவதையின்மீது பக்தி இருக்கிறதோ அவருக்கு அந்த தேவதையின் நினைவு வருகிறது. எந்த விதமான மருந்தும் உட்கொள்ளாமலேயே காய்ச்சல் நீங்கிவிட்டது. காய்ச்சல் மூன்று நாள் விருந்தாளி, அது மூன்று தினங்களுக்குப் பிறகு நீங்கிவிடும் என்று நான் சொல்லியிருந்தேன். ஜனங்கள் என்னை ஓய்வு எடுத்துக்கொள்ளும்படிக் கூறினார்கள். ஆனால் நடப்பதே எனக்கு ஓய்வாக இருந்தது. ஏனென்றால் நான் ஈடுபட்டிருந்த வேலையில் ஒன்றறக் கலந்திருந்தேன்.

பகிஷ்காரத்தின் மகத்துவம்

நம்முடைய இந்தத் தீர்மானத்திலுள்ள பகிஷ்காரத்திட்டம் மகத்துவம் பொருந்தியது. நிலத்தைப் பகிர்ந்து கொடுப்பதனாலேயே வேலை நடைபெற்றுவிடுமா என்று ஜனங்கள் என்னைக் கேட்கிறார்கள். நிலம்தான் நமது வாசஸ்தலம் என்று நான் கூறுகிறேன். வாழ்க்கையின் ஆதாரமாக இருந்தபோதிலும் நிலத்தினால் மட்டும் வேலை நடைபெற்றுவிடாது. விவசாயத்துடன் கிராமக் கைத்தொழில்களும் நமக்கு வேண்டும். ஜனங்களனைவரும் விவசாயம் செய்ய ஆரம்பித்துவிட்டால் மற்ற தொழில்கள் குறையும் என்ற பிரச்னையை ஸ்ரீ பாட்டீல் எழுப்பினர். கிராமத்திலிருக்கும் எண்ணெ ஆட்டுவோர், நெய்வோர், கொல்லர், செருப்புத் தைப்போர் முதலியவர்களுக்கு நிலம் கொடுக்க வேண்டியதில்லை என்று நான் சொல்கிறேன். இன்று நிலமில்லாமல் விவசாயத் தொழில் செய்து கொண்டிருக்கும் ஏழைகளுக்கு நிலம் கொடுக்க வேண்டும். விவசாயம் செய்யத் தெரிந்திருந்தும், சில சமயம் கூலி கிடைத்தும் சில சமயம் கூலி

கர்மத்தின் மூலம் சமூக சேவையும் ஆத்ம லாபமும்

விநோபாஜியின் பிரார்த்தனைப் பிரசங்கம்

சேவாபுரி சர்வோதய சம்மேளனத்தில் ஆச்சாரிய கிருபலானி தனது வரவேற்புரையில் சமூக சேவையிலிருந்து ஆத்ம சாதனத்தை வேறுபட்டதாகக் குறிப்பிட்டுப் பேசினர். ஒரே கர்மத்தில் சமூக சேவையும் ஆத்ம மலர்ச்சியும் அடங்கியிருப்பதை ஸ்ரீ விநோபாஜி, 14—4—'52-ல் மாலை, தனது பிரார்த்தனைப் பிரசங்கத்தில் விளக்கினர். அதன் மொழி பெயர்ப்பு.

நேற்று கிருபலானி அவர்கள் நமக்குக் கூறியவற்றில் சில அடிப்படையான விஷயங்கள் இருக்கின்றன. வாழ்க்கை, லட்சியம் இவை இரண்டையும் நோக்கமாகக்கொண்டு அவைகளைச் சிந்திப்பது அவசியம். நேற்று அவர் கூறியதைப் போன்றே அடிக்கடி அவ்விஷயத்தை கூறி வந்திருக்கிறார். அவருக்கு அந்த விஷயம் மிகவும் மகத்துவம் பொருந்தியதாகத் தோன்றுவதுதான் இதற்குக் காரணம். நாமும் பரந்த நோக்குடன் அதை ஆலோசிக்கும்போது அது மகத்துவம் பொருந்தியதாகத்தா னிருக்கிறது. நாம் செய்துகொண்டிருக்கும் வேலையின் உட்கருத்தைப் புரிந்துகொள்வதன்மூலம் இந்த விஷயம் மிகவும் நன்றாகப் புரியக்கூடும். நேற்று எனது பிரசங்கத்தில் நாம் 'லட்டுப் பிரியர்கள்' என்று தெரிவித்தேன். லட்டுப்பிரியர்கள் மட்டுமல்ல, சந்தோஷமும் கொடுக்கக் கூடியவர்களாவோம். நமது கணபதி சந்தோஷம் ஆரோக்கியம் இரண்டையும் கொடுக்கக்கூடியவர்.

பாஷைகளில் உரித்தான சிறப்புள்ள சில வார்த்தைகள் இருக்கின்றன. வாழ்க்கையைத் தூய்மைப்படுத்துவதற்கும் சப்தத்தின் இனிமைக்காகவும் வார்த்தைகளைத் தேர்ந்தெடுக்கவேண்டிய அவசியம் யாருக்கு ஏற்படுகிறதோ அவர்கள் வேறெந்த பாஷையிலும் அவற்றை மொழி பெயர்க்க இயலாது என்று அறிகிறார்கள். 'இஸ்லாம்' என்ற வார்த்தையை உதாரணத்திற்காக எடுத்துக் கொள்ளலாம். அந்த வார்த்தையில் அமைதி, எளிமை என்ற இரண்டு கருத்துக்களும் வந்து விடுகின்றன. அடைக்கலம் அமைதி என்ற இரண்டு வார்த்தைகளின் சேர்க்கையினல் இஸ்லாம் என்ற வார்த்தை உண்டானது. நான் ஒரு உவமையற்ற தனிச்சிறப்பான வார்த்தையின் உதாரணம் கூறினேன். அது போன்றே நம்முடைய பாஷையிலும் ஆரோக்கியம் என்ற சொல், சரீர மானஸீக இரண்டு ஆரோக்கியத்தையும் குறிக்கக்கூடிய வார்த்தையாகும். இம்மாதிரியான சொற்கள் மற்ற

காசி - சேவாபுரியில் சர்வோதய சம்மேளனம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்காமலும் இருப்பவருக்கு நிலம் கொடுக்கவேண்டும். இம்மாதிரி ஒரு வரையறை ஏற்படுத்தவில்லையானல் நம்முடைய பிரதம மந்திரியுங்கூட நிலம் வேண்டுமென்று கோரக்கூடும்.

நகரங்கள் ஒரு நாள் பாழடைந்து போகும்

என் மனதிலிருக்கும் இன்னொரு விஷயத்தையும் நான் மறைக்க விரும்பவில்லை. விவசாயம் செய்வதன்மூலம் ஒவ்வொருவருக்கும் இயற்கையுடன் தொடர்பு ஏற்படவேண்டும். இது ஒவ்வொருவரின் கடமையாகும். ஒவ்வொரு மனிதரும் எப்போதும் ஒரே வேலையைத்தான் செய்துகொண் டிருக்கவேண்டும் என்று இருத்தல் கூடாது. இதைப்பற்றி இன்று டண்டன்ஜி கூறியதைக் கேட்டு நான் சந்தோஷம் அடைந்தேன். அவர் சொன்னதைப் போன்று ஒவ்வொரு வீட்டிற்குப் பக்கத்திலும் நிலம் இருக்கவேண்டுமென்று நானும் விரும்புகிறேன். அந்த நிலத்தில் அவ்வீட்டிலுள்ள ஜனங்களின் மல மூத்திரத்தை உரமாக உபயோகப்படுத்துவதற்கு வசதி இருக்கவேண்டும். அனைவரும் இவ்விதம் விவசாயம் செய்யவேண்டும். இன்றைய நகரங்கள் ஒரு நாளைக்கு பாழடைந்தவையாக இருக்கும் என்று டண்டன்ஜி தன் நம்பிக்கையைத் தெரிவித்தார். அவருடைய இந்த நம்பிக்கைக்கு வேதத்தில் ஆதாரம் இருக்கிறது. வேதத்தில் இந்திரனுக்கு 'புரந்தரன்' என்ற பெயர் இருக்கிறது. புரந்தரன் என்பதற்கு 'நகரத்தை அழிப்பவன்' என்று பொருளாகும். வேதத்தின் இந்த சங்கற்பம் பூர்த்தியாகும் காலம் ஒன்று வரும். ★ ★ ★

பாஷைகளில் குறைவாக இருக்கும். சம்ஸ்கிருதத்திலுள்ள ஆத்மா என்ற ஒரே வார்த்தை சரீரம், புத்தி, மனம், ஆத்மா முதலிய எல்லாவற்றையும் குறிப்பிடுகிறது.

வாழ்க்கையின் நோக்கம்

வேத சாஸ்திரமும், தர்க்க சாஸ்திரமும் அதனதன் பரிபாஷையில் ஆத்மா என்ற சொல்லைத் தனித்தனியான அர்த்தங்களில் உபயோகிக்கின்றன. வாழ்க்கையின் நோக்கம் அதனுள் அடங்கியிருக்கிறது. சித்தத்தை சுத்தப்படுத்துவதற்கு ஒரு சாதனத்தையும், ஆத்மாவைச் சார்ந்திருப்பதற்கு மற்றொரு சாதனத்தையும், சமூக சேவைக்கு மூன்றாவது சாதனத்தையும் நாம் சொன்னால் வாழ்க்கையில் ஒரு ஆனந்தம் ஏற்படாது. அது சின்னபின்னமாகிவிடும். இம்மாதிரி பெரும்பாலும் நடைபெறுகிறது. மூன்று தேவதைகளுக்கும் வெவ்வேறு மூன்று சாதனங்களை உபயோகிப்பதனால் அவர்களுக்கு அந்த சாதனங்களினால் சமாதானம் ஏற்படுகிறதில்லை. ‘சமூக நியாயத்திற்காக நாம் சர்வோதயத்தை சாதனை செய்யவேண்டும், அதன் கருத்தையும் புரிந்துகொள்ளவேண்டும்; ஆனால் சித்தத்தை சுத்தப்படுத்துவதற்கு சர்வோதயம் அவசியமில்லை, அதற்கு அரவிந்த ஆசிரமத்திற்கோ அல்லது ரமண மகரிஷி ஆசிரமத்திற்கோ செல்லவேண்டும்’ என்று யாராவது கூறினால் அது சரியாகாது. ஏனென்றால், இரண்டும் தனித்தனியான சாதனைகள் என்ற முக்கியத்துவம் இதிலடங்கியிருக்கிறது. இது முக்கியத்துவமே யாகாது. ஏதாவது விசேஷ சாதனைகள்செய்யவேண்டியிருந்தால் தனிமையான வாழ்க்கையில் செய்யவேண்டும் என்ற முக்கியத்துவம் பழய காலத்திலிருந்து நடந்து வந்திருக்கிறது. அதில் எந்தவிதமான சாரமும் இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால், அதிகமாக ஆலோசனை செய்ததில், என்னுடைய மனத்திற்கு இதனால் சமாதானம் ஏற்படுகிறதில்லை யென்பதை அனுபவத்தில் கண்டேன். இரண்டு மூன்று பொருள்களுக்காக நான் இரண்டு மூன்று சாதனைகள் செய்ய ஆரம்பித்தால் அந்நிலைமையில் சமமான சாதனை ஏற்படாது. கீதை இப்படிக் கூறவில்லை. என்னுடைய கருத்துக்கு எட்டிய வரையில் இந்தியப் பரம்பரை முழுதும், வேத இலக்கியங்களும் இக் கருத்தை எதிர்க்கின்றன என்று தெரிகிறது.

தர்ம மார்க்கம் கூறப்பட்டதல்ல

ஏதாவது விசேஷ காரணத்திற்காக நாம் நம்முடைய இடத்தில் மாறுதல் செய்கிறோம். ஆரோக்கியத்திற்காக நாம் ஒரு இடத்தை விட்டு விட்டு மற்றொரு இடத்திற்குப் போவதைப் போன்று ஏதாவது விசேஷ காரணத்திற்காக மனிதனுக்கு விசேஷ சாதனை செய்யவேண்டி நேரிட்டால் அது புரியும். வாழ்க்கையின் சாதனை இரண்டு மூன்று விதங்களாகி சின்னபின்னமடைந்து விடக்கூடாது. ஒரே சாதனை எல்லாவற்றிற்கும் இருக்க வேண்டும். ஈஸ்வர சிருஷ்டியில் சரீரம், மனம், ஆத்மா யாவும் ஒரு ரூபமாக இருக்கிறது. அவற்றை அறிவதற்கு சாதனையும் ஒருமுகமாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் ஆனந்தத்தை நாம் அடையலாம். மஹாபாரதத்தை எழுதிய வியாசர் கடைசி மூன்று சுலோகங்களில் தன்னைப்பற்றி வெளிப்படுத்துகிறார். “என் வாழ்நாள் முழுவதும் சத்தமிட்டுக்கொண் டிருந்தேன், ஜனங்களுக்கு ஏன் புரியவில்லை?” என்று சொன்னார். நீங்கள் பொருளையும், பலனையும் விரும்புகிறீர்களல்லவா? அவை தர்மத்தினால்தான் சித்தியாகின்றன. அப்படியானால் நீங்கள் தர்ம சாதனை ஏன் செய்வதில்லை? நீங்கள் ஏன் தர்மத்தை ஏற்றுக்கொள்ளுவதில்லை. உங்களுக்கு பொருளும் பலனும் தேவையாக இருக்கிறது. அதை அடைவதற்காக நாங்கள் கூறிய சாதனை பொருள், பலன் இரண்டுடன் தர்ம வழியிலும் தங்களை அழைத்துச்செல்லக்கூடியதாகும் என்று நாங்கள் கருதுகிறோம். தர்ம வழி இல்லையானால் மனிதனின் வாழ்க்கை பல கூறுகளாகி விடுகிறது. தர்ம வழியைக் கடைப்பிடித்தால் சமூகசேவை நடைபெறாது, சமூக சேவை செய்வதினால் தர்ம வழியைக் கடைப்பிடிக்க முடியாது என்று ஆலோசனை செய்பவர்கள், அவசியமில்லாமல் வாழ்க்கையைத் தனித்தனிக் கூறுகளாக்கிவிடுகிறார்கள். ஆகையால் விக்னேஸ்வரருக்கு மிகப் பிரியம் பூர்ண கொழுக்கட்டை என்று நான் சொன்னேன். அவர் கொழுக்கட்டையைத் துண்டு துண்டாகச் செய்து சாப்பிடுவதில்லை.

உபாசனையுடன் சேர்ந்த கருமம்

இவ்விஷயத்தை சிந்தித்துக்கொண் டிருக்கும்போது இன்னொரு விஷயம் எனது கவனத்திற்கு எட்டியது. உபாசனையுடன், ஜனங்கள் வீணை வாசிப்பது, பாட்டுப் பாடுவது, தாளம் போடுவது முதலிய யாவும் நடைபெறக் கூடுமானால் ஜனங்களுக்கு நன்மையான காரியம் ஏன் நடைபெறக்கூடாது? அதையேன் எதிர்க்க வேண்டும்? யார் தனது வாழ்க்கையில் உபாசனையையும், செயலையும் கூடச் செய்திருக்கிறார்களோ அவர்களுக்கு வெளிச் சாதனம்

சித்தியாகவே செய்யும். உபாசனையும் சேர்ந்து இருப்பதால் பிரம்மத்தையும் அடையக்கூடும் என்று கீதையில் கூறப் பட்டிருக்கிறது. நானும் ஏன் இம்மாதிரி உபாசனை (வழிபாடு) செய்யக்கூடாது என்று எண்ணினேன். என்னுடைய நண்பர்களுடன் இதைப்பற்றி விவாதித்தேன். இங்குள்ள கிணற்றில் தண்ணீர் இறைக்கும் சாதனம் இருக்கிறது. தண்ணீர் இறைப்பதனால் பக்கத்திலுள்ள மரங்களும் திருப்தியடைகின்றன. ஏதாவது ஒரு கருத்து பிடித்தமானால் அதை உடனே நடை முறைக்குக்கொண்டுவரவேண்டுமென்பது இயற்கை. நான் துணிந்தேன். காந்திஜி இம்மாதிரி பிரார்த்தனை நடத்தவில்லை, ஆகையால் தான் துணிவு தேவையாக இருந்தது. நூல் நூற்றுக்கொண்டிருக்கும் போது அவர் சிந்தனை செய்து கொண்டிருந்தார். ஆனால் அவர் இறை வழிபாட்டை தனியாக வைத்திருந்தார். அதனுள்ளடங்கிய கருத்து எனக்குத்தெரியும். இரண்டு விதமான சந்தேகம் இருக்கும் வரை சாதனை சரிவர நடைபெறாது என்று எண்ணினேன். ஆகையால் தண்ணீர் இறைக்கும் சக்கரத்தைச் சுற்றிக்கொண்டே, தண்ணீர் இறைத்துக்கொண்டே பிரார்த்தனை செய்யும் முறையை ஆரம்பித்துவிட்டேன். இதனால் ஏகாக்கிர சிந்தை ஏற்படாது என்று சிலர் சொன்னார்கள். மனம் நிலையாக இல்லாத இடத்தில் தண்ணீர் இறைத்துக்கொண்டே பிரார்த்தனை செய்தாலும் சரி, அல்லது வீணை வாசித்துக் கொண்டே பிரார்த்தனை செய்தாலும்சரி, அதனால் ஏகாக்கிர சிந்தை ஏற்படாது. நிலைத்த மனமுள்ளவராக இருக்கக்கூடிய சக்தியுள்ளவர்களுக்கு ஏகாக்கிரம் ஏற்படும். நிலைத்த மனத்தினால் தான் சித்தம் சித்தியாகக்கூடும். செயல் அனுகூலமாக இருப்பதைப்போன்று பிரதிகூலமாகவும் இருக்கக்கூடும். ஆகையால் செயலிலிருந்து சாதனை வேறாக இருக்கக் கூடாது. சாதனைக்காக தனியாக தியானம் செய்தலோ மௌனமாக இருத்தலோ நடைபெற நாம் தனியாக தியானம் செய்து கொண்டோ மௌனமாகவோ இருப்போமானால் அந்த வழிபாடு சத்வகுணமாவதற்குப் பதில் தமோகுணமாவதும் சாத்தியமாகும்.

காந்திஜி நடத்திய பிரார்த்தனையில் ஜனங்கள் படுக்கைமட்டும் எடுத்துக்கொண்டு வரவில்லையே தவிர, அவர்கள் நன்றாகத் தூங்காவிட்டாலும் தூங்கி விழுந்துகொண்டிருந்ததைப் பார்த்தேன். இம்மாதிரி ஒரு பக்கம் ரஜோகுணம், மற்றொரு பக்கம் தமோகுணம் ஏற்படக்கூடிய ஆபத்து இருக்கிறது. ஆகையால்தான் புத்தபகவான் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும், விவேக புத்தியை நிலைக்கச் செய்யவேண்டும் என்று கூறினார். மனதில் செயலின்மூலம் சித்தத்தை சுத்திசெய்யும் சாதனையின்பேரில் விருப்பம் இல்லாமல் வேறு விருப்பம் இருக்குமானால் அதனால் சித்தத்திற்கு அமைதி ஏற்படாது. நான் உதாரணம் கூறட்டுமா? எங்களுடைய ஆசிரமத்தில் எட்டு மணி நேரம், பத்துமணிநேரம் உடலுழைப்புச் செய்ய வேண்டியிருக்கிறது. வெளியில் செய்யவேண்டியிருப்பதைப் போன்று இங்கும்செய்யவேண்டியிருக்கிறது. இதில் சேவை ஒன்றும் நடைபெறவில்லை. யென்று யாராவது எண்ணினால் அவருக்கு சமாதானம் ஏற்படாது. ஒருமணி நேரம் அல்லது இரண்டுமணி நேரம் ஆசிரம வேலை செய்வோம், மீதியிருக்கும் நேரத்தில் படிப்பதோ அல்லது உடலுழைப்பு செய்யவேண்டிய அவசியமில்லாத சேவைக்கான வேறு வேலைகள் செய்வோம் என்று யாராவது எண்ணினால் அது சாதனையாகாது. ஏனென்றால் இதில் சமூகம் சுரண்டப்படாமல் இருக்காது. எட்டு மணி நேரம், பத்துமணி நேரம் வேலை செய்த பிறகுங்கூட ஜனங்கள் அனைவருக்கும் உணவு கிடைக்கிறதில்லை. இந் நிலையில் நாம் இரண்டு மணி நேரம் உடலுழைப்புச் செய்வதாலேயே வாழ்க்கை வசதிகளை எதிர்பார்த்து மீதி நேரத்தை சாதனையில் (வழிபாடு) செலவழிக்க வேண்டுமென்று விரும்பினால் அந்த சாதனை சாதனையாக இல்லாமல் சுரண்டலாகவே இருக்கும்.

நீங்கள் சேவைக்கான வேலை செய்கிறீர்கள், மேலும் சித்த சுத்திக்காக தனியாக சாதனை செய்யவும் விரும்புகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். இம்முறையில் சாதனை ஏற்படாது, ஒன்றைச் சாதிப்பதினால் எல்லாம் சித்தியாகக்கூடியதே உண்மையான சாதனையாகும். மற்றும் அநேக விஷயங்கள் அதன் அக்கம் பக்கத்தில் இருக்கக்கூடும். ஆனால் அதற்கு சாதனை என்ற வார்த்தையை உபயோகிப்பது சரியாகாது. நாம் பூமிதான வேள்வி ஆரம்பித்திருக்கிறோமென்றால் இந்த வேலையை ஏகாக்கிர சித்தத்துடன் செய்ய வேண்டும். இந்த வேலையை வழிபாடு எனக் கருதி சரியாக நாம் நடத்துவோமானால் ஜனங்களின் ஹிருதயத்தைக் கவரக்கூடும்; சமூக மாற்றத்தையும் ஏற்படுத்துவதுடன் கூட, ஆத்மானிவ மலர்ச்சியடையச் செய்யவுங்கூடும். ★ ★ ★

★ காந்திஜியின் பிரதம தரிசனம் ★

ஆச்சாரிய கிருபலானி

மகாத்மா காந்திஜி தென்னுப்பிரிக்காவிலிருந்து வந்ததும் நேராக கவியரசர் ரவீந்திர நாதரின் சாந்திநிகேதனத்திற்குச் சென்ருர். அந்த நாள் தொட்டு காந்திஜியுடன் நெருங்கிப் பழகி இன்று நம்முடன் இருந்து வருவோர் ஒரு சிலரே. அவர்களுள் ஒருவர் ஸ்ரீ ஆச்சாரிய கிருபலானி. தனக்குக் கிடைத்த காந்திஜியின் முதல் தரிசனத்தை வெகு அழகாகச் சித்திரித்திருக்கிருர். இத் தகையோர் பலர் தனித்தனியே எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து, காந்திஜியின் காரியதரிசியா யிருந்த ஸ்ரீ சந்திரசங்கர் சுக்லா *'Reminiscences of Gandhiji'* (காந்திஜியின் நினைவுகள்) என்று ஓர் புத்தகம் வெளியிட்டுள்ளார். அதில் ஒரு பகுதியின் மொழிபெயர்ப்பை ஓர் 'அன்பர்' அனுப்பி யிருக்கிருர்.

1915 பிப்ரவரியில் காந்திஜி சாந்திநிகே தனத்திற்கு வந்தார். போனிக்ஸ் ஆசிரமத்தில் அவருடன் வாழ்க்கை நடத்தியவர்கள் அவ ருக்கு முன்னதாகவே அங்கு வந்து தங்கியிருந் தனர். அவர் மட்டும் தென் ஆப்பிரிக்காவிலி ருந்து இங்கிலாந்து சென்ருர். அப்போதுதான் இந்தியாவுக்கு வந்திருக்கிருர். அவரது நெருங் கிய தோழர்களுடனும் சகாக்களுடனும் சாந்தி நிகேதனத்தில் தங்கினர். காந்திஜியே தம் சுய சரிதத்தில் சாந்தி நிகேதனத்தில் தாம் தங்கி யிருந்ததைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். எனக் கும் சாந்தி நிகேதனத்துக்கும் தொடர்பு பல வகையில். எனது மருமகன் ஸ்ரீ கிரிதர் கிருபலானியைக் கல்வி கற்க அங்கே சேர்த் திருந்தேன். பீகாரிலுள்ள முஜபர்பூரில் காலே ஜில் போசிரியர் வேலை எனக்கு. பீகார் அந் நாட்களில் தனி மாகாணந் தான்; ஆனுலும், உயர்தரக் கல்வியில் கல்கத்தா சர்வகலாசாலை யின் ஆதீனத்துக் குட் பட்டதாகவே யிருந் தது.

காகா கலேல்கர் அச்சமயம் சாந்திநிகேத னத்தில் இருந்தார். அவருக்கு தத்தாத்ரேய பிரம்மசாரி என்பது அப்போதைய பெயர். அவர் தம் வாழ்வை சாந்தி நிகேதனத்தில் ஆசிரியராகப் பணி செய்வதற்கென்று அர்ப் பணித்துக்கொண்டவர். நான் அவரது பழைய நண்பன்; 'பர்கூஸன்' காலேஜில் சேர்ந்து படித்தவர்கள், 1907-ல். அங்கு தொடங் கிற்று, எங்களுடைய வாழ்வு முழுதும் பிரி யாத நட்பு. தென்ஆப்பிரிக்க இந்தியத் தலைவர் காந்திஜி வரப்போகும் விஷயம் அவர் தான் எனக்குக் கடிதமூலம் முதன் முதலில் தெரி வித்தார். சில நாட்களே விடுமுறை கிடைத் தாலும், நான் அடிக்கடி சாந்திநிகேதனம் போவது வழக்கம். எனது கிரிதர் எவ்வாறு படிக்கிருன் என்று தெரிந்து கொள்ளப் போவேன். கவிஞர் பெருமானின் தரிசன ஆவல் மற்ருெரு வகையில் என்னை ஈர்த்தது. கல்வித்துறையில் புதிய சோதனைகளில் அவர் ஈடுபட்டுள்ளார் என்பதால் எனக்கு ஒரு ஆர் வம். என்னைப் பற்றிச் சொல்ல வேண்டாமா? நான் தொழிலில் ஆசிரியர் என்ருலும், அர சியலில் எனக்கு அபார சிரத்தை. வங்கப் பிரிவினைக் காலத்திலேயே தோன்றியது அது. அப்போது நான் பூரண பட்டதாரியல்ல; அரைகுறைப் பட்டதாரி. பூரணமாகப் பட் டம் பெற்றபின் பல கல்வி ஸ்தாபனங்களில் உத்தியோகம் வகித்தேன். நானுகவோ அல் லது ஸ்தாபன அதிகாரிகள் செய்கையாலோ அவற்றை விட்டு வெளியேறும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனல் ஒவ்வொரு தடவையும் வெளியேறுவதற்கு குரிய முக்கிய காரணமா யிருந்தது, எனது அரசியல் ஈடுபாடும் ஊக்க முமே.

இந் நாட்டில் 1914-ல் அரசியல் நிலைமை என்ன? சப்பென்றிருந்தது. சூரத் பிளவு (1907) க்குப் பின் காங்கிரஸ் மக்களுக்கு ஆவேச மூட்டும், உற்சாகமளிக்கும், கல்வி புகட்டும் ஸ்தாபனமா யிருக்கும் நிலைமையை இழந்துவிட்டது. ஏனெனில், துடிதுடிப் புள்ள, புரட்சி மனப் பான்மை வாய்ந்த இளைஞர்கள், இளமையுள்ளம் படைத்த பெரி யோர்கள் எல்லோரும் விலகிவிட்டனர். காங் கிரஸ் ஒரு உயிரற்ற, உணர்வற்ற உடல்போல இருந்தது. சர்க்கார் சரியானபடி புரட்சிக் காரர்களை நசுக்கிவிட்டது என்று கூறலாம். மாண்டலேயிலிருந்து திலக மகரிஷி திரும்பி வந்து சில மாதங்களே ஆகியிருந்தன. நீண்ட காலச் சிறைவாசம் அவர் உள்ளத்தையும் உடலையும் வெகுவாக வாட்டியிருக்கு மல் லவா? ஓய்வு வேண்டும் அவருக்கு. ஆவேசக் கனலான விபினசந்திர பாலரும் அவ்வளவு ஆரவார மின்றி இருந்தார். லாலா லஜபதி ராயோ, அமெரிக்காவில் 'பத்திரமாக' இருந் தார். அரவிந்தரோ அரசியல் துறவு கொண்டு

விட்டார்; புதுச்சேரியில் அமைதி வாழ்க்கையைத் தேடப் புறப்பட்டு விட்டார். உத்தமனான தலைவனை எதிர்நோக்கி உள்ளம் வாடி நின்றது நாடு; எந்த மூலையிலிருந்து எவ்வகையிலாவது நம்பிக்கைக்கான மின்னல் ரேகை தோன்றாதா, நல்ல தலைவன் வாரானா என்று இரு கைகளாலும் வரவேற்பளித்து அவனை வரவேற்கச் சித்தமாயிருந்தது. காந்திஜியின் சாந்தி நிகேதன விஜயம் நம்பிக்கையளித்தது, எனக்கு. அவரைத் தரிசிப்பதென்று முடிவு செய்தேன். காந்திஜியிடம் நான் வரப்போவதையும் எனக்கு அவருடன் பேசச் சந்தர்ப்பம் வேண்டும் என்பதையும் முன் கூட்டியே காகா கலேல்கருக்குத் தெரிவித்தேன்.

மாலை அந்தி மயங்குவதற்கு முன்னால் சாந்தி நிகேதனம் போய்ச் சேர்ந்தேன். ராத்திரி சாப்பிடுவதில்லையென்ற விரதம் காந்திஜிக்கு. அப்போது சாப்பிட்டுக்கொண்டிருந்தார். கால்களைத் தரையில் தொங்கவிட்டுக் கொண்டிருந்தார். உயர்ந்த ஆசனமொன்றில் வீற்றிருந்தார். சாதாரண வேஷ்டி இடுப்பில், மேலே முரட்டுத்துணியாலான ஒரு சட்டை; அதிலும், கழுத்துப் பக்கத்தில் பித்தான் அவிழ்ந்திருந்தது. நான் இன்னாரென்று அவரிடம் தெரிவித்தார்கள். இந்திய முறைப்படி கைகூப்பி நமஸ்கரித்தேன். பதிலுக்கு மலர்ந்த புன்னகை என்னை வரவேற்றது. அமர்ந்து கொள்ளச் சொல்லி அன்போடு உள்ளே அழைத்தார். உடனே முக்கியமான பேச்சுக்களில் இறங்கிவிட்டோம். சொந்த விஷயங்களைப் பற்றியே பேசினோம். அரசியலைப்பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசிக்கொள்ளவில்லை, அந்த முதல் சந்திப்பில். ஆனால் காந்திஜி என்னை அடிக்கடி கூர்ந்து கவனித்தார். ஒருவேளை என்னைப்பற்றி நன்கு தெரிந்துகொள்வதற்காகவும் என்னை அவரது தராசில் மதிப்பிடவும் போலும்! நானும் அவரை அப்படியே பின்பற்றினேன். அதாவது, அவரைப் பரீட்சிப்பது போல அடிக்கடி உற்று நோக்கினேன். இப்போது நான் குறிப்பிடுவதே அதிகப் பிரசங்கித்தனம்; காந்திஜியை எடைபோட்டு மதிப்பிடவா இந்தச் சின்னப்பயல் என்று தோன்றும். ஆனால் அன்று காந்திஜி 'மகாத்மா' ஆகவில்லை. இந்தியப் பொது வாழ்வில் அவர் அறிமுகமில்லாத ஒரு 'அப்பாவி' தான். தென்னாப்பிரிக்காவில் நம்மவரின் தன்மதிப்பைக் காக்கப் போரிட்டு வெற்றி கண்டவர்தான்; உண்மையே. அரசியல்போரில் புதியதொரு ஆயுதத்தைக் கண்டுபிடித்தவருங் கூட. ஆனால் அவரும் சரி, அவரது முறைகளும் சரி, இந்திய மண்ணில் நடைபெறுமா, இந்நாட்டவர் ஏற்றுக்கொள்வரா, வெற்றிகிடைக்குமாவென்பது பிறகு தான் தெரியப்போகிறது. அவர் வெறும் ஸ்ரீ காந்திதான். ஒரு விசித்திரமான ஆசாமி. இங்கிலாந்து சென்று திரும்பியவர், படித்தவர். அவரைப்பற்றி எல்லோரும் அறிந்தது, அவர் ஒரு வினோதமானவர், சற்று 'தெனாலிராமன்' போன்றவர் என்பதே. நானும் பார்த்தேன் அவரது உணவை. புதிய பழங்களும், வாதங்கொட்டைபோன்ற சிலவையுந்தான். அளவு, கொஞ்சம் தாராளந்தான். நான் சிந்து மாகாணத்தவன். எனவே புத்தம் புதிய பழங்கள் மிதமாகச் சாப்பிட்டால் உடலுக்குத் தீங்கு விளைவிக்காது என்று தெரியும். ஆனால் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த படித்த இந்தியர் பாதாம் பருப்பு, பிஸ்தாப் பருப்பையே தனது ஆகாரமாகக் கொள்வது என்பது அதுவரை கண்டிராத காட்சி. நல்ல பசி, அத்துடனும் போதுமான திருப்தியுடனும் நன்றாக அசைபோட்டு மென்று தின்று கொண்டிருந்தார். சாப்பிட நேரமும் அதிகம் பிடித்தது. தம்மைப் பார்க்கவே வந்திருப்பதால் தமது விருந்தினராகவே யிருக்கவேண்டுமென்று என்னை வற்புறுத்தினார். "கவியின் விருந்தினனாக இராதே, இந்தத் தடவை" என்றார். "சரி" என்றேன். பல மாகாணங்களில் வசித்துப் பழகியவன் நான். ஆகவே, சாப்பாடு விஷயங்களில் எனக்கு விருப்பு வெறுப்புகள் கிடையவே கிடையாது. பக்குவமாக சமைக்கப் படாத, தாளித்துக் கொட்டாத, உப்பு காரம் பெருங்காயம் போன்றவை யில்லாத அந்த உணவு என்னைப் பயப்படுத்திவிடவில்லை. இவ்வளவும் போனிக்ஸிலிருந்து சாந்திநிகேதனத்திற்கு வந்து தங்கியிருந்த காந்திஜியின் சிஷ்யர்கள் தயாரித்தது. அவர்களுக்கு அவர்கள் இஷ்டம்போல் தினசரி வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய வசதிகள் அங்கே தரப்பட்டிருந்தன. அவர்களுக்காகத் தனியறைகள். தென்னாப்பிரிக்காவில் எப்படி வாழ்வோ அப்படியே இங்கும் நடத்தினர்.

அந்த முதல் சந்திப்பின் பிறகு, தினமும் ஒரு முறை சந்திப்பு உண்டு. ஒரு வாரம் இவ்வாறு. பிறகு கல்கத்தாவுக்குப் புறப்பட்டார் காந்திஜி. ஆகா, எப்படிப்பட்ட வாரம் அது! வெறும் அரசியல் பேச்சு மட்டுமாயிருந்தால் அதற்கு சுவையே யிருந்திராது. ஆனால் நான் கண்டது, அவரது சீர்திருத்த ஆவேசம் செயல் முறையில் பெருக்கெடுத்தோடியது. வெறும் இன்பத்திலாழ்ந்த கந்தர்வர்கள் லோகம்

காந்தியும் மார்க்ஸும் — ஆச்சாரிய வினோபா பாவே

(சென்ற மாத இதழ் 240-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு கிஷோரிலால்பாய் அவர்கள் காந்திய எண்ணங்களுக்கு வளைந்துகொடுக்கத் தக்க சுதந்திர பாவத்துடன் கூடிய ஒரு உருவங்கொடுக்க முயற்சித்திருக்கிறார். அவற்றை முறையே (1) வர்ண-வியவஸ்தம் — அதாவது வாழ்க்கைக்கென வகுக்கப் பட்டிருக்கும் தொழில் பற்றிய கொள்கை, (2) தர்மகர்த்தா முறை, (3) பரவல் முறை என மூன்று கொள்கைகளின்மேல் வைத்து அமைத்திருக்கிறார். இவற்றைத் தனித்தனியே சற்று ஆராயலாம்.

(1) காந்திஜி நமது தேசத்தில் கர்ண பரம்பரையாக இருந்துவரும் வர்ண-வியவஸ்தம் என்னும் சமுதாய — பொருளாதார அமைப்பை ஏற்றுக்கொண்டு அதற்கு முற்றிலும் புதியதொரு பொருளும் உயிரும் ஊட்டியிருக்கிறார். இப்புதிய எண்ணமானது பழையதன் நோக்கத்தையும், ஆதர்சத்தையும் அனுசரித்ததே. இது அஹிம்சா தர்மத்தை நடைமுறையில் புகுத்திப்பார்த்த சோதனையினின்றும் வந்ததென்று எனக்குத் தோன்றுகிறது. ஒரு சமுதாயம் பரம்பரையாக ஒப்புக்கொண்டும் மதித்தும் வந்த பழைய எண்ணம், பெயர், மனோபாவம் முதலியவற்றை அறவே ஒதுக்கித் தள்ளிவிடாமல், அவற்றை நிலைநாட்டி அதற்குப் பரந்த அர்த்தபுஷ்டியைக் கொடுத்து, அவசியமானால் சிறிது மாற்றி, அதற்குப் புத்துயிரூட்டிச் செழிக்கச் செய்வதுதான் அஹிம்சை வழியாகும். இந்தியப் பண்பின் அடிப்படை ஒன்றோடொன்றைப் பிணைக்கும் தன்மையது. இது அஹிம்சா தர்மத்தினின்றும் எழுவதாகும். இங்கு கையாளப்பட்டுள்ள முறை அத்தனை மேன்மையானது; புத்தம் புதிய பொருள் தரும் வார்த்தைகளைக் குறித்த பிரசினையுங்கூட இங்கு பரபரப்பைத் தருவதில்லை. அதே பழைய அர்த்தமே, ஆனால் கொஞ்சம் மெருகேற்றப்பட்டு சற்று விரிவாகத் தெளிவாக்கப் பட்டிருப்பதுபோல் தோன்றும், அவ்வளவே. கீதையில் யக்ஞம் போன்ற வார்த்தைகள் விரிந்த பொருளில் கையாளப்பட்டிருக்குமிடங்களில் இம்முறை அனுஷ்டிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதே சமயத்தில் இதற்குத் திரித்துப் பொருள் கூற நேரிட்டால் இதனால் பெருங்கேடு விளையுமென்பதிலும் சந்தேகமில்லை. அவ்வாறு நேருவது அசத்தியத்தின் செயலேயன்றி, அஹிம்சையினதன்று. வார்த்தையின் அர்த்தத்தைத் திரித்துக் கூறாது, பசுவினின்றும் பாலைக் கறப்பதுபோல் மேன்மையாகவும் கண்ணியமாகவும் அதே வார்த்தையிலிருந்து நல்லதொரு புதுப் பொருள் காண்பதுவே அஹிம்சை வழி. காந்திஜி இந்தியப் பண்பிலே பிறந்து வளர்ந்தவர். அதே பண்பில் திளைத்த மக்களுக்கே அவர் பெரும்பாலும் பேசினார். ஆகவேதான் அவர் வருணாசிரம தர்மத்தின் தத்துவத்தை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டுமென்று நான் யூகிக்கிறேன். காந்திஜி வேறு தேசத்தில் பிறந்து வளர்ந்திருந்தால், அல்லது வேறொரு சமுதாயத்தை நோக்கி அவர் பேசியிருந்தால், வருணாசிரம தர்மம் என்ற வார்த்தையும் அதன் உட்கருத்தும் அவருக்கு சுயமாகவே உதயமாகியிருக்குமென்றும், அஹிம்சா பூர்வமான சமுதாய அமைப்பிற்கு இந்த தர்மத்தைப் பிரதான அங்கமாகக் கொண்டிருப்பாரென்றும் யாரும்

(முன் பக்கத் தொடர்ச்சி) காந்திஜியின் பிரதம தரிசனம்

போல் இருந்த சாந்தி நிகேதனம் திக்பிரமையடைந்தது, இவரது விஜயத்தால். திடீரென ஒரு அதிசயமான படையெடுப்பு என்று கூறலாம். கவியரசர் எல்லா விதத்திலும் யோக்கியதைகள் பூரணமாக வாய்ந்த மகானுபவர்; ஆசிரியர்களும் மாணவர்களும் உற்சாகமே உருவெடுத்தவர்கள்; மகிழ்ச்சி, சுதந்திரம் இரண்டும் பூரணமாக நிலவின என்றாலும், பல முக்கியமான விஷயங்கள் அசட்டை செய்யப்பட்டிருந்தன. இவற்றை காந்திஜி கண்டார். மாணவர்கள் ஆசிரியர்களிடம் காந்திஜி ஒட்டிக்கொண்டுவிட்டார். மாணவர்களில் பலர் சின்னஞ்சிறியவர்கள். அப்போது ஹைஸ்கூல் படிப்பு மட்டுமே நடந்தது. கல்லூரி வகுப்புகளும், விசுவ பாரதிப் பகுதியும் பல வருஷங்களுக்குப் பிறகு தான் தொடங்கின. ஹைஸ்கூலாகவுங் கூட, கல்கத்தா சர்வகலாசாலையுடன் சாந்திநிகேதனம் இணைக்கப்பட்டிருக்கவில்லை. கல்கத்தா சர்வகலாசாலையின் மெட்ரிகுலேஷன் பரீட்சைக்கு அத்துடன் இணைந்த வேறு ஸ்தாபனங்கள் மூலமாய்த்தான் சாந்திநிகேதன மாணவர்களும் ஆஜராயினர். ★ ★ ★

(தொடரும்)

உறுதியாகச் சொல்லமுடியாது. ஆனல் ஒன்று மாத்திரம் உறுதி; இதே பாஷையில் இல்லாவிட்டாலும், வேறு எவ்வாறேனும் இதன் அடிப்படையான கொள்கைகளை அவர் ஏற்றுக்கொண்டிருப்பார்.

வருணம், வருண-வியவஸ்தம் என்பன போன்ற வார்த்தைகளை ஆட்சேபிக்கக்கூடிய வர்களுக்கு ஒன்று கூற விரும்புகிறேன். காந்திஜி அவற்றைப் பிரயோகித்திருப்பது கண்டு அவர்கள் அதிர்ச்சியுற வேண்டிய தில்லை. நமக்கு வார்த்தைகளைப் பற்றி அல்ல, அவற்றின் பொருள் பற்றியே அக்கறை. (i) சகல உழைப்புக்கும் சமமான ஊதியம்; (ii) போட்டியின்மை; (iii) மக்களின் பரம்பரை வழிவந்த அனுபவத்தின் பயன் முழுவதையும் ஏற்றுக்கொள்ளும் கல்வி முறை—இந்த மூன்றும் வருணசிரம தர்மத்தின் சாரம். அஹிம்சா பூர்வமான சமுதாயக் கட்டுக்கோப்பிற்கு அத்தியாவசிய மானது இதுவே என்பது நம் அபிப்பிராயம்.

(2) வருண வியவஸ்தம் என்ற வார்த்தையைப்போல் தர்மகர்த்தா என்ற வார்த்தையையும் பலர் வெறுக்கிருர்கள். வருணசிரமம் என்பதைப்பொறுத்தமட்டில், அது உருவான காலத்தில் உயர்ந்த நோக்கமும் நல்லதொரு சமுதாய அமைப்பும் தன்னகத்தே கொண்டிருந்தது என்பதில் ஐயமில்லை. ஆனல் தர்மகர்த்தா முறையும் அவ்வாறென்று உறுதியாகச் சொல்லமுடியாது. இந்த வார்த்தையோடு அதன் துஷ்பிரயோகமும் சேர்ந்தே பிறந்தது போலத் தோன்றுகிறது. ஆனல் இதற்கு சட்டத்தில் ஒரு கூடார்த்தமுண்டு. காந்திஜி சட்டம் பயின்றவராதலால், இந்த வார்த்தை அவரை வசீகரித்திருப்பதுபோல் தோன்றுகிறது. மேலும், அவர் சத்திய உபாசகராதலால் இதை உயர்ந்ததொரு கருத்தோடு சேர்த்துப் பிணைத்திருக்கிருர். நான் சட்டம் பயிலாத காரணத்தால் இந்த வார்த்தையை காந்திஜி பிரயோகித்திருக்கிருர் என்பதைத் தவிர இது என்னை வசீகரிக்கவில்லை. ஆயினும் காந்திஜி இவ்வார்த்தையின் மூலம் வெளிப்படுத்த முயற்சித்த கொள்கையை அறிந்து கொள்வதனின்றே அதைப் போற்றுவதனின்றே என்னை அது தடுக்கவில்லை. ஒரு வேளை இதன் அடிப்படையான மனப்பண்பைப் பிரத்தியட்ச அன்ருட வாழ்க்கையில் எவ்வாறு புகுத்தலாமென்ற சிந்தனையின் போது கீதையில் காணப்படும் அபரிக்கிரஹம் (வெளவாமை), சமபாவம் (சமரசம்-எல்லோரையும் தன்னைப்போல் பாவிக்கும் சமத்துவ மனப்பான்மை) போன்ற ஆணித்தரமான வார்த்தைகள் சில காந்திஜியின் உள்ளத்தை ஆகர்ஷித்து அவர் இவற்றைப் பிரத்தியட்ச வாழ்வில் எவ்வாறு அனுஷ்டிப்பதென்று ஆராய்ந்தபோது இந்த 'தர்மகர்த்தா' என்னும் சட்டபூர்வமான வார்த்தை தோன்றி அதனை உறுதிப்படுத்தியிருக்கலாம் என்று தோன்றுகிறது. காந்திஜி தன் சுய சரிதையில் கீதையைப் பற்றிய ஆராய்ச்சியே தர்மகர்த்தா என்ற வார்த்தையின் உட்கருத்தைப் பிரகாசிக்கச் செய்து வெளவாமை என்ற பிரசினையைத் தெளிவாக்கியதென்று கூறுகிருர். சுருங்கக் கூறினல், இன்றைய சமுதாய நிலையில் மாத்திரமன்றி வேறு எந்த நிலையிலும் வெளவாமை தர்மத்தை அனுஷ்டிப்பதற்குள்ள ஒரே வழி தர்மகர்த்தா முறையில் ஒருவர் தம்முடைய எல்லாவிதமான அதிகாரத்தையும் உபயோகப்படுத்துவதொன்றே. இதனை சாதாரண சக்தியுள்ள எவரும் எளிதில் புரிந்துகொள்ளத் தக்கவாறு கிஷோரிலால் அவர்கள் அழகாக விளக்கியிருக்கிருர். இது பற்றிய எவ்விதமான தப்பெண்ணத்திற்கும் இங்கு இடமில்லையென்று உணர்கிறேன்.

நியாயமற்றதொரு சமுதாய அமைப்பிற்குக் காரணமான பொருளாதார ஏற்றத்தாழ்வைக் களைந்துவிட்ட போதிலும், அறிவிலும் ஆற்றலிலுமுள்ள ஏற்றத் தாழ்வினை முற்றிலும் அகற்றிவிட இயலாது. கல்வி முறையினலும் வேறு வழிகளாலும் இந்த ஏற்றத் தாழ்வையும் பெரும்பாலும் குறைத்துவிடக்கூடுமென வைத்துக் கொண்டாலுங் கூட, ஒரு லட்சிய சமுதாயத்தில் அதனை முற்றிலும் நீக்கிவிட முடியுமெனக் கொள்ள முடியாது. ஆகவே நாம் முடிவாகக் கூறுமிடத்து, ஒருவருக்குள்ள உடல் வன்மை, செல்வம், அறிவு இவை போன்ற எல்லாப் பேறுகளையும், தம்மை அவற்றிற்கு தர்மகர்த்தாவாகப் பாவித்துக் கொண்டு, உலக சுபிட்சத்திற்காகப் பயன்படுத்த வேண்டும். இதுவே தர்மகர்த்தா முறையின் உன்னத நோக்கம். ஆனல் சுயநலமிகளால் இவ்வார்த்தை இழிவடைந்து அதன் முன்னைய தாய்மையான நிலைக்கு மீண்டும் கொண்டுவர இயலாத அளவுக்குத் தாழ்வடைந்துவிட்டது. ஆகையால் அந்த வார்த்தைக்குப் பதிலாக 'விஸ்வஸ்தவிருத்தி' — அதாவது நம்பிக்கைக் குணம் — என்ற வார்த்தையைக் கையாளுகிறேன். இந்த வார்த்தையைக் குறித்து எவ்விதமான வேண்டாத தொடர்பும் கிடையாது.

ஒருவர் மற்றொருவரைச் சார்ந்திருக்கக் கூடாதென்பது சுய நம்பிக்கையைத் தரும் ஒரு புத்திமதி என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால், சமுதாய வாழ்க்கை என்பது ஒருவர்மேலொருவர் வைத்துள்ள பரஸ்பர நம்பிக்கையைப் பொறுத்தது. ஆகவே, ஒருவர் மற்றவர் மேல் நம்பிக்கை வைக்கக் கூடாதென்ற கொள்கையை நாம் நிச்சயமாய் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒருவர் மற்றவரை நம்பலாகாது என்ற அடிப்படையில் ஒரு விதி இருக்குமானால் அது உண்மையில் பூமியின் மேல் நரகத்தையே கொண்டுவந்து நிலைநிறுத்துவதுபோலாகும். பெற்றோர் தங்கள் குழந்தைகளின் பேரிலும், குழந்தைகள் பெற்றோர் பேரிலும், அண்டை வீட்டுக்காரர்கள் ஒருவர் பேரில் ஒருவருமாக பரஸ்பர நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இது அவசியமே. இதுபோல, உலகத்தின் பல்வேறு தேசங்களுக்கிடையிலும் இந்த நம்பிக்கை நிலவ வேண்டும். இதனால் வரும் ஆபத்தையும் பொருட்படுத்தாது இந்தப் பரஸ்பர நம்பிக்கைக்காக நாம் வேலை செய்யாமற் போனால், நாம் மனிதத்தன்மையை விட்டு நழுவித் தாழ்ந்து போகிறோம் என்றுதான் கருத வேண்டும். இந்த நம்பிக்கை உணர்ச்சியைக் கல்வியின் மூலம் வளர்க்கலாம். இவ்வாறு செய்வதை விடுத்து, அதிலுள்ள சிரமத்தைத் தவிர்க்க வேண்டி, சமுதாயத்தையும் ஒரு இயந்திரத்தின் நிலைக்குத் தாழ்த்திவிட முயற்சிக்கிறோம். இதை பகுத்தறிவின் சோம்பேறித்தனம் என்றுதான் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

ஒரு சமுதாயம் பரஸ்பர நம்பிக்கையின் மேல் அமைந்திருக்கிறதென்றால், அங்கு பல்வேறு வகையான தனித்தனி மனிதரின் ஆற்றலையும் கொண்டதொரு மனமொத்த திட்டம் இருக்கிறதென்று அர்த்தம். இந்த எண்ணம் லோக சங்கிரஹம் (எல்லோருடைய பொது நன்மைக்காக ஒவ்வொருவரும் விட்டுக்கொடுத்து அனுசரித்தல்) என்ற சம்ஸ்கிருத வார்த்தையில் நன்கு தொனிக்கிறது. ஒருவர் தம்முடைய சக்தியைப் பயன்படுத்துவதென்பது தனி மனிதரின் வெளவாமை தர்மத்தின் பேரிலுள்ள நம்பிக்கையைப் பொறுத்திருக்கிறது. இதுவே லோக சங்கிரஹ தர்மத்தின் அடிப்படையானகொள்கை. நாம் தர்மகர்த்தா என்ற வார்த்தையைப் புறக்கணித்தாலும், பரஸ்பர நம்பிக்கை பற்றிய கொள்கையைப் புறக்கணிக்க முடியாது.

127788

(3) பரவல் முறை என்பதைப் பொறுத்த வரை நிலைமை வேறு. இவ்வார்த்தையின் தோற்றம் சமீபகாலத்தியதாதலால் இதை நல்லதோ தீயதோ ஒருவிதத் தொடர்பும் இன்னும் சாடவில்லை. இவ்வார்த்தை, இதன் பொருள், இதன் பின்னணியிலுள்ள கொள்கை எல்லாம் புதியவை. இயந்திர யுகம் தொடங்குமுன் பரவல் முறை நிலவியிருக்கவில்லையா என்று கேட்கலாம். அப்படியானால் இதிலுள்ள விசேஷமான புதுமை என்ன? நல்லது. யந்திர யுகத்திற்கு முன்னிருந்தது உண்மையில் பரவல் முறையல்ல. அக்காலத்தில் கிராமங்களில் சிறிய அளவில் சுதந்திரமாகத் தொழில்கள் நடைபெற்று வந்ததை மாத்திரம் பரவல்முறை என்று கூறமுடியுமா? பரவல்முறை என்பது பல்வேறு கிராமக் குடிசைத் தொழில்களுக்குப் பின்னணியிலுள்ள விரிந்து பரந்ததொரு எண்ணத்தையும் குறிக்கும். இந்த எண்ணம் அதில் பொதிந்திராவிட்டால் ஒரே இடத்தில் குவிந்திராத தொழில் கேந்திரங்கள் என்பன வெறும் சிதறுண்டு கிடக்கும் தொழில்களே என்று கருதப்படும். இத்தகைய தொழில்களே இயந்திர யுகத்திற்கு முன் ஏராளமாயிருந்தன. ஆகவே, அவையெல்லாம் இயந்திர யுகத்தின் முதல் மோதுதலிலேயே வெகு எளிதில் நசிந்துபோயின. (புத்திபூர்வமான, குவியலல்லாத) பரவல் முறையோவெனில் உறுதியான அஸ்திவாரத்தின்மேல் நிற்கிறது. இது அழிக்கமுடியாதது என்பது மாத்திரமல்ல, இயந்திர யுகத்தையே இது தவிடுபொடியாக்கிவிடும். தற்காலத்திய இயந்திர யுகம் அதன் பெயருக்கேற்றாற்போலிருக்கவில்லை. ஒரு யந்திரத்தைப் போல அது முழுதும் கட்டுக்கடங்குவதாயில்லை. இதை நல்லதொரு கட்டுப்பாட்டிற்குள் அடங்கிய இயந்திர யுகமாகச் செய்யவேண்டுமென்று கம்யூனிஸ்டுகள் விரும்புகிறார்கள். ஆனால் மற்ற ஆயுதங்களைப்போலவே இயந்திரங்களும்—அவை மனிதனால் கண்டுபிடிக்கப்பட்டபோதிலும்—மனிதத் தன்மையற்றவையாயுள்ளன. ஒரு குறித்த வரம்புக்குமேல் அவற்றை மனிதத்தன்மைக்கியைந்தவையாகச் செய்யமுடியாது. இதற்கு நேர் விரோதமாக அவை மனிதனை அடிமையாக்கி தம் அதிகாரத்தை நிலைநாட்டுகின்றன. இங்கு ஆயுதம் என்ற வார்த்தை வைத்தியர்கள் கையாளும் உபயோகமுள்ள ஆயுதங்களையல்ல, யுத்த தளவாடங்களையே குறிக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் "இயந்திரம்" என்பது சுரண்டும் தன்மையதும் வேலையில்லாத் திண்டாட்டம்

சோம்பல், அறிவுத் தளர்ச்சி முதலியவற்றைச் சிருஷ்டிப்பதுமான இயந்திரத்தையே குறிக்கும்; மனிதனுக்கு அனுசரணையாயிருந்து, மனிதனுக்குக் கட்டுப்பட்டு, மனிதத் தன்மைக்கிசைய அவனுடைய அங்கங்களிலொன்றைப் போல அவன் வேண்டும்போது உதவிக்கு முன் வந்து நிற்கும் இயந்திரங்களைக் குறிக்கவில்லை. உதாரணமாக, கைவண்டியை எடுத்துக் கொள்ளலாம். தற்சமயம் நாங்கள் ஒரு கிணறு தோண்டுவதில் ஈடுபட்டிருக்கிறோம். தோண்டிய மண்ணை அப்புறப்படுத்துவதற்கு இது எங்களுக்குப் பேருதவியாயிருக்கிறது. சேனாபதி பாப்பத் அவர்கள் அடிக்கடி "ஜேய், என் கைக்கருவியே" என்று சொல்வதுபோல எனக்கு அவ்வாறு சொல்லிப் பாடத் தோன்றுகிறது. கைவண்டியும் இயந்திர யுகத்தின் பரிசு தானே. ஆகையினால்தான் பரவல் முறையானது இயந்திர யுகத்தைத் தவிடுபொடியாக்கி ஜீரணித்துவிடுமென்கிறேன். இவ்வாறு கூறுவதன் அர்த்தம் இயந்திரத்திலுள்ள எல்லா நன்மைகளையும் எடுத்துக் கொள்வோம் என்பதே. அப்படி எடுத்துக்கொள்ளாதவரை அதை உண்மையில் தகர்த்துவிட்டதாகக் கருதமுடியாது. முன் காலத்திலிருந்த குவிந்திராத கிராமக் கைத்தொழில்கள் இயந்திர யுகத்தின் நன்மைகளை ஏற்று அவற்றை ஜீரணிக்கும் சக்தியற்றனவாயிருந்தன. நாம் விரும்பும் பரவல் முறைக்கும் பழைய குவிந்திராத கிராமக் கைத்தொழில் முறைக்குமுள்ள அடிப்படையான வித்தியாசம் இதுவே. ஆகவே பர்வல் முறை என்ற வார்த்தையும் அதனுள் பொதிந்திருக்கும் எண்ணங்களும் புதியனவே. இதை மனதிற் கொள்ளுவோமானால், பரவல் முறையை எதிர்த்துவரும் ஆட்சேபங்கள் எல்லாம் பாறையின்மேல் மோதிய வாளைப்போல் மழுங்கிப்போகும்.

பரவல் முறையானது, தொழில்களைப் பொறுத்தது மாத்திரமன்று. இதை அரசாங்க அதிகாரத்தின் விஷயத்திலும் பிரயோகிக்கலாம். அஹிம்சா பூர்வமான சமுதாயத்தைக் காண விழையும் தீவிர சிந்தனையாளர்கள்கூட இவ்வுண்மையை மறந்துவிடுகிறார்கள். தொழில்களைப் பரவல் முறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று கோருகிறார்கள். அதே சமயத்தில் பலம் வாய்ந்த ஒரு மத்திய அரசாங்கம் கொஞ்ச காலத்திற்கேனும் வேண்டுமென்று பரிந்து பேசுகிறார்கள். இப்படிக் கோருவதும் தொழில்களைப் பரவல் முறைக்குக் கொண்டுவந்து அமுல் நடத்துவதற்காகவே என்கிறார்கள்!

கம்யூனிஸ்டுகள்கூட என்றென்றைக்கும் சர்க்கார் நிலைத்திருப்பதை விரும்பவில்லை. உறைந்த நெய் சூடேறியவுடன் உருகிவிடுவதுபோல் அரசாங்கமும் தானே மறைந்துபோகும் என்கிறார்கள். ஆனால் அந்த நிலைமை வரும் வரை அரசாங்கம் உறுதியாக இருக்கவேண்டும்; அதுவும் குளிர்காலத்தில் உறைந்துபோயிருக்கும் நெய்யைப் போலல்ல, டிராட்ஸ்கியின் மண்டையை உடைத்து நொறுக்கிய இரும்புச் சுத்தியலைப்போல உறுதியாயிருக்கவேண்டும் என்கிறார்கள். ஏறக்குறைய ஆதிமுதல் இன்றுவரை பல்வேறு அரசியல் கொள்கைகளைக்கொண்ட 'பொறுப்புள்ள' தலைவர்கள் எல்லோருமே இவ்வாறு முன்னுக்குப் பின் முரணாகப் பேசியிருக்கிறார்கள். "மாறுதல் காலத்தில்" பலம் வாய்ந்த மத்திய அரசாங்கம் தேவை என்பது அவர்களுடைய விவாதம். ஆனால் காந்திஜி எல்லா சந்தர்ப்பங்களிலும் எல்லாக் காலங்களிலும் அரசியல் அதிகாரம் பரவல் முறையில் அமைய வேண்டுமென்கிறார். ஆரம்பத்தில் மட்டுமல்ல, இடையிலும், இறுதிமட்டும் இது அத்தியாவசியமானதென்று வற்புறுத்திக் கூறுகிறார். ஆனால் நமது நண்பர்களோ, "இதுவெல்லாம் பண்டைக்காலத்துப் புராணக் கதை; திரேதா யுகத்து ராமராஜ்யம், வருங்கால சர்வோதயம் என்னும் ஒரு கற்பனைக் கந்தர்வ மண்டலம் என்று இதை ஒதுக்கித் தள்ளிவிடலாம். இந்த நிமிஷத்திற்கு இதனால் பயனில்லை" என்கிறார்கள்.

(தொடரும்)

THE KHADI WORLD: BOUND VOLUME

A few copies of bound volumes of *The Khadi World* are available.

Price Rs. 5 including Postage.

SARVODAYA PRACHURALAYAM
Veerapandy - TIRUPUR (S. Ry.)

"கதர் மலர்": பைண்டு தொகுதிகள்

நான்கு வருஷத் தொகுதிகள் அழகான பைண்டுடன் தயாராயிருக்கின்றன.

ஒரு தொகுதியின் விலை ரூ. 4.
தபால் செலவு வேறு.

ஸர்வோதய பிரசுராலயம்,
வீரபாண்டி, திருப்பூர் (S. Ry)

★ பூமிதான யக்ஞம் ★

தரித்திரநாராயணன் சேவை

உத்தரப் பிரதேசத்தில் ஆச்சார்ய விநோபாஜியின் பிரசங்கம்

உத்தரப் பிரதேசத்தில் பூமிதான யாத்திரையில் விநோபாஜி தினம் ஒரு ஊரில் பேசி வருகிறார். ஒரே விஷயத்தை திரும்பத் திரும்பச் சொல்லவேண்டி வருகிறது. பல இடங்களில் பேசியதிலிருந்து புதிய விஷயங்களைப்பற்றிச் சொன்னதை மட்டும் தொகுத்து கீழே தருகிறோம். இது ஹிந்தி "ஸர்வோதயம்" ஏப்ரல்-மீ இதழில் வெளிவந்ததன் மொழிபெயர்ப்பு.

எனது அன்பான சகோதர சகோதரிகளே,

என்னுடைய செய்தியைக் கேட்பதற்கு இவ்வளவு அதிகமான எண்ணிக்கையில் நீங்கள் இங்கு வந்திருப்பதைப் பார்த்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். கங்கையும் யமுனையும் பாயும் இந்தப் புண்ணிய பூமியில் சுற்றுவதற்குரிய சந்தர்ப்பம் கிடைத்திருப்பது எனது பாக்கியமே யாகும். இப்பிரதேசத்தில் தீர்த்தயாத்திரைக்கான அநேக பரிசுத்தமான இடங்கள் இருக்கின்றன. மதுரா, பிருந்தாவனம், காசி, அயோத்தி, பிரயாகை, ஹரித்துவாரம் முதலிய இடங்களுக்கு அகில இந்தியாவிலுமுள்ள ஜனங்கள் தினமும் யாத்திரைக்காக வந்துகொண்டிருக்கிறார்கள். பத்ரி-கேதாரத்திற்கும் பிரதி வருடமும் அநேக ஜனங்கள் செல்கிறார்கள். ஆனால் நீங்கள் அனைவரும் வாழும் இடங்களே எனக்குத் தீர்த்த யாத்திரைக்குரிய புண்ணிய ஸ்தலங்களாகும். நான் உங்களைத் தரிசிக்கும்போது, பஞ்ச பூதங்களாலான சொரூபங்களென்று உங்களைக் கருதுவதில்லை; ஆண்டவனுடைய ரூபங்களாகவே கருதுகிறேன். இந்த பலவீனமான சரீரத்திற்கு நீண்ட பிரயாணத்தினால் களைப்புத் தோன்றுகிறது. ஆனால் உங்களுக்கு ஊழியம் செய்யச் சந்தர்ப்பம் கிடைக்கும் இடத்தில் களைப்பு நீங்கிவிடுகிறது.

எனது இஷ்டதேவதை

தரித்திரநாராயணனே எனது இஷ்ட தேவதை. தரித்திரநாராயணராக இல்லாதவர்கள் எனக்கு ஆராதிக்கக்கூடியவர்களாவர். ஆனால் தரித்திரநாராயணனுக்கு ஊழியம் செய்வது இன்று விசேஷத் தேவையாகும். ஆகையால், உங்களனைவரின் கவனத்தை அவர்கள் பக்கம் செலுத்தவே நான் வந்திருக்கிறேன். தாயார் அனைவரையும் சமமாக நேசிக்கிறாள். இருந்தாலும், பலவீனமாக இருப்பவர்கள்மீது அதிக கவனம் செலுத்துகிறாள்.

அம்மாதிரியே, ஏழைகளின் சேவையில் ஈடுபடுவதை நான் என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். நீங்கள் அனைவரும் அவர்களின் சேவையில் ஈடுபடுவீர்களென நம்புகிறேன்.

குணமும் குறையும் எல்லோரிடத்திலும் உள்ளவை

சமூகத்தில், பணக்காரர் ஏழை என்ற இரண்டு பரஸ்பர விரோதமான வர்க்கங்கள் இருப்பதாகத் தோன்றவில்லை. ஆம், சிலர் பணக்காரர்களாகவும் சிலர் ஏழைகளாகவும் இருக்கிறார்கள். ஆனால் பணக்காரர் அல்லது ஏழை என்ற எந்த விதமான ஜாதியும் இல்லை. பணக்காரர்கள் கெட்டவர்களென்றும், ஏழைகள் நல்லவர்களெனவும் பெரும்பாலும் கருதப்படுகிறது. ஆனால் இது சரியல்ல. நல்லவர்கள், கெட்டவர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் இருக்கிறார்கள். பணக்காரர்களில் ஒரு விதமாக இருக்கிறார்கள், ஏழைகளில் மற்றோர் விதமாக இருக்கிறார்கள். கெடுதல் பணக்காரர்களிடம் இருந்தாலும் சரி, ஏழைகளிடம் இருந்தாலும் சரி, அல்லது நம்மிலே இருந்தாலும் சரி, அதை அகற்றவேண்டும் என்பதை நாம் கவனிக்கவேண்டும். இம்மாதிரி பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும், நமக்கும் ஊழியம் செய்யவேண்டும். நல்லவர்கள் என்று கருதப்படுபவரிடத்திலும் குறைகள் இருக்கின்றன; கெட்டவர்கள் என்று கருதப்படுபவரிடத்திலும் குணங்கள் இருக்கின்றன. இவ்வாறு மகாபாரதத்தில் வியாச முனிவர் கூறியுள்ளார். எல்லா இடங்களிலும் குணங்களை ஏற்றுக்கொண்டு குறைகளைத் தவிர்க்க வேண்டும்.

தரித்திர நாராயணனுக்கு சேவை செய்வது விசேஷத் தேவையானது என்று நான் எந்த அர்த்தத்தில் கூறினேன்?

அவர்களின் சூழ்நிலை மிகவும் கெட்டிருக்கிறது, அவர்கள் படும் துன்பம் மிகவும் அதிகம் என்ற கருத்தில்தான் நான் அவ்வாறு கூறினேன். நாம் அவர்களின் துன்பத்தை நிவர்த்திக்கவேண்டும்; அதுதான் நம்முடைய இந்த யாத்திரையின் முக்கிய உத்தேசமாகும்.

சுகதேவரும் ஜனக மகாராஜரும்

சில சமயம் நாங்கள் பணக்காரர்களின் வீடுகளிலும் தங்குகிறோம். அங்கு நல்ல உணவு சாப்பிடுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் என்பதற்காக அல்ல; அவர்களுக்குத் தங்கள் கடமையை விளக்குவதற்காகத்தான். சூரிய நாராயணன் யாராவதொருவர் வீட்டில் பிரவேசிக்கிறரென்றல் அந்த வீட்டிலுள்ள இருளில் மறைந்துகொள்வதற்காக அல்ல, ஆனல் அங்குள்ள இருளை அகற்ற வேண்டும் என்பதற்காகத்தான். அம்மாதிரியே, ஏழைகளின் வீட்டிலுள்ள இருளையும் அகற்றவேண்டும். ஏழைகளின் வீட்டிலுள்ள இருள் அகன்றல் அவர்கள் மறுபடியும் ஏழை எளியவர்களாக இருக்க மாட்டார்கள். இன்று வேறு வழியில்லாமையால்தான் உழைக்கிறர்கள். உழைப்பைத் தவிர்க்க வேண்டுமென்ற மனப்பான்மை இருக்கிறது. "சகோதரர்களே, நீங்கள் சோம்பலை விட்டுவிட்டு கௌரவத்துடன் உழைக்க வேண்டும்" என்று நான் அவர்களுக்குக் கூறுகிறேன். "பீடி சாராயம் குடிப்பதை விட்டுவிடவேண்டும்; சுத்தமாக இருக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்; நீங்கள் தைரியமாக இருக்கவேண்டும்; யாரிடமும் பயப்படக் கூடாது, யாரையும் பயப்படுத்தக் கூடாது" என்று நான் ஏழைகளுக்குக் கூறுகிறேன்.

"சகோதரர்களே, உங்களின் பரீட்சை நடந்துகொண்டிருக்கிறது" என்று நான் பணக்காரர்களுக்கும் எடுத்துரைக்கிறேன்.

பகவான் உங்களுக்குக் கொடுத்த செல்வத்தை ஏழைகளுக்கு ஊழியம் செய்வதில் ஈடுபடுத்துகிறீர்களா, அல்லது ஆடம்பரத்தில் மூழ்கிவிடுகிறீர்களா என்பதை அவர் பார்த்துக்கொண்டிருக்கிறர். பகவான் ஏழை பங்காளன் என்று அழைக்கப்பட்டாரே, அப்படியெனில் அவர் பணக்காரர்களின் எதிரியா? சுகதேவர் ஏழை, ஆனல் அவர் எளியவராக இல்லை. அவர் தரித்திர நாராயணர்களின் பிரதிநிதியாக இருந்தார்; ஆகையால் அவர் பகவானுக்கு அன்பராக இருந்தார். ஜனக மகாராஜர் ஊழியத்தில் ஈடுபட்டுள்ள பணக்காரராக இருந்தார்; ஆகையால் அவரும் பகவானுக்குப் பிரியமுள்ளவராக இருந்தார். குழந்தைகள் அன்புடன் தகப்பனரிடம் ஓடுவதைப் போன்று மக்கள் அனைவரும் ஜனகரிடம் போய் வந்தார்கள். ஏழைகளைச் சார்ந்திருப்பது, பணக்காரர்களைப் பரிசீலிப்பது இதில்தான் அவருக்குப் பெருமை இருக்கிறது. இந்தப் பரீட்சையில் தேறுவோர் பாக்கியசாலிகளாவர்; தேருதவர்கள் அவரது கோபத்திற்கு ஆளாகிறர்கள். ராவணன் சிவபெருமானுக்கு ஊழியம் செய்வதில் தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்த பிறகும் அவன் பகவானின் கோபத்திற்கு ஆளானன். ஆனல் அங்கும் கடைசியில் பகவான் அவன்மீது கருணைகாட்டித் தன்னுடைய ஸ்வரூபத்தில் சேர்த்துக்கொண்டார். இதுதான் பகவானின் மகிமை. பகவான் ராவணனைப் பரிசோதிப்பதற்காக அவனுக்கு ஐசுவரியத்தைக் கொடுத்தார். ஆனல் அந்த ஐசுவரியம் சரியாக உபயோகப்படுத்தப்படவில்லையென்று பார்த்தபோது, அவனை அந்த ஐசுவரியத்திலிருந்து விடுதலைசெய்துவிட்டார். இம்மாதிரி, ஆரம்பத்திலும் கடைசியிலும் கருணைகாட்டினர்.

இடையில் கோபம் உண்டானதாகக் காணப்பட்டதும் கருணையின் வடிவமேயாகும். பகவான் இம்மாதிரியே அனைவரையும் காப்பாற்றுகிறர். காப்பாற்றக்கூடிய அவரின் சக்தியை நாம் நமது பாமர வாக்கால் எப்படி வர்ணிக்க இயலும்! நம்முடைய வாழ்க்கையை நாம் பார்த்தோமானல் நாம் எவ்வளவு பாவிகள் என்பது தெரியவரும். அவ்வளவும் இருந்துங்கூட பகவான் நம்மை நேசிக்கவே செய்கிறர்.

கருணையாளனின் அற்புதக் கருணை

நான் எந்த நம்பிக்கையுடன் இம்மாதிரி கிராமம் கிராமமாகப் போய்க்கொண்டிருக்கிறேன்? ஒவ்வொருவரின் இதயத்திலும் வியாபித்திருக்கின்ற பகவான் விழித்துக்கொள்ளட்டும் என்ற நம்பிக்கையுடன்தான் போய்க்கொண்டிருக்கிறேன். அவர் சில இடங்களில் தூங்கிக்கொண்டிருக்கிறர்; சில இடங்களில் விழித்துக்கொண்டிருக்கிறர். அவர் எங்கு எந்த ரூபத்தில் இருக்கிறர் என்று எப்படி அறிவோம். அவரின் லீலையை அவர்தான் அறியக்கூடும். சூரிய கிரணம் பிரவேசிப்பதனல் குகையில் லட்சக்கணக்கான வருடங்களாக மறைந்திருக்கும் இருள் அகல்வதைப் போன்று, அவர் விழிப்படைகிற இடத்தில் மோகரூபமான எல்லாவித இருளும் அகன்றுவிடும். ஏதாவது ஒரு நாள் எனக்கு குறைவாக பூமிதானம் கிடைக்கிறது. ஒரு நாளைக்கு அதிகமாகக் கிடைக்கிறது. நான் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. இதன் காரணமாக நான் தினந்தோறும் பகவானின் விளையாட்டை தரிசித்துக்கொண்டிருக்கிறேன்.

அன்பின் சக்தி

என் அன்பான சகோதரர்களே! உங்களிடம் ஏதாவது கேட்கக்கூடிய சக்தி என்னிடம் இல்லை. ஆனால் என்னிடத்தில் அன்பின் ஒரு சக்தி இருக்கிறது. அந்த சக்தியைக் கொண்டே நான் கிளம்பியிருக்கிறேன். எனக்கு பணக்காரர்களிடத்திலும், ஏழைகளிடத்திலும் நம்பிக்கை இருக்கிறது; அனைவரிடமும் நம்பிக்கை இருக்கிறது. பாரதத் தாயினிடத்தோ அதிகமான நம்பிக்கையிருக்கிறது. என்னிடத்தில் என்ன அதிகாரம் இருக்கிறது? உங்களைச் சீர்திருத்துவதற்கோ அல்லது கெடுப்பதற்கோ என்னிடம் யாதொரு அதிகாரமும் இல்லை. நான் அம்மாதிரியான அதிகாரத்தையும் விரும்பவில்லை. சகோதரர்களே, என்னிடத்தில் இருப்பன யாவும் மற்றவர்களின் ஊழியத்திற்காகவே என்று நான் எண்ணுகிறேன். நமக்குக் கிடைத்திருக்கிற இந்தச் சரீரம் எதற்காக? நமக்குக் கிடைத்திருக்கும் இந்தக் கண்கள் எதற்காக? திறந்த கண்களை அறிவதற்கும், அழகான ரூபங்களைப் பார்ப்பதற்காகவுமே யாகும். நமக்குக் கிடைத்திருக்கும் இந்தக் காதுகள் எதற்காக? ஞான விஷயமான சர்ச்சைகளைக் கேட்பதற்காகவல்லவா? ஞான சம்பந்தமான விஷயங்களைக் கேட்காத நாளில் இந்தக் காதுகள் காதுகளாக இருப்பதில்லை; பாம்பு வசிக்கக் கூடிய பொந்துகளுக்குச் சமமாக ஆகிவிடுகின்றன. இந்தக் கைகள் எதற்காகக் கிடைத்திருக்கின்றன? மக்களைத் துன்புறுத்துவதற்காகவா? இல்லை; நோயாளிகளுக்கு ஊழியம் செய்வதற்காகவும், பயந்தவர்களுக்குத் தைரியம் சொல்வதற்காகவும், உத்தமர்களுக்கு வணக்கம் செலுத்துவதற்காகவுந் தான். இம்மாதிரி நம் சக்திகள் எல்லாவற்றையும் ஏழைகளுக்கு ஊழியம் செய்வதற்காக ஈடுபடுத்த வேண்டும்.

குறைவாகப் பெற்று கொடுப்பவர்களை அவமானப்படுத்த லாகாது

இந்த ஜில்லாவில் இரண்டு வருடகாலமாக வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இல்லையெனில் இங்கு போதுமான விளைச்சல் உண்டாகியிருக்கும். நிலமிருப்பவர்களின் நிலைமையே இப்படியிருந்தால், முற்றிலும் நிலமில்லாதோரின் நிலைமை எப்படியிருக்கும் என்பதை நீங்கள் ஆராயக் கூடும். ஆகையால் நிலப் பிரசினையைத் தீர்ப்பதற்காக நான் செய்து கொண்டிருக்கும் வேலை அடிப்படையானது. உழுபவர்களுக்கு நிலம் கிடைக்காத வரையில் இந்தியமக்கள் சுகமாக இருக்கமாட்டார்கள், காரியமும் விரைவில் கெட்டுவிடும் என்பது தெளிவு. நிலம் பங்கீடு செய்யப்பட வேண்டுமென்று நீங்கள் அனைவரும் விரும்புகிறீர்கள். குறைந்த பட்சம் எவ்வளவு நிலம் இருக்க வேண்டும் என்பதும் முடிவாக வேண்டும். நிலமில்லாதவர்களின் பிரசினை தீர்க்கப்பட வேண்டுமென்றுதான் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அதற்குப் பின்னர் யாரிடம் தேவைக்குக் குறைவாக நிலம் இருக்கிறது என்பதையும் பார்ப்போம். அப்பொழுது அவர்களின் தேவையும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். முதலாவதாக நாம் எல்லாவற்றிலும் பின்னடைந்த வகுப்பாருக்கு ஊழியம் செய்தால் எல்லோருக்கும் சேவை நடைபெறக்கூடும். ஆகையால்தான், பெரியோர் ஏழைகளுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற போதனையை அளித்துள்ளனர். அதிகமாக நிலம் படைத்தவர்கள் அதிக நிலம் கொடுக்கவே செய்வார்கள். குறைவாக நிலம் வைத்திருப்போருங் கூட, அன்பின் சின்னமாக, சிறிது நிலம் கொடுப்பார்கள். நீங்கள் குறைவாகக் கொடுத்தாலும் பெற்றுக்கொள்வேன் என்பதற்காகத்தான் நான் என்னை உங்கள் குடும்பத்தின் ஒரு பாகஸ்தனைக் கருதிக் கொடுங்கள் என்று கூறினேன். ஆனால் அதிகமாக நிலம் வைத்துக் குறைவாகக் கொடுப்பவர்களிடம் நான் பெற்றுக் கொள்ள மாட்டேன்.

அதிகமாக நிலம் வைத்திருப்பவர்களையும் ஏழைகளையும் நான் அவமானப்படுத்த விரும்பவில்லை. இருவருடைய கௌரவமும் உயர வேண்டுமென்றே நான் விரும்புகிறேன். இன்று பணக்காரர்களைப் பற்றி ஜனங்களிடம் ஏற்பட்டிருக்கும் தவறான எண்ணத்தைப் போக்க வேண்டுமென்று விரும்புகிறேன். நான் நிலத்தை மட்டும் தானமாகப் பெற விரும்பவில்லை. முதலில் அவர்களுக்கு எனது கருத்தைக் கொடுக்க விரும்புகிறேன். கருத்தைப் புரியவைக்காமல் நாம் நிலத்தைப் பெற்றுக்கொண்டால் அது தவறாகும். நான் ஒரு பாகம் கோருவதனால் ஏழைகளின் வேலை நடக்கும் என்பதற்காகத் தான். இதுவே நான் நிலம் கோருவதன் கருத்தாகும். இதுவன்றி இந்தியாவிலுள்ள ஏழைகளின் வேலை நடைபெறாது. கருத்தைப் புரியவைப்பதனால் தான் இந்த வேலை அபிவிருத்தி யடைய முடியும்.

★ இந்தியாவில் துணி ஆலைத் தொழில் ★

கந்துபாய் தேசாய்

சென்ற சில மாதங்களாக மில் துணியின் விலை மிகவும் இறங்கி விட்டதாக மில் முதலாளிகளும் அவர்களின் தரகர்களும் கூச்சலிட்டு வருகிறார்கள். ஆனால் 400 ஆலைகளும் அவற்றின் 150 நிர்வாகிகளும் கடந்த 10 வருஷகாலமாக மக்களை ஏமாற்றி எவ்வளவு லாபமடைந்தார்கள் என்பதை அவர்கள் மறந்து விட்டனர் போலும்! துணி ஆலைகளைப் பற்றிய எல்லா விஷயங்களையும் அறிந்த நிபுணர் ஸ்ரீ கந்துபாய் தேசாய். ஆலை முதலாளிகள் 1940 வருஷம் முதல் 1946-ம் வருஷம் வரை 7 வருஷங்களில் அடித்த கொள்ளை லாபத்தை அவர் ஒரு கட்டுரையின்மூலம் பட்டவர்த்தனமாக்கியுள்ளார். அதன் சாரமே இது.

நாட்டிலுள்ள துணி மில்கள் அனைத்திலும் அடங்கியுள்ள மூலதனத்தின் மதிப்பு ரூ. 50 கோடி. இந்த செலுத்தப்பட்ட மூலதனத்தின் பெரும் பகுதி ஏறக்குறைய 150 நிர்வாக ஏஜண்டுகளான கம்பெனிகள் அல்லது கோஷ்டிகளின் கையில் இருக்கிறது. இந்த 150 மில் முதலாளிகளே இந்த சக்தி வாய்ந்த தொழிலுக்கு உரிமையாளர். இதனால் உற்பத்தியாகும் பொருளை உபயோகிக்கும் கோடிக்கணக்கான மக்களின் நலனைச் சிறிதும் சிந்தியாமல், தம் சொந்த லாபம் ஒன்றையே கருதி இவர்கள் அடிக்கும் லாபம் கொஞ்சமல்ல.

இந்தத் தொழிலில் கட்டடங்களாகவும், நிலமாகவும், யந்திரங்களாகவும் ஏறக்குறைய 100 கோடி ரூபாய்க்கு நிலைத்த மூலதனம் இருக்கிறது. 2 லட்சம் தறிகளும் ஒரு கோடி கதிர்களும் இருக்கின்றன. சென்ற யுத்தத்திற்கு முன்னால் 420 கோடி கெஜம் துணி உற்பத்தியாகியது. 5 லட்சம் ஆட்கள் வேலை செய்தனர். யுத்தம் தொடங்கிய பிறகு, இரவு வேலையும் நடந்ததால் 7 லட்சம்பேர் வேலைசெய்தனர். ஆனால் உற்பத்தி மட்டும் பெருகவில்லை. சர்க்கார் உதவியினால் ஏராளமான லாபம் கிடைத்ததனால் மில் முதலாளிகளுக்கு அலட்சிய புத்தி வந்து விட்டதுதான் இதற்குக் காரணம். யுத்தத்திற்கு முன் இத்தொழிலில் கிடைத்த மொத்த லாபம் 5 முதல் 6 கோடி ரூபாய் வரை ஆகும். நூல், துணி உற்பத்தி ரூ. 60 கோடி; வியாபாரிகள், தரகர் இவர்களுக்குக் கிடைக்கும் 20 சதவிகித மிச்சத்தையும் சேர்த்தால் துணியும் நூலும் சுமார் 72 கோடி ரூபாய் ஆகும்.

1941க்குப் பிறகு துணி விலை ஏறியது; 1943ல் யுத்தத்திற்கு முன் இருந்ததைப் போல் விலை 5½ மடங்கு அதிகரித்துவிட்டது. கள்ளமார்க்கெட் ஆரம்பமாகியதால், இந்த அதிக விலைக்கும் துணி கிடைப்பது அரிதாயிருந்தது. 50 முதல் 100 சதவிகிதம் வரை அதிகம் கொடுத்து மக்கள் துணி வாங்க வேண்டி நேர்ந்தது. 1946ல் சர்க்கார் தலையிட்டார்கள். ஆனால், கள்ள மார்க்கெட் பெருகியதுடன், மில் முதலாளிகள் கூறிய விலைக்கே சர்க்கார் முத்திரையும் கிடைத்து விட்டது. பொதுமக்களை ஏமாற்றுவதற்கான இந்த முயற்சியின் விளைவை கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் விளக்கும்.

(யுத்தகாலத்தில் மிச்சம்—கோடி ரூபாயில்)

வருஷம்	மொத்த லாபம்	ஏஜண்ட் கமிஷன்	பொருளின் விலை (மில்)	வாங்குகிறவர்களுக்கு விலை அடக்கம்
1938	5	1	60	72
1939	5	1	60	72
யுத்த காலத்தில்				
1940	7	1	70	84
1941	23	3	100	120
1942	46	5	150	260
1943	109	10	270	480
1944	85	9	210	370
1945	61	7	180	324
1946	41	5	170	306
உத்தேச மொத்தம்	372	40	1150	1944

இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா கானடா முதலிய தேசங்கள் நேரிடையாக யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருந்தும், அங்கெல்லாம் துணியின் விலை 30 சதவிகிதத்திற்கு மேல் உயரவில்லை. யுத்தத்திற்கு முந்திய வருஷங்களில் மில்களில் உற்பத்தியான துணியின் மதிப்பு ரூ. 60 கோடிதான். யுத்தம் நடந்த 7 வருஷங்களில் இது 164 கோடியாக ஏறிவிட்டது. இதிலும், சர்க்கார் நிர்ணயித்திருந்த விலைக்குத் துணி கிடைப்பது குதிரைக் கொம்புதான். புதிய விலைகள் நிர்ணயமாயின.

கள்ளமார்க்கெட் பெருத்ததால் அதிக விலை கொடுக்க வேண்டித்தான் இருந்தது. இந்தத் தொழிலின் மூலதனம் ரூ. 60 கோடி; ஆனால், ஒரே வருஷத்தில் (1943ல்) 109 கோடிரூபாய் லாபம்; 7வருஷங்களில் சராசரி லாபம் ரூ. 53 கோடி! அதாவது யுத்தத்திற்கு முந்திய வருஷங்களின் உற்பத்தியை விட முக்கால்பங்கு அதிக லாபம் கிடைத்துள்ளது. 1942–45 வருஷங்களில் இத் தொழிலில் கிடைத்துள்ள சராசரி மிச்சம், இதிலுள்ள சாசுவத மூலதனத்திற்குச் சமமாகும்; அதாவது, இந்த 3 வருஷங்களில் மில் முதலாளிகள் லாபம்என்ற வகையில் தொழிற் சாலைகளின் மதிப்பைப் போல் 2½ மடங்குப் பணம் வசூலித்து விட்டார்கள். ஆகையால் நியாயம், நீதி, பொருளாதாரம் ஆகிய எந்த வகையில் பார்த்தாலும் இந்தத் தொழில் இனி அரசாங்கத்தின் சொந்தத் தொழிலாகக் கருதப்படலாம். 420 மில்களின் மொத்தப் பெறுமானத்தைவிட எவ்வளவோ அதிகத் தொகை நிர்ப்பந்தமாய் வசூலிக்கப்பட்டு விட்டதால், எத்தகைய நஷ்ட ஈடும் கொடுக் காமலே சர்க்கார் இத்தொழிலை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேலே குறிப்பிட்ட லாபங்கள் எல்லாம் வரவு செலவுக் கணக்குகளில் இடம் பெறு பவை. ரகசிய அநியாய வழிகளில் கிடைத்த லாபங்கள் இதில் சேரவில்லை. இவை கோடிக் கணக்கில் இருக்கும்.

இந்த கோஷ்டி பருத்திச் சாகுபடி செய் யும் விவசாயிகளின் வயிற்றில் அடிக்கவும் தயங்கவில்லை. தங்களுக்கு இன்றியமையாத மூலப் பொருளான பருத்தியின் விலையை, அதிகாரிகளுடன் தங்களுக்கிருக்கும் சம்பந்தத்தையும் செல்வாக்கையும் பயன் படுத்திக்கொண்டு, முடிந்தவரையில் குறைக் கச் செய்திருக்கிறார்கள். யுத்தத்திற்கு முந்திய வருஷங்களில் துணி விலை 100 என்றால், யுத்த காலத்தில் 273; ஆனால் பருத்தியின் விலையோ 217 தான்.

நாட்டிலுள்ள மொத்தத் துணி வியாபா ரிகள் அடைந்த லாபம் விநோதமானது. இத் தகைய வியாபாரிகள் 400 பேருக்கு மேல் இல்லை. சர்க்காரும் சரி, மில் முதலாளிகளும் சரி, இவர்களைத் தங்கள் கையில் போட்டுக் கொண்டு தாம் அடித்த கொள்ளையில் இவர் களுக்கும் பங்கு கொடுத்தார்கள். ரூ. 60 கோடி மதிப்புள்ள மொத்த விற்பனைக்குப் பிரதிப் பிரயோசனமாக ரூ. 60 லட்சம் கொடுக்கப்பட்டு வந்தது; துணிக் கட்டுப் பாட்டு போர்டு தன் 'புத்திசாலித்தன'த்தால் இந்தக் கமிஷனை 3 சதவிகிதமாக உயர்த்தியது. இவ்வாறு இந்தத் தரகர்களின் வருமானம் 1-லிருந்து 3 மடங்கு ஆகிவிட்டது. ஆனால் துணிவிலை உயர்வால், 1944-ல் இந்த வியாபாரி களுக்கு ரூ. 60 லட்சத்திற்குப் பதிலாக 6 கோடி கிடைத்துள்ளது. இது சாதாரண காலங்களில் இவர்களுக்குக் கிடைப்பதைப் போல் 10 மடங்கு. இவர்களுக்கு முதல் போட வேண்டிய சிரமமோ, நஷ்டம் ஏற்படும் என்ற பயமோ, வேலைசெய்யும் பொறுப்போ கிடையாது. மில் முதலாளிகள் சர்க்கார் ஏஜண்டுகள் ஆகியோரின் தந்திரங் களையெல்லாம் நன்கு அறிந்தோர், இவர்களைத் தவிர வேறில்லை. துணி விலை நிர்ணய-விநியோக இலாகாவில் கொழுத்த சம்பளம் பெறும் ஆயிரக்கணக்கான உத்தியோகஸ்தர் இருக்கிறார்கள். சம்பளத்தைத் தவிர இவர் களுக்குக் கிடைக்கும் 'கிம்பளம்' வேறு. துணிக் கட்டுப்பாட்டின் இந்த ஏற்பாடு சர்க்காரின் அதிகாரத்தையும் செல்வாக்கை யும் கொண்டு ஜனங்களுக்கு கட்டுப்பாட்டுட னும் முன் யோசனையுடனும் செய்யப்பட்ட ஒரு கொடுமையென்றே கருத வேண்டும்.

மக்களின் பொருளாதார நெருக்கடிக்கு முக்கியமான பொறுப்பாளி துணித் தொழில் தான். முதலில் இத்தொழிலில் தான் விலைகள் உயர்த்தப்பட்டன. இதன் விளைவாக இதர பொருள்களும் விலையேறின. துணித்தொழில் ஆரம்பித்துவைத்த தீமைதான் நாட்டின் பொருளாதாரத்தைக் குப்புற வீழ்த்தியது. இன்று நாட்டில் கள்ள மார்க்கெட், லஞ்சப் பேய், பொருளாதார நெருக்கடி என்றுள்ள கஷ்டங்களுக்கெல்லாம் துணி மில் தொழிலில் தொடர்புள்ள முதலாளிகள், வியாபாரிகள், மில்களுக்கான மூலப் பொருள்களிலும் சாதனங்களிலும் வர்த்தகம் நடத்துவோர் முதலானோரிடம் தவறான வழிகளில் ஏராள மான பணம் வந்து குவிந்திருப்பதே காரணம்.

மில் முதலாளிகள் தம்மிடமுள்ள கூலிகளை யாவது நன்றாய் நடத்தி அவர்களுக்கு நியா யம் வழங்கினார்களா? லாபத்தைக் கருதி அவர்களின் நலன்கள் புறக்கணிக்கப் பட்டிருக்கின்றன. பெரும்பாலோரான மில் கூலிகள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை மிகவும் குறைத்துக்கொண்டு பிழைக்க வேண்டியிருக் கிறது. அன்றாட வாழ்க்கைக்கான பொருள் களின் விலையையும் கூலிகளுக்குக் கிடைக்கும் ஊதியத்தையும் கவனிக்கும்

வர்தா

சத்தியன்

காந்திஜி ஆரம்பித்துள்ள அகில இந்திய நிர்மாண ஸ்தாபனங்களுக்கு வர்தா-சேவாகிராமம் ஒரு தலைமை ஸ்தானமாக விளங்குகிறது. வர்தாவில் உள்ள ஸ்தாபனங்களைப்பற்றிய கட்டுரையின் மூன்றாவது பகுதி இது. இதன் முற்பகுதிகள் சென்ற ஜனவரி, பிப்ரவரி மாத இதழ்களில் வெளியாயின.

சூர்காம்:– இது பவனாரிலிருந்து மேற்கில் சுமார் மூன்று மைல் தூரத்தில் இருக்கும் ஒரு சிறிய கிராமமாகும். 1930 வருஷத்திலிருந்து ஆசிரமத்தில் கதர், கிராமக் கைத்தொழில், தீண்டாமை ஒழித்தல், கிராமத் துப்புரவு முதலிய பல வேலைகள் நல்ல முறையில் நடந்து வருகின்றன. தற்போது அந்த கிராமம் வினோபாஜியின் "கிராம சேவை" ஆராய்ச்சிச் சாலையாக இருக்கிறது. வினோபாஜி முன்பு கிராமத் துப்புரவு செய்வதற்காக தினந்தோறும் வந்து கொண்டிருந்தார். இப்போது கிராமத்தவர்களே துப்புரவு செய்து கொள்கிறார்கள். ஸ்ரீ வல்லபஸ்வாமியும் வேறு இரண்டு தொண்டர்களும் இங்கு இருந்துவந்தார்கள்.

சேவாகிராமம்:– இது வர்தாவிலிருந்து கிழக்கில் ஐந்து மைல் தூரத்தில் இருக்கும் ஒரு சாதாரண கிராமமாகும். இந்த கிராமம் மலேரியா ஜுரத்திற்குப் பிரசித்தி பெற்றிருந்தது. இங்கு முன்பு காந்திஜியின் ஆங்கில சிஷ்யையான "மீரா பென்" என்பவர் கிராம சேவை செய்து கொண்டிருந்தார். கிராமத்தில் சென்று வசிக்கவேண்டுமென்று காந்திஜி முடிவு செய்தபோது அவர் இங்கு வந்து வசிக்கலானார். காந்திஜியின் காரணமாகவே இன்று சேவாகிராமம் பிரசித்தி பெற்றிருக்கிறது. அநேக ஊழியர்களை சேவாகிராமம் கவர்ச்சி செய்துவிட்டது. இன்று இங்கு அநேக ஸ்தாபனங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த ஸ்தாபனங்கள் யாவும் சேவாகிராமத்திற்குப் பக்கத்திலேயே இருக்கின்றன.

சேவாகிராமத்தில் வேலை செய்வதற்காகவே காந்திஜி வந்திருந்தார். முன்பிருந்ததைக் காட்டிலும் இப்பொழுது கிராமம் போதுமான அளவு சீர்திருந்தியிருக்கிறது.

சாந்தா நாரூல்கர் என்ற மகாராஷ்டிர சகோதரியார் ஒருவர் இங்கு பல வருஷங்களாக கிராம வேலை செய்துவந்தார். சம்பூர்ண கிராம சேவை தத்துவப் பிரகாரம் இந்த வேலை நடைபெறுகிறது. கிராமத்தில் வைத்திய சாலை, குழந்தைகளின் பாடசாலை, முதியோர் கல்வி முதலிய வேலைகள் நடைபெறுகின்றன. பனைவெல்லம் தயாரிக்கும் வேலையும் நடைபெறுகிறது.

சர்க்கா சங்கம்:– அகில பாரத சர்க்கா சங்கத்தின் தலைமைக் காரியாலயம் சேவாகிராமத்தில் இருக்கிறது. கதர் சம்பந்தமான பல்வேறு ஆராய்ச்சிகளும் நூற்பு-நெசவுப் பயிற்சியும் இங்கு முறைப்படி நடைபெறுகின்றன. ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி முதலிய சர்க்கா சங்கத்தின் முக்கிய தொண்டர்கள் இங்கேயே இருக்கிறார்கள். சர்க்கா சங்கத்தின் தலைவர் ஸ்ரீ தீரேந்திர மஜும்தார் இங்கு அடிக்கடி வந்துகொண்டிருக்கிறார்.

கஸ்தூரிபா ஞாபகார்த்த வைத்தியசாலை:– இங்கு விசேஷமாகப் பெண்கள் குழந்தைகள் ஆகியோருக்கு ஏற்படும் நோய்களுக்கு வைத்தியம் செய்யப்படுகிறது. நோயாளிகள் வந்து வசிப்பதற்கும் இங்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. நர்ஸ் வேலை, மருத்துவம் பார்த்தல் ஆகியவற்றில் இங்கு பயிற்சியளிக்கப்படுகிறது. இந்த ஸ்தாபனம் கஸ்தூரிபா ஞாபகார்த்த நிதியின் மூலம் நடைபெறுகிறது.

(முன் பக்கத் தொடர்ச்சி) **இந்தியாவில் துணி ஆலைத் தொழில்**

பொழுது, ஊதியம் முன்பு இருந்ததைவிடக் குறைந்திருக்கிறது; அதாவது, அவர்களுக்குக் கிடைக்க வேண்டியதில் 15 முதல் 25 சதவிகிதம் வரை குறைந்த கூலியே கிடைக்கிறது.

பலரகத் துணிகளின் உயர்ந்த விகித கிரய ஜாபிதாவை கவனித்து ஆராய்ந்தால், 'பான்லி' துணிகளுக்கும் கலர் துணிகளுக்கும் வைக்கப்பட்டிருக்கும் விலையையும் அடக்க விலையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, இதை ஒரு பகற்கொள்ளை என்பதைத் தவிர வேறொன்றும் சொல்லத் தோன்றவில்லை. அதிகக் கூலி, பொருள்களின் விலையேற்றம், உற்பத்திக் குறைவு முதலானவற்றால் ஆகும் அதிகச் செலவைக் கருதும்பொழுதும் துணிக்கு இடப்பட்டுள்ள விலை பல மடங்கு அதிகமாகும். சுருங்கக் கூறினால், மில் முதலாளிகள் எல்லா வகையிலும் தங்கள் லாபத்தைப் பெருக்குவதற்கு முழு முயற்சியும் செய்திருக்கிறார்கள். ★ ★ ★

ஹிந்துஸ்தானி தாலிமி சங்கம்:– இங்கு ஒரு ஆதாரப் பாடசாலையும், போதனுமுறைப் பள்ளியும் நடைபெறுகின்றன. காந்திஜியின் ஆதாரக் கல்வி முறையின் எல்லா ஆராய்ச்சிகளும் இங்கு நடைபெறுகின்றன. இயற்கை, சமூகம், தொழில் ஆகியவை கல்விக்கு அடிப்படையாக இருகின்றன. நூற்பு, நெசவு, விவசாயம் முதலியவை தான் முக்கியத் தொழில்களாகும். ஸ்ரீ அரியநாயகம், அவரது மனைவியார் ஸ்ரீமதி ஆஷாதேவி ஆகிய இருவரும் இதற்கு முறையே காரியதரிசி, உப காரியதரிசிகளாவர். கஸ்தூரிபா நிதியின் கீழ் சில சகோதரிகளுக்கு இங்கு பயிற்சி யளிக்கப்டுகிறது. "நயி தாலிம்" என்ற மாதப் பத்திரிகை முன்பு இங்கிருந்து வெளியாகிக்கொண்டிருந்தது.

சேவாகிராம ஆசிரமம்:– வர்தாவிலுள்ள எல்லாவற்றிலும் பிரசித்திபெற்ற ஸ்தாபனம் சேவாகிராம ஆசிரமமாகும். காந்திஜி இங்கு வசித்துவந்தார். ஆசிரமத்தில் கொல்லாமை, உண்மை, கள்ளாமை, பிரம்மசரியம், வெளவாமை, உடலுழைப்பு, நாவடக்கம், அஞ்சாமை, சர்வ சமய சமரசம், சுதேசி, தீண்டாமை அகற்றல் என்ற பதினொரு விரதங்களை அனுஷ்டிக்கும் முயற்சி நடை பெறுகிறது. காலை மாலை இரண்டு நேரங்களிலும் பிரார்த்தனையும், மத்தியானம் நூற்பு வேள்வியும் நியதிப் பிரகாரம் நடைபெற்று வருகிறது. ஸ்ரீ பன்ஸாலி, சிமன்லால் பாயி (நிர்வாகி), சகன்லால் காந்தி, அவரின் தர்மபத்தினி காசி பஹன் முதலியவர்கள் ஆசிரமத்தின் முக்கியஸ்தர்களாவர். ஆசிரமத்தில், எல்லா வேலைகளும் தாங்களாகவே செய்வதற்குப் பயிற்சி யளிக்கப்படுகிறது; பெரும்பாலும் சேவா மனப்பான்மை யுள்ளவர்கள்தான் வசிக்கிறார்கள். (முற்றிற்று)

★ ★ ★

பூமிதான வினியோகம் — குடியானவனின் பூரிப்பு

ஆச்சாரிய வினோபாஜிக்குக் கிடைத்து வரும் பூமிதான நிலங்களை வினியோகிக்கும் தொண்டர்களுக்கு ஒரு கஷ்டம் நேர்ந்துள்ளது. நிலம் பெற்றுக் கொள்ளும் விவசாயிகளிடம், அது கிரயத்திற்கல்ல, இனமாகவே வழங்கப்படுகிறது என்று புரியவைப்பது சிரம்மா யிருக்கிறது என்று நாகபுரி "ஹித-வாதா" பத்திரிகையின் நிருபர் எழுதுகிறார்.

மத்தியப் பிரதேச பூமிதான யக்ஞ சமிதியின் அமைப்பாளரான ஸ்ரீ தாதாபாய் நாயிக் யோட்மால் ஜில்லாவில் கோலாப்பூர் தாலுகாவிலுள்ள சிச்சேரி என்ற இடத்திற்கு ஒரு முறை சென்றிருந்தார். ஸ்ரீ ஆர். கே. பாட்டீல் 250 எக்கர் நிலம் பூமிதானமாகக் கொடுத்திருந்தார். அதில் 72 எக்கரை வினியோகிப்பதற்காகவே அவர் அங்கு சென்றிருந்தார். ஸ்ரீ பாட்டீலின் வக்கீல்களும் இந்த வேலையில் ஒத்துழைப்பதற்காக அங்கு சென்றிருந்தனர்.

நிலம் பெற உத்தேசித்துள்ளவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. பிரார்த்தனையுடன் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. ஸ்ரீ நாயிக் தான் அங்கு வந்திருப்பதன் நோக்கத்தைத் தெரிவித்து, யார் யாருக்கு நிலம் வேண்டுமென்று விசாரித்தார். எல்லோருக்கும் ஆச்சரியமாகப் போய்விட்டது. 'இது என்ன அதிசயம்! நிலம் இனமாகவா? இதில் ஏதாயினும் சூது இருக்குமோ?' இவ்வாறெல்லாம் குசுகுசென்று பேசிக் கொண்டனர்.

இதில் எவ்விதமான சிக்கல்களும் இல்லையென்பதை அவர்களுக்கு விளக்க ஆறு மணி நேரத்திற்கு மேல் ஆயிற்று. பாட்டீலின் வக்கீல்களும் விஷயத்தை எடுத்துச் சொன்னார்கள்.

விவசாயிகள் வீட்டுக்குச் சென்றனர். எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம். இரவு கழிந்து கொண்டிருந்தது; பலருக்குத் தூக்கமே வரவில்லை. பொழுது புலர்ந்ததும், ஸ்ரீ நாயிக் ஊரை விட்டுப் புறப்படும் சமயம் நெருங்கியது. ஒவ்வொருவராய் அவரது குடிசைக்குச் சென்று, நீர் மல்கிய கண்களுடன் அவர் கொடுத்த கொடையைப் பெற்றுக்கொண்டனர். அவ்வாறு பெற்றுக் கொண்டதை நன்றி பெருகும் புன்னகையுடன் மௌனமாய் அங்கீகரித்தனர், அவர்களது குடும்பத்தார்.

ஸ்ரீ நாயிக் அந்த கிராமத்தில் மொத்தம் 72 எக்கரை, 6 ஹரிஜனங்களுக்கு 30 எக்கரும் மீதம் 42 எக்கரை மற்றும் 10 பேருக்குமாகப் பங்கிட்டுக் கொடுத்தார்.

★ சர்க்கார் சம்பளமும் நிர்மாண ஊழியரும் ★

ஸ்ரீகிருஷ்ணதாஸ் ஜாஜு

தற்போது சர்க்கார் சேவையிலுள்ள நிர்மாண வேலையில் ஈடுபாடு கொண்ட ஊழியர் ஒருவர் ஹரிஜன் ஆசிரியருக்கு எழுதுகிறார்:

"சர்க்கார்மூலம் நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றுவதை நோக்கமாய்க் கொண்டு, நம் ஸ்தாபனங்களில் உள்ள நிர்மாண ஊழியர்கள் சிலர் சர்க்கார் சேவைக்குச் செல்கிறார்கள். நம் ஸ்தாபனங்களில் அவர்களது வாழ்க்கையில் எளிமையும் சிக்கனமும் இருந்தது. தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் செய்யவேண்டிய கடமைகளைச் சரியாய் நிறைவேற்றுவதற்கு, அவர்கள் சர்க்காரிடமிருந்து எவ்வளவு சம்பளம் பெறலாம் என்னும் விஷயத்தில் தங்கள் ஆலோசனையை வேண்டுகிறேன். சர்க்காரின் சம்பள விதிப்படி அவர்களுக்குக் கிடைப்பதை ஒப்புக் கொள்ளலாமா? இல்லையானால், உயர்ந்தபட்சம் எவ்வளவுதான் இருக்கவேண்டும்? ஒரு நிர்ணயமான வரையறையைத் தெரிவிக்க வேண்டுகிறேன். சர்க்காரின் சம்பள விதிகளுக்கிணங்க அவர்களுக்குக் கிடைக்கும் உயர்ந்த சம்பளத்தை ஒப்புக் கொள்வார்களானால், நமது ஸ்தாபனங்களிலும் வேலைத்துறைகளிலும் அவர்களுக்கு அதே கௌரவத்தை அளிக்க வேண்டுமா? சர்வோதயத் திட்டங்கள், ஆதாரக் கல்வி, ஆதிவாசிகள் முன்னேற்றம் போன்ற வேலைகளில் சர்க்கார் சேவையில் சேர்ந்துவரும் நம் ஊழியர்களில் பலர் இவ்விஷயத்தில் தீர்மானமான ஒரு யோசனையை எதிர்பார்க்கிறார்கள். சர்க்காரில் உயர்ந்த சம்பளம் வாங்குவதனால் ஏற்படும் தீமைகளில் ஒன்று, மற்ற ஊழியர்களிடையே அதனால் அதிருப்தி யுண்டாகிறது. சாதாரண ஊழியர்களிடமுள்ள ஈடுபாடு குறைந்து அவர்களும் சர்க்கார் உத்தியோகத்தில் நுழைவதற்கு ஆரம்பிக்கிறார்கள். ஆனால், சர்க்கார் உத்தியோகம் ஒரு சிலருக்குத்தானே கிடைக்கும்? பெரும்பான்மையோர் ஸ்தாபனங்களில்தான் இருக்க வேண்டி நேரும். "ஹரிஜனி"ல் இவ்விஷயத்தைப் பற்றி விரிவாக எழுதவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்."

இக்கடிதத்தில் குறிப்பிட்ட விஷயம் பொதுஜன சேவையில் முக்கியமானது. இந்த நிருபரின் வேண்டுகோளுக்குப் பதிலளிக்கும்படி என்னை ஹரிஜன் ஆசிரியர் வேண்டிக்கொண்டிருக்கிறார். இந்தக் கேள்வி சிக்கலானதுதான். நான் எழுதுவது சிலருக்குப் பிடிக்காமலிருக்கலாம். இருப்பினும், இவ் விஷயத்தைப் பற்றிய பாரபட்சமற்ற விவாதம் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் நன்மை பயக்குமாதலால், எனது கடமை என்று எழுதுகிறேன். நிருபரின் கேள்வி நிர்மாண ஊழியர்களைப் பற்றியது மட்டும் என்றாலும், அது சர்க்கார் உத்தியோகத்திலுள்ள எல்லோருக்கும் பொதுவானது. எனவே இதை ஆழ்ந்து ஆராய்தல் நலம்.

காந்திஜி உப்பு சத்தியாக்கிரகத்தின்போது அப்போதிருந்த வைசிராய்க்கு ஒரு கடிதம் எழுதினார்; அதில் சாதாரண இந்தியனின் வருவாயையும் வைசிராயின் சம்பளத்தையும் குறிப்பிட்டு, இரண்டுக்கும் உள்ள மலையும் மடுவும் போன்ற வித்தியாசத்தையும், நம் வறிய நாட்டுக்கு அதனால் விளையும் பெரும் அநீதியையும் எடுத்துக் காட்டியிருந்தார். காங்கிரஸின் பிரதிநிதி யென்ற ரீதியில் அக்கடிதம் எழுதப்பட்டது. இப்போது எல்லாப் பகுதிகளிலும் காங்கிரஸ் சர்க்கார்கள் தான் ஆதிக்கத்தில் உள்ளன. 'காந்திஜியின் குற்றச்சாட்டு அப்போதிருந்த பிரிட்டிஷ் சர்க்காருக்குத்தான், நமக்கு அல்ல' என்று நாம் எண்ணிக்கொள்ளக் கூடாது. பண மதிப்புக் குறைந்ததும் இந்தியனின் சராசரி வருமானமும் சர்க்காரின் கீழ் கிடைக்கும் உயர்ந்தபட்சச் சம்பளமும் முன்னிருந்தது போல் அவ்வளவு பெரும் அளவில் வித்தியாசப்படவில்லை யென்பதும் உண்மைதான். இருந்தாலும் இப்போதுள்ள விகிதத்தை நாம் கருதாமலிருக்கமுடியாது. ஒன்றுக்கு 250, அல்லது 300 என்ற விகிதத்தில் உள்ளன, இந்தியரின் சராசரி வருமானமும் சர்க்காரின் உயர்ந்தபட்சச் சம்பளமும். இந்த பேதம் அரசியலமைப்புச் சட்டத்திலேயே இடம் பெற்றுவிட்டதென்பது வருந்தத்தக்கதுதான். சர்க்காரின் பிரதானமான பதவியிலுள்ளவர்களின் சம்பளங்கள் அதில் நிர்ணயமாகியுள்ளன. தேசத்திற்கு என்ன நேர்ந்தாலும் சரி, அதை வறுமை வாட்டினாலும் அல்லது வேறு விதமானாலும், அந்த சம்பள விகிதங்களைத் தொடவுங் கூடாது. அதில் இன்னொரு விதியும் இருக்கிறது. அநேகமாய் சர்க்கார் இலாகாக்கள் எல்லாவற்றிலும் இது நடைமுறையில் உள்ளது. ஒரு உத்தியோகஸ்தர் ஒரு சில நாட்களுக்குமட்டும் வேறொரு உயர்ந்த பதவியை

வகித்தாலும், அந்தப் பதவிக்கான உயர்ந்த சம்பளம் அவருக்குக் கிடைக்கவேண்டு மென்பது.

சர்க்காரின் சம்பள விகிதம்பற்றிய விஷயம் "ஹரிஜனி"லும் பிறவற்றிலும் பல முறை விவாதிக்கப்பட்டிருக்கிறது. பார்லிமெண்டிலும் இதைப்பற்றிய விவாதம் நடந்தது. ஆனால் சம்பளங்களைக் குறைப்பதைப் பற்றிய கவனம் சர்க்காருக்கு இருப்பதாக எவ்விதமான அறிகுறியும் இல்லை. பண்டித ஜவாஹர்லால் நேரு தமது தேர்தல் சுற்றுப் பிரயாணத்தின் போது, சென்ற டிசம்பரில், இக்கேள்விக்குப் பதிலளித்திருக்கிறார். பத்திரிகையில் கண்டபடி, அவர் குறிப்பிடும் அம்சங்கள் பின்வருவன:

1. சர்க்கார் அதிகாரிகள் மட்டும் பெரும் சம்பளங்கள் வாங்குகிறார்கள் என்பதில்லை. கைத்தொழிலதிபர்களும், வக்கீல்களும், மற்றவர்களுந்தான் அதிக ஊதியம் பெறுகிறார்கள்.

2. காங்கிரஸ் மகாசபை உயர்ந்தபட்சச் சம்பளமாக நிர்ணயித்த ரூ. 500 என்பது, இப்போது 2500 அல்லது 2000 ரூபாய் ஆகும். வருமான வரி போன்றவை நீங்கலாக பிரதம மந்திரிக்குக் கிடைப்பது ரூ. 1950 மட்டுமே. சர்க்காரின் பிரதான அதிகாரிக்கு 'பப்ளிக் சர்விஸ் கமிஷன்' ரூ. 3000 சம்பளமாக வரையறுத்திருக்கிறது.

3. ஜனாதிபதிக்கு வருமான வரியின்றி ரூ. 5000ம் சில அலவன்சுகளும் கிடைக்கின்றன. நாட்டின் அந்தஸ்து கௌரவம் ஆகியவற்றின் சின்னம் ஜனாதிபதிதான். அந்தஸ்தையும் கௌரவத்தையும் பேணி வருவதற்காக இந்த உயர்ந்த சம்பளம் என்பதல்ல, ஆனால் சமூக சம்பந்தமான பலவிழாக்களிலும் நடவடிக்கைகளிலும் அவர் கலந்துகொள்ள வேண்டியிருப்பதுடன் தர்மக் காரியங்களுக்குப் பெரும் அளவில் நன்கொடையளிக்கவும் வேண்டியவராகிறார், சர்க்காரின் தலைவர் என்ற ஹோதாவில் அவரது கௌரவத்திற்கும் அந்தஸ்திற்கும் ஏற்ப வாழவேண்டியவராகிறார். ஜனங்கள் விரும்பினால் அவரது சம்பளத்தைக் குறைக்கலாம். ஆனால் அதனால் நாட்டின் பொருளாதார நிலையில் எவ்வித நன்மையும் ஏற்பட்டுவிடாது.

ஸ்ரீ நேரு நாட்டின் மாபெரும் தலைவர்; ஆனதால் அவரது அபிப்பிராயந்தான் நிலைபெறும். ஆனால், மற்றொரு பலமான ஆட்சேபமும் இந்தப் பிரசினையில் இருக்கிறது.

முதலில் குறிப்பிட்ட காரணத்தில் தொழில்களிலும், சட்டத்திலும், மற்ற லாபகரமான துறைகளிலும் ஈடுபட்டுள்ளவர்களுக்கு கிடைக்கும் பெருத்த வருமானத்தைப்பற்றிச் சொல்லப்பட்டது. நல்ல வருமானத்தைக் கொண்ட மற்ற தொழில்கள் இருக்கும்போது குறைந்த சம்பளத்தில் சர்க்கார் உத்தியோகத்திற்குத் திறமைசாலிகள் வரமாட்டார்கள் என்ற கருத்து அதில் வெளியாகிறது. இந்தியாவைப் போன்ற ஒரு பெரிய நாட்டை நிர்வகிப்பதற்குத் திறமைசாலிகள் ஏராளமாய் என்றென்றும் தேவைதான் என்பதும், அதற்குத் தக்கவாறு சம்பளமும் உயர்ந்திருந்தால் தான் அவர்கள் சர்க்காரில் சேருவார்கள் என்பதும் சரிதான். சாதாரண உத்தியோகஸ்தர்களைப் பொறுத்தவரை இந்த அனுமானத்தில் சிறிது நியாயமிருக்கிறது. ஆனால் உயர்ந்த அதிகாரிகளுக்கும், பணமே பிரதானமான லட்சியம் என்றிருப்பது உகந்ததல்ல. சாதாரண வியாபாரிகள், தொழிலதிபர்களிலிருந்து அவர்கள் வேறுபட்டவர்கள். நாட்டை நிர்வகிக்கும் பெரும் பொறுப்பு அவர்களைச் சார்ந்துள்ளது. நிர்வாகம் நல்லதாகவோ கெட்டதாகவோ அமைவது அவர்கள் கையிலுள்ளது. பொதுஜன ஊழியர்களால் அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். பணம் சம்பாதிக்கும் சுயநலத்தைக் கொண்டு சர்க்காரில் சேர்வது உகந்ததல்ல. சேவை உணர்ச்சியால் அவர்கள் தூண்டப்படவேண்டும். ஒருவரின் அபிலாஷையை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு இருக்கவேண்டியதுதான். ஆனால் சம்பாத்தியம் ஒன்றே மனிதனின் பெரும் நோக்கமல்ல. மேலும் நாட்டின் நிர்வாகத்தை நடத்துவதென்பது அவர்களின் வாழ்க்கை லட்சியத்தைப் பூர்த்திசெய்யும் மிகப் பெரிய சாதனையாகும். சாதாரண பொருளீட்டுவோருக்கும் சமூக ஊழியர்களுக்கும் முக்கிய வித்தியாசம் இதுதான்.

பதவி உயர உயர சம்பளம் உயர்வது சர்க்கார் சம்பளத்தில் உள்ள மற்றொரு பெரிய குறை. ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பின் சர்க்காரின் பலரக மேல் வகுப்பு உத்தியோகஸ்தர்களின் தேவைகளுக்குள் அதிக வித்தியாசம் இல்லை. உயர்ந்த பதவிக்கு சம்பளத்திலும் உயர்வு என்ற விதிக்கு எவ்விதமான தார்மிக அடிப்படையும் இல்லை. உயர்ந்த பதவியால் ஏற்படும் பெரும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக சம்பளத்திலும் உயர்வு கொடுப்பதென்றால், ஒவ்வொருவரும் தமது திறமையளவுக்கே வேலை செய்ய முடியுமென்பதும், அவர் வகிக்கும் ஒவ்வொரு உத்தியோகத்திலும் தம் முழுத் திறமையுடன்

வேலை செய்யவேண்டும் என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். சம்பள உயர்வளிப்பது, அந்த உத்தியோகஸ்தருக்குள்ள அதிக அறிவுத்திறனைக் காட்டுகிறதென்ற வாதம் ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல. ஏனெனில், உத்தியோக உயர்வு பெரும்பான்மையும் அதிக கால சேவையைப் பொறுத்தே அளிக்கப்படுகிறது. அதிக நிர்வாகப் பொறுப்புடன் கூடிய பதவிக்கு ஒருவரை உயர்த்துவதே அவரது அறிவுத் திறனுக்கு அளிக்கும் மதிப்பும் வெகுமானமும் என்று கருதவேண்டும். உயர்ந்த பதவியிலுள்ளோர், தம் பதவியை நிர்வகிப்பதுமட்டுமல்லாமல் தமக்குக் கீழுள்ளவர்களுக்கு தேசிய சேவையில் ஆர்வமூட்டவும் வேண்டும். பொதுஜன சேவைக்கும் தியாகத்திற்கும் தாமே உதாரணமாக இருந்தால்தான் இது சாத்தியமாகும். ஆதலால், நாட்டின் வறுமை நிலையை உத்தேசித்து உயர்ந்த உத்தியோகஸ்தரின் சம்பளம் நியாயமான வரம்புக்குள் இருப்பதுதான் சரி.

சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு உயர்ந்த சம்பளம் வழங்குவது ஓரளவில் நியாயந்தான் என்றாலும், கவர்னர், மந்திரி, சட்டசபை அங்கத்தினர் முதலிய விசேஷப் பதவியிலுள்ளவர்களுக்கு அது பொருந்தாது. அவர்கள் முற்றிலும் வேறுபட்ட பிரிவினர். ஜனங்களின் பிரதிநிதிகள் என்ற முறையில், அவர்களுக்கு சேவை செய்யும் நோக்கத்துடன் பதவி ஏற்றவர்கள். ஜனங்களுக்கு வழி காட்டவும் தலைமை தாங்கவும் வேண்டியவர்கள். இப்படிப் பட்டவர்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை என் உயர்த்திக்கொள்ளவேண்டும்? பதவியின் அந்தஸ்தையும் கௌரவத்தையும் காத்து வருவதன் அவசியத்தையும், அதற்கு அதிக சம்பளம் கொடுக்கவேண்டியதன் அவசியத்தையும் ஸ்ரீ ஜவாஹர்லால் தெரிவித்திருக்கிறார். ஆனால் ஒரு கேள்வி: ஒரு பதவியின் கௌரவமும் அந்தஸ்தும் தூய எளிய வாழ்க்கையால் விளங்குகிறதா அல்லது பணத்தையும் ஆடம்பரத்தையும் கொண்டா? பிரிட்டிஷார் உயர்ந்த ஆடம்பரமான வாழ்க்கையை அனுஷ்டித்தார்கள். பொருளாதாரத் துறையில் சுரண்டுவதும், ஜனங்களைப் பணிய வைப்பதும், ஏகாதிபத்திய ஆட்சியைப் பாதுகாப்பதும் அவர்களது லட்சியம். ஆனால் அதே நிலைமை இக்காலத்திய ஜனநாயகத்திற்கும் இந்தியாவின் பரம்பரைப் பண்பாட்டிற்கும் ஒத்ததல்ல. மகாராஜாக்களைக் காட்டிலும் துறவிகளே அதிகம் கௌரவிக்கப்படுகிறார்கள் என்பது ஞாபகமிருக்கலாம். அரசர்களிலும் பணக்காரர்களிலுங்கூட, எளிய நியமமான வாழ்க்கை நடத்துபவர்களே ஆடம்பரமாய் வாழ்வோரைக் காட்டிலும் அதிகமாய் கௌரவிக்கப்படுகிறார்கள். இந்நிலையில், கௌரவத்தையும் அந்தஸ்தையும் செல்வத்துடனும் ஆடம்பரத்துடனும் இணைப்பது நம்மைப் போன்ற ஏழை நாட்டினருக்குப் பெருமை தருவதாகுமா?

தற்போதுள்ள மந்திரிகளில் பெரும்பாலோர், பொருளாதாரத் துறையில் சாதாரண மத்தியதரவகுப்பினரைச்சேர்ந்தவர்கள்தான்; பதவிக்கு வருமுன் எளிய வாழ்க்கை வாழ்ந்தவர்கள்; நடந்து செல்வதற்கோ, ரயிலில் மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்யவோ தயங்கியவர்களல்ல. மந்திரிகள் ஆனவுடன் மட்டும் தங்கள் வாழ்க்கை முறையை என் மாற்றிக் கொள்ளவேண்டும்? சுயராஜ்யப் போராட்டத்தில், கடந்த 25 வருஷமாக அவர்களில் பலர் பெரும் தியாகம் செய்திருக்கிறார்கள். வாழ்க்கையில் பல வருஷங்கள் சிறையில் இருந்த பொழுது எவ்வித சம்பாத்தியமும் இல்லை. இப்போதுமட்டும் கொழுத்த சம்பளமில்லாமல் வாழ முடியவில்லை யென்பது எப்படி? அப்போதுமட்டும் தியாகத்திற்கு அவசியம் இருந்தது, இப்போது அதற்கு அவசியம் இல்லை என்பதா? நிர்வாகத்திலும் காங்கிரஸிலும், பொதுவாய் தேசம் முழுதிலுமே நிலவும் லஞ்ச ஊழலைப்பற்றி நம் தலைவர்கள் பெரிதும் கவலையடைந்திருக்கிறார்கள். அதை ஒழிப்பதற்குச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டும் இருக்கிறார்கள். நாம் தியாகத்தில் உயராமல் நம் லட்சியம் நிறைவேறுமா என்பது சந்தேகந்தான். தங்களுக்கு வழி காட்டுவதற்கு மக்கள் எவரை எதிர்பார்க்கிறார்களோ அத்தலைவர்கள் தியாகத்திற்கு உதாரணமாய்த் தாங்களே முன்வராதவரை, ஜனங்களிடத்தில் நாம் தூய்மையை எவ்வாறு எதிர்பார்க்க இயலும்? சரியான வாழ்க்கை இன்னதுதான் என்று வகுத்துக்காட்ட கவர்னர், மந்திரி, மற்றும் உயர்ந்த பதவியிலுள்ளோர் ஆகியோரைத்தான் ஜனங்கள் எதிர்பார்க்கிறார்கள். நாட்டின் நன்மையைக் கருதி அவர்கள் தங்கள் சௌகரியங்களையும் சம்பளத்தையும் குறைத்துக்கொள்ளவும், எளிய வாழ்க்கை நடத்தவும் வேண்டும்.

சம்பளங்களைக் குறைப்பதால் நாட்டின் பொதுவான பொருளாதார நிலைமையில் அதிக மாறுதல் ஒன்றும் ஏற்பட்டு விடாதென்கிறார் ஸ்ரீ நேரு. இது உண்மைதான். ஆனால் செலவுகளைச் சிக்கனப்படுத்துவது மட்டுமல்ல, நாட்டின் வறிய நிலையில் இத்தகைய

பெரும் சம்பளங்கள் பொருத்தமானவையா என்பதுதான் கேள்வி. ஜனங்கள் தம்மிலும் உயர்ந்தவர்கள் என்று யாரைக் கருதுகிறார்களோ அவர்களது வழியைக் கடைப்பிடிக்கவே விரும்புவார்கள். இந்த உயர்ந்தவர்கள் தங்கள் கௌரவத்தையும் அந்தஸ்தையும் பாதுகாக்கப் பெருவாரியான சம்பளங்களை நாடுவார்களானால், மற்றவர்களும் பணம் சம்பாதிப்பதிலேயே தங்கள் சக்தியையும் சாமர்த்தியத்தையும் செலவிட முற்படுவது இயல்புதான்.

பரிசுத்தமான தார்மிக வாழ்வின் அவசியத்தை ஜனங்களுக்கு உணர்த்தவேண்டிய தருணம் வாய்த்துள்ளது. அதற்கு உயர்ந்தவர்களின் நடத்தை அவர்களைத் தங்கள் உன்னத வழியில் சேர்ப்பதாய் அமையவேண்டியது அவசியம்.

விவாதத்திற்காக, இப்போதுள்ள சம்பள அளவுகள் நிர்வாகத் திறமையை உத்தேசித்து நியாயமானவை என்றே வைத்துக்கொள்வோம். அப்படியானால் அவ்வளவு தேவையில்லாதவர்களும் அதே சம்பளத்தை ஒப்புக்கொள்ளலாமா என்ற கேள்வி எழுகிறது. போதிய வருவாய் தரும்படியான சொத்துள்ளவர்களும் மக்கள் அல்லது சகோதரர்களின் சம்பாத்தியத்தைக்கொண்டு குடும்பத்தைப் பராமரித்துவரும் பலரும் உத்தியோகத்திலிருக்கிறார்கள். சுருங்கச் சொன்னால், பழங்கால நியதிப்படி, அவர்கள் வானப்பிரஸ்தாசிரமத்திற்குச் செல்லலாம். அத்தகையோர் சர்க்கார் முழுச் சம்பளமும் தர முற்பட்டாலும், அதை எவ்வாறு அங்கீகரிக்கலாம்? ஜனங்களுக்குத் தக்கவழி காட்டுவதற்காக அவர்கள் இந்தத் தியாகத்தையாவது செய்யலாகாதா? விதிகளின்படி தங்களுக்குக் கிடைக்க வேண்டியதில் மிகவும் சொற்பச் சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்கள் ஒரு சிலர் இருக்கிறார்கள். ஆனால் ஜனங்களின் அல்லது மற்ற அதிகாரிகளின் கவனத்தைக் கவரும் அளவில் அவர்களின் எண்ணிக்கை அதிகமாக இல்லை. சில சமயங்களில் அவர்களின் பெயர் வெளிவராமல் செய்வதும் உண்டு. இப்போது வாங்குவதை விடக் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்யவும் சிலர் சித்தமாயிருக்கிறார்கள். ஆனால் தங்கள் சகபாடிகளின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும் என்ற பயத்தினால் அவர்கள் தயங்குகிறார்கள் என்று தெரிகிறது. சர்க்கார் ஊழியத்தினுள்ள சூழ்நிலையில்தான் தவறுள்ளது. தங்கள் சம்பளம் முழுவதையும் வாங்கிக்கொள்வோர் வாங்கிக்கொள்ளட்டும், வேறு வருமானம் உள்ளவர்கள் அல்லது குறைந்த தேவை உள்ளவர்கள் தங்கள் சம்பளம் முழுவதையும் அல்லது ஒரு பகுதியை வாங்காமல் சர்க்காருக்கே விட்டுவிடும்படியான ஒரு மாறுதலைச் செய்யவேண்டியது அவசியம்.

மேற்கண்ட விவாதத்திலிருந்து, நிருபரின் கேள்விகளுக்கு பதில் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். பொதுவாக நாட்டின் அரசியல் அமைப்பு மூன்று பாகங்களாலானது என்று வினோபாஜி தெரிவித்திருக்கிறார். நிர்வாகத்தை நடத்த அதிகாரத்திலுள்ள கட்சி; நியாயமானவற்றிற்கு ஒத்துழைப்பையும் ஆக்க ரீதியில் எதிர்ப்பையுங்கொண்ட எதிர்க்கட்சி; அதிகார அரசியலில் ஈடுபடாமல் மக்களின் சேவையிலேயே தம்மை அர்ப்பணித்துக்கொள்ளும் ஒரு கட்சி பேதமும் இல்லாத சமூக ஊழியர்களின்வர்க்கம் மூன்றாவது. சுயநலமற்ற இந்த ஊழியர் வர்க்கம் வளர்வதையும் வலிமை பெறுவதையும் பொறுத்துத்தான் நிர்வாகமும் ஜனநாயக சக்திகளும் நேர்மையாகவும் ஊழலில்லாமலும் தார்மிக வரம்புக்குள்ளும் நடப்பது சாத்தியமாகும். நிர்மாண ஊழியர்கள்தான் இந்த மூன்றாவது கூட்டத்தை ஆக்க வல்லவர்கள் என்பது வாசகர்களுக்கு நன்றாய்த் தெரியும். ஒரு விதத்தில் நாட்டிற்கு நலந்தரவல்லது எதுவும் நிர்மாண ரீதியானது எனலாம். ஆனால் பொதுவாய் அஹிம்சையை லட்சியமாகக் கொண்டதும் காந்தீயத் திட்டத்தைப் பரப்புவதுமான வேலைக்குத்தான் நிர்மாண வேலை என்ற சொல் வழங்கப்படுகிறது. மற்றவைகளில், இந்த நிர்மாண ஊழியர்கள் அபரிக்கிரகம் அதாவது அவாவின்மையையும் விரதமாகக் கொள்வார்கள். அவர்களது வாழ்வில் இது முக்கியமான பண்பு. சர்வோதய சமூகத்தில் பொருளாதார சமத்துவமும் முக்கிய அம்சமாயிருக்கும். அவ்வாறிருக்க அவர்கள் உயர்ந்த சம்பளங்களை எவ்வாறு அங்கீகரிப்பர்? சர்க்கார் கொடுக்க முன்வருவது எவ்வளவானாலும், அவர்கள் தங்கள் தேவைக்குப் போதுமான அளவுக்கே சம்பளம் பெறவேண்டும்.

சம்பளத்திற்கு ஒரு வரையறை விதிக்க வேண்டும் என்பது நிருபரின் கோரிக்கை. நிர்ணயமாய் ஒரு வரையறை ஏற்படுத்துவது கடினம். ஒவ்வொரு ஊழியரும் தன் மனச்சாட்சிக் கேற்பத் தானே வகுத்துக்கொள்ள வேண்டும். தேவைக்கு அதிகமாக விரும்பினால் அது தவறு. சர்க்கார் ஊழியத்தில் சேர்ந்த

(பக்கம் 286-ல் பார்க்க)

கதாயி மண்டல் வேலை: புதிய வழியும் யுக்தியும் தேவை

ஏ. வி. சஹஸ்ரபுத்தே

காரியதரிசி, சர்க்கா சங்கம், சேவாகிராமம்

தேசத்தின் பல கிராமங்களிலும் சுமார் 1200 கதாயி மண்டல்கள் தற்போது வேலை செய்து வருகின்றன. கதர் சுயதேவைப் பூர்த்தியை முக்கிய நோக்கமாகக் கொண்டு, குறைந்தபட்சம் ஐந்து கதரபிமானிகளைக் கொண்டு இம்மண்டல்கள் நிறுவப்படு கின்றன. நிர்மாண வேலையின் எல்லா அம்சங் களையும் நடத்துவதற்கு ஆங்காங்கு ஸ்தலத் தின் தலைமைப் பொறுப்பை உண்டாக்க வேண்டுமென்றும் ஆலோசனை கூறியுள் ளோம். அவர்களுக்கு உதவி புரிய சர்க்கா சங்கம் சுமார் 50 கதாயி மண்டல் பிரசாரகர் களையும் நியமித்துள்ளது. அவர்கள் முகாம்கள், மூங்கில் ராட்டைப் பயிற்சி முகாம்கள் முதலானவற்றை நடத்தி, புரட்சி கரமான மாறுதல்களைச் சிருஷ்டிப்பதற்காக முயற்சி செய்து வருகிறார்கள். ஆனால் இவை மட்டும் போதுமென்று சொல்வதற் கில்லை.

நம் ஊழியர்களில், தாங்கள் வேலை செய் யும் கிராமங்களின் உண்மை நிலைமை என்ன வென்று அறிந்துகொள்ள முயல்வோர் ஒரு சிலர்தான். ஆதலால் அந்தந்த கிராமம் அல்லது வட்டாரத்தின் உண்மை நிலைமையை அறிந்துகொள்ளுமாறு நம் கதாயி மண்டல் களுக்கு ஆலோசனை கூறுவது அவசிய மாகிறது.

எனது சுற்றுப் பிரயாணத்தின்போது பல கதர் ஸ்தாபனங்களைப் பார்வையிட்டேன்; அங்குள்ள தொண்டர்களுடன் சம்பாஷிக்க வும் செய்தேன். அந்தந்த இடத்தின் பொரு ளாதார நிலை இன்னதென்று அறிந்துகொள் வதற்காக அவர்களிடம் சில கேள்விகள் கேட்டேன்; அவை:

1. உங்கள் கிராமங்களில் உள்ள நில மில்லாத உழைப்பாளிகள் எவ்வளவு பேர்?

2. எந்த எந்த வகுப்பாரிடம் ராட்டை பரவியிருக்கிறது?

3. உங்கள் கிராமங்களின் ஜனத்தொகை என்ன?

4. பொருளாதார ரீதியில் பார்த்தால் ஜனங்களின் நிலைமை எப்படி யிருக்கிறது?

5. ஒவ்வொரு வகுப்பாரிடமுமுள்ள விசேஷ அம்சம் யாது?

இவற்றுக்குத் திருப்திகரமாகப் பதிலளித் தவர்கள் ஒரு சிலரே யென்பதை வருத்தத் துடன்தான் ஒப்புக்கொள்ள வேண்டும்.

இந்த நிலைமையைக் கண்டு நான் ஒரு முடி வுக்கு வந்திருக்கிறேன்; அதாவது, கதாயி மண்டல்கள் வேலை செய்யும் கிராமம் அல்லது வட்டாரத்தின் உண்மையான நிலைமை இன்ன தென்று அறிவதற்கு ஓர் புதிய வழியும் யுக்தி யும் காணவேண்டும். அத்துடன், அவற்றின் பிரசினைகளைத் தீர்ப்பதற்குப் பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அப்பிரதேசத்தின் பொருளாதார நிலையைப் பற்றி விரிவாகவும் பூரணமாகவும் அறிந் திருக்கவேண்டும். அப்போது தான் கதர் வேலையை, நம்பிக்கையுடன் மட்டுமல்லாமல் திறமையுடனும் புத்தி பூர்வமாகவும் நடத்து வது சாத்தியமாகும்.

இந்த ஆராய்ச்சி கதாயி மண்டல்களுக்கு மட்டுந்தான் உபயோகப்படும் என்பதல்ல; இதன் விவரங்களைக்கொண்டு தலைமைக் காரியாலயம் பொதுவான ஆலோசனை சொல் லவும் வழிகாட்டவும் உதவியாயிருக்கும். சரி யான புள்ளி விவரங்களைச் சேகரிப்பதிலுள்ள அலட்சியப் பான்மையே இந்தியாவில் ஆரம் பிக்கப்படும் எந்தத் திட்டமும் சரியான, உண்மையான திட்டமாக இல்லாமற் போவ தற்குக் காரணம் என்று சொல்கிறார்கள். நமக்கும் இந்தக் குறை பொருந்தும். எனவே, உடனே இந்தவிதமான புள்ளி விவரம் சேர்த்து அறிவுடன் ஆராய்ச்சி செய்யும் வேலையில் ஈடுபடவேண்டுமாய் கதாயி மண் டல்களையும் அதன் பிரசாரகர்களையும் கேட் டுக் கொள்கிறேன். அவர்களுக்கு ஏதாயினும் சந்தேகம் இருந்தால் அதைப்பற்றி எனக்குத் தெரிவிக்கக் கோருகிறேன்.

"கதாயி மண்டல்" ஹிந்தி பத்திரிகையிலிருந்து

உணவு — உடை சம்பந்தமாக
மில் பொருள் பகிஷ்கார உறுதிமொழிப் பத்திரம்

"சர்வோதயத் தத்துவத்தின்படி ஓர் புதிய சமுதாயத்தைச் சிருஷ்டிக்க வேண்டுமானால், எல்லோருக்கும் போதிய வேலை கிடைத்து அவர்களின் வாழ்க்கை பொருளாதார சமத்துவத்தை நோக்கி முன்னேறுவது அவசியம். கிராம – குடிசைத் தொழில்கள் மூலம் பரவல் முறையில் அமைந்த உற்பத்தி – விநியோகத் திட்டத்தின் வாயிலாகத்தான் இந்த லட்சியத்தை அடையமுடியுமென்று நம்புகிறோம். இந்த நோக்கத்துடன் சுயதேவைப் பூர்த்திக்காகப் பரவல் முறையில் அமைந்த கிராமத்தின் பொருளாதார நிலைக்குத் தீங்கிழைக்கும், குவியல் முறையில் ஆலைகளில் தயாராகும் உணவு உடை சம்பந்தமான எல்லாப் பொருள்களையும் தீவிரமாக பகிஷ்கரிக்க வேண்டும்."

சர்வ சேவா சங்கத்தில் 14—4—'52 தேதிக் கூட்டத்தில் நிறைவேற்றி, காசி – சேவாபுரி சர்வோதய சம்மேளனத்தில் ஏற்றுக்கொண்ட மேலே கண்ட தீர்மானத்தின் ஒரு அம்சத்தை நடைமுறையில் நிறைவேற்றும் நோக்கத்துடன், இந்தப் பிரதிக்ஞை செய்து கொள்கிறேன்; அதாவது, உணவு, உடை சம்பந்தமாக கீழே குறிப்பிட்ட பொருள்களை மட்டுமே உபயோகிப்பேன்; குவியல் முறையில் ஆலையில் உற்பத்தி செய்யப்படும் உணவு, உடை சம்பந்தமான பொருள்களை உபயோகிக்க மாட்டேன்.

எண்	பொருள்களின் பெயர்	நான் மட்டும் — வீட்டில் மட்டும்	நான் மட்டும் — எல்லா இடங்களிலும்	குடும்ப முழுமையும்
1	ஆடை: கதர்			
	(அ) சுயதேவைப் பூர்த்தி மூலம்			
	(ஆ) சர்க்கா சங்கத்தின், அல்லது அதன் அத்தாட்சி பெற்ற கதர்			
2	கைக்குத்தரிசி			
3	கைத்திரிகையில் அரைத்த மாவு			
4	எண்ணெய்: மாட்டுச்செக்கில் ஆட்டியது			
5	கையால் செய்த வெல்லம் அல்லது கரும்புச் சர்க்கரை			
6	குடிசைத் தொழிலில் செய்த தோல் சாமான்கள்			

சங்கற்பம் எடுத்துக்கொள்வோரின் பெயர் : கையெழுத்து

கிராமம் :

தபால் :

தாலுகா : ஜில்லா :

மாகாணம் :

ஏதாவது ஸ்தாபனத்தில் வேலை செய்து வந்தால் அதன் பெயரும் தான் செய்யும் வேலையைப்பற்றியும் பின்பக்கம் குறிப்பிடவும்.

எந்தப் பொருள் சம்பந்தமாகச் சங்கற்பம் எடுத்துக்கொள்கிறீர்களோ அந்த இடத்தில் X குறி போடவும்.

இந்த உறுதிமொழிப் பத்திரத்தை தமிழ்நாட்டில் ஸ்ரீ அ. வேதரத்னம், வேதாரண்யம், தஞ்சை ஜில்லா என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

தங்கள் குடும்பத்தினர் அல்லது நண்பர்கள், இதர சர்வோதய ஊழியர்கள் இம்மாதிரி உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்திட விரும்பினால் அவர்களையும் தனித்தனிப் பத்திரத்தில் கையெழுத்திடச் செய்து வாங்கி அனுப்பவும். மேலும், இவ்விஷயத்தைப் பற்றிப் பிரசாரம் செய்யவேண்டுமாய்க் கோரப்படுகிறது.

சேவாகிராமம்
21—5—'52

சங்கர்ராவ் தேவ்,
காரியதரிசி, சர்வ சேவா சங்கம்.

குறிப்பும் செய்தியும்

மதுரை-ராமநாதபுரம் விபாக்

மேற்படி விபாக்கின் சஞ்சாலக் எழுதுவதாவது:-

மதுரை- ராமநாதபுரம் விபாக்கில் வேலை செய்து வரும் 38 கதாயி மண்டல்களில் 22 மண்டல்கள் தங்கள் அத்தாட்சிப்பத்திரத்தைப் புதுப்பித்துக் கொண்டன; மற்றவையும் விரைவில் புதுப்பித்துக் கொள்வதற்கான முயற்சிகளை சம்பந்தப்பட்ட கிளை நிர்வாகிகள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

எல்லாமண்டல்களும் சர்வோதய வேலைத் திட்டங்களை நியமப்படி நடத்திவருகின்றன. சில மண்டல்கள் கதர் சுயதேவைப்பூர்த்தியுடன், சம்பூரண கிராம சுயதேவைப் பூர்த்தியும் பெறுவதற்காக தீவிரமாக வேலை செய்து வருகின்றன. அவை:

புதூர்: *காந்திஜி கதாயி மண்டல்:*— இதன் நிர்வாகஸ்தர்கள் உள்ளூரில் மட்டுமல்லாமல் பக்கத்திலுள்ள கிராமங்களுக்கும் சென்று சுயதேவைப் பூர்த்தி, சுகாதாரம், பூமிதான யக்ஞம் சம்பந்தமாய்பிரசாரம் செய்கிறார்கள். உரக்குழி தயாரித்து, பிறரும் அம்மாதிரியைப் பின்பற்ற வேண்டிய அவசியத்தை எடுத்துரைக்கிறார்கள்.

புதுப்பட்டி: *மஹாத்மா காந்திஜி கதாயி மண்டல்:*— கதர் சுயதேவைப் பூர்த்தி, சர்வோதயக் கருத்துப் பிரசாரம் இரண்டிலும் தீவிர பங்கெடுத்துக் கொள்கிறது. மண்டலின் சார்பில் 7500 சிட்டம் நூலுக்கு ரூ. 2000 பெறுமான கதர் மாற்றப்பட்டிருக்கிறது. கடந்த 19-12-'52ல் இதன் மூன்றாவது ஆண்டு விழா சர்க்கா சங்க டிரஸ்டி ஸ்ரீ ரா. குருசாமி தலைமையில் நடைபெற்றது. சென்ற வருஷம் கனு காந்தி மூன்று நாட்கள் ஷிபிர் ஒன்று நடத்தினார்.

ரேங்கப்பநாயக்கர்பட்டி: *வினோபாஜி கதாயி மண்டல்:*— அங்கத்தினர்களே தமது சொந்த உழைப்பைக்கொண்டு மண்டலுக்குக் கட்டடம் கட்டியிருக்கிறார்கள். உரக்குழிகளும் மல-மூத்திரக் குழிகளும் வெட்டி உரம் தயாரித்து வருகிறார்கள். தயாரிக்கப்பட்ட உரம் ரூ. 30க்கு விற்பனையானது.

கமுதி: *பாரதி கதாயி மண்டல்:*— நூற்போருக்குத் தேவையான பட்டைப் பஞ்சை ஸ்தலத்திலேயே தயாரித்துக் கொடுக்கிறார்கள். இயற்கை வைத்தியம் பற்றிய பிரசாரமும் நடைபெறுகிறது.

மேலூர்: *பாரதி கதாயி மண்டல்:*— கடந்த சர்வோதய மேளாவில் மண்டல் சார்பில் ஒரு யாத்திரைக் கோஷ்டி புறப்பட்டு 31-1-'52 தேதிமுதல் 12—2—'52 முடிய 9 கிராமங்களுக்குக் கால் நடையாகச் சென்று சர்வோதய, பூமிதான யக்ஞப் பிரசாரம் செய்தனர்.

சர்க்கார் சம்பளமும் நிர்மாண ஊழியரும்

(283-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு வருமானத்தை உயர்த்திக்கொள்வதும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அனுஷ்டிப்பதும் உகந்ததல்ல. எளிமையை விடாமல் ஊழிய மனப்பான்மைக்கு உதாரணமாய் அமையவேண்டும். மாதச் சம்பள விஷயத்தில் மட்டுமல்ல, பிரயாணப்படி, லீவு போன்ற பிற வசதிகளிலும் தமக்கே உரிய தனிப்பான்மையைப் பின்பற்ற வேண்டும். இவ்விஷயங்களில் சர்க்கார் விதிகள் ரொம்ப தாராளமானவைதான். அவற்றில் உசிதமற்ற சலுகைகளைப் பெற முயலலாகாது. பிரயாணத்தின்போது செலவான தொகையைமட்டும் சர்க்காரிடம் கோரவேண்டும். அச் செலவுகளும் அவரது எளிய சிக்கன வாழ்விற்கு ஒத்ததாக இருப்பது அவசியம். சட்டசபை அங்கத்தினர்களில் சிலர் சர்க்காரிடமிருந்து வசூலிக்கும் பிரயாணப்படியில் கணிசமான தொகை மீத்துவைப்பதாகப் புகார் கூறப்படுகிறது. இது ஒரு அருவருக்கத்தக்க வழக்கம். சர்க்கார் கஜானாவில் சேரும் பணம் கடைசியில் ஏழைகளிடமிருந்துதான் வருகிறது. சர்க்கார் பணத்தை நம் பணம்போன்று அவ்வளவு சிக்கனமாய்ச் செலவிடவேண்டும்.

எது எவ்வாறிருந்தாலும், எளிய அவாவற்ற வாழ்க்கையைக் கடைப்பிடிக்கும் ஆற்றல் வாய்ந்தவர்கள், சிறிது மீதப்படுத்தவோ அல்லது வசதியாக வாழவோ வேண்டுமென்ற ஆசையையும் சந்தர்ப்பத்தையும் விடமுடியாதவர்களைத் தாழ்வாகக் கருதக்கூடாது. ஆதலால், அவர்களுக்கு நிர்மாண ஸ்தாபனங்களில் அளிக்கும் கௌரவத்தையும் மரியாதையையும் பற்றிய பிரச்னைக்கு இங்கு இடமில்லை. தற்பெருமையாலும் பொறுமையாலும், அவாவின்மை எளிமை ஆகிய நற்குணங்களின் மகத்துவம் குறைந்துவிடும். ★ ★ ★

"ஹரிஜன்," (ஆங்கிலம்) 24-11-'51

மண்டபம்: மஹாத்மா கதாயி மண்டல்:— மண்டபம் ராமேஸ்வரம் செல்லும் ரயில்மார்க்கத்தில் உள்ள ஒரு ஸ்டேஷன். இங்குள்ளவர்கள் எல்லோரும் ரயில்வே தொழிலாளர். மண்டலை ஆரம்பித்து நடத்தி வருவோரும் ரயில்வேத் தொழிலாளரே. வாரா வாரம் அங்கத்தினர் தொகை வளர்ந்து வருகிறது. சென்ற ஆறு மாதங்களில் 1620 சிட்டம் நூல் கதராக மாற்றப்பட்டிருக்கிறது. நாட்டின் மற்ற தொழிலாளர்களிடையே சர்வோதயக் கருத்து பரவுவதற்கு இது வழிகாட்டியாக விளங்குகிறது.

விபாக்கிலுள்ள 38 கதாயி மண்டல்களின் 320 அங்கத்தினர்களில் ஆடை சுயதேவைப் பூர்த்தியாளர்கள் 125 பேரும், மண்டல் உள்ள இடங்களில் கதருடுத்துவோர் மொத்தம் 2100 பேரும் இருக்கிறார்கள். நடைபெற்ற நூற்புயக்ஞக் கூட்டங்கள் 125; பொதுப் பிரார்த்தனைக் கூட்டங்கள் 85; பிரசாரக் கூட்டங்கள் 55; தோண்டப்பட்ட கலப்பு உர மல-மூத்திரக் குழிகள் 11; துப்புரவு நிகழ்ச்சிகள் 50.

திருநெல்வேலி விபாக்

மேற்படி விபாக்கின் சஞ்சாலக் எழுதுகிறார்:

திருப்பூரில் கூடிய சஞ்சாலக்குகளின் கூட்டத்தில், திருநெல்வேலி விபாக்குக்கு 1952-'53-ம் வருஷத்திற்குத் தேவையான பஞ்சுக்கு பருத்தியாகவே விவசாயிகளிடம் கொள்முதல் செய்து கைமணையில் அரைத்துக் கொள்வதென்று தீர்மானமாயிற்று. அதன்படி கைமணை அரைவை நமசிவாயபுரம், காலாங்கரைப்பட்டி ஆகிய இரண்டு கிராமங்களில் நடைபெறுகிறது.

நமசிவாயபுரத்தில் மொத்தம் 70 மணைகள் வரை இனி வேலை செய்யுமென்று எதிர்பார்க்கிறோம். இங்கும் சுற்றுப்புறத்திலுமுள்ளவர்கள் தங்கள் வீடுகளிலேயே கைமணையால் பருத்தியை அரைத்து, தங்கள் தேவைக்குப் போக மீதமிருக்கும் பருத்திவிதையை விற்றுக் கொள்கிறார்கள். பஞ்சரைக்கும் வேலையை ஆரம்பிப்பதில் சில சிரமங்கள் ஏற்பட்டன; என்றாலும் இங்குள்ள கதாயி மண்டல் அங்கத்தினர்களின் ஒத்துழைப்பால் அவை நிவர்த்தியாயின. சுமார் 25 ஆண்டுகளாய் நசித்துப் போயிருந்த கைமணை அரைவைத் தொழில் இப்போது மீண்டும் புத்துயிர் பெற்றிருக்கிறது. தினமும் 3 மணைகள் வீதம் பழுது பார்த்துக் கொடுக்கிறோம். இதுவரை பழுது பார்க்கப்பட்ட மணைகள் 50; பழுதுபார்க்க வேண்டியவை 60; ஒரு நபர் நாளொன்றுக்கு சுமார் 20 ராத்தல் பருத்தி அரைக்கமுடிகிறது; அதற்குக் கூலி ரூ. 0-8-0. இவ்விதம் இங்கு நாளொன்றுக்குச் சுமார் 30 ரூ. கூலி வழங்கப்படுகிறது.

காலாங்கரைப்பட்டியில் பல வருஷங்களாகவே நம் சர்க்கா சங்கத்திற்கு வேண்டிய பஞ்சு கைமணை அரைவை மூலம் கிடைத்து வந்தது. இப்போது 50 மணைகள் வேலை செய்கின்றன; மணைகளின் எண்ணிக்கை 60 வரை உயரும் என்று எதிர்பார்க்கிறோம். தேவையான பஞ்சு முழுவதையும் ஜூன் மாதம் 20-ந் தேதிக்குள் அரைத்துவிட வேண்டும் என்ற உத்தேசத்துடன் வேலை நடக்கிறது.

இரண்டு இடங்களிலும் நாளொன்றுக்குச் சுமார் 2200 ராத்தல் பருத்தி அரைவையாகிறது. ஜனங்கள், பஞ்சு கொடுப்பதற்குப் பதிலாகப் பருத்தியாகவே கொடுக்கும்படிக் கேட்கிறார்கள், அதையே விரும்புகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மூலனூரில் தீவிர சுயதேவைப் பூர்த்தி

நூல்கொள்முதல், நூற்போரிடம்: சிட்டங்களின் எண் 1,16,728; நூலுக்குப் பதிலாகக் கதர் மாற்றிக்கொண்ட சிட்டம்: 1,18,876.

புத்தூர்:— இக்கிராமத்தில் புதிதாக இரண்டு வாலிபர்கள் ஈரிழை முறுக்கு நூலில் நெசவு செய்யக் கற்றுக்கொண்டார்கள். இப்பொழுது 45" அகலத்தில் ஓரிழை நூல் நெசவு செய்து வருகிறார்கள். இங்கு ஒரு குழிக் கக்கூஸ் அமைக்கப்பட்டிருக்கிறது. புதிய கதிர்கள் தயாரிக்கப்படுகின்றன.

சேஷையன்பாளையம்:— இங்கு சர்க்கா சங்கத் தொண்டர்மூலம் புதிய கதிர்கள் தயாரிக்கப்படுகின்றன. ஒரு வாலிபர் ஈரிழை முறுக்கு நூல் நெசவு கற்று வருகிறார்.

ஞானக்கவுண்டன்வலசு:— இங்கு ஒரு பரிசிரமாலயம் நடைபெற்று வருகிறது. பரிசிரமாலயத்தில் நான்கு பெண்களும், ஐந்து பையன்களும் நூற்பு நெசவு வேலை செய்து வருகிறார்கள். இவர்கள் பஞ்சிலிருந்து துணி நெசவு செய்வது வரையிலுள்ள எல்லா வேலைகளையும் கூட்டுறவு முறையில் செய்து வருகிறார்கள். பாவிற்கு ஈரிழை முறுக்கு நூலும், ஊடைக்கு ஈரிழையும் உபயோகித்து 27" அகலத்தில் துண்டுகள் தயாரிக்கிறார்கள். நூலை வஸ்திராலயத்தில்

கொடுப்பதற்குப் பதிலாக நெசவு செய்த கதரைக் கொடுத்து ரொக்கம் பெற்றுக் கொள்ளுகிறார்கள். மூங்கில் ராட்டையில் ஈரிழை முறுக்கு நூல் நூற்கிறார்கள். நூற்ற நூலைச் சிட்டம் போடுவதில் செலவாகும் நேரத்தை மீதப்படுத்த நூற்ற கதிரிலிருந்தே பாவு ஓட்டப்படுகிறது. புதிய கதிர்களும் மூங்கில் ராட்டைகளும் இங்கு தயாரிக்கப் படுகின்றன.

குமாரக்கவுண்டன்வலசு:– இங்கு சர்க்கா சங்கத் தொண்டர் மூங்கில் ராட்டைகள் தயாரிக்கிறார்.

சோமன்கோட்டை:– இங்கு இரண்டு வாலிபர்கள் நெசவு கற்றுக்கொண்டார்கள். இங்குள்ள தொண்டர் மூங்கில் ராட்டை தயாரிக்கிறார்.

இங்கு 1—7—'51 முதல் 29—2—'52 முடிய மொத்தம் 206 குடும்பங்கள், குடும்பம் முழுதும் சம்பூர்ணமாகக் கதரணிபவர்களாகி யிருக்கிறார்கள்; மில் துணி அணிவதில்லை என்று விரதம் எடுத்திருக்கிறார்கள். இவர்கள் தங்கள் தேவைக்கு அதிகமாக நூற்கும் நூலுக்குப் பதில் வஸ்திராலயத்தில் ரொக்கம் பெற்றுக் கொள்கிறார்கள். பிப்ரவரி-மீ இக் குடும்பங்களுக்கு பஞ்சு போக ரூ. 2244-1-9 ரொக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அரசர்குளம் நிர்மாண ஊழியர் முகாம்

காந்தி ஞாபகார்த்த நிதியின் தமிழ்நாட்டுக் கிளையின் சார்பாக அறந்தாங்கி தாலூகா அரசர்குளம் கிராமத்தில் காந்தீய-நிர்மாண ஊழியர் பயிற்சி முகாமை 31–5–'52 காலையில் ஸ்ரீ அ. வேதரத்னம் ஆரம்பித்துவைத்தார். ஸ்ரீ எஸ். வெங்கடராமய்யர் எம்.எல்.ஏ., தலைமை வகித்தார். கோட்டைப் பட்டணம் ஸ்ரீ அ. ரு. சாலிஹுமரைக்காயர் தேசீயக் கொடி ஏற்றினர். இதில் சுமார் 20 ஊழியர்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள். இந்த முகாம் தஞ்சை ஜில்லா நிர்மாண ஊழியர் சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீ ஆர்.எம். கோவிந்தசாமியின் தலைமையில் ஆறுவார காலம் நடக்கும்.

ஸ்ரீ சங்கர்ராவ் தேவின் பூதான யாத்திரை

சர்வ சேவா சங்கத்தின் காரியதரிசி, ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் ஹைதராபாத் தெலுங்கானவில் ஆகஸ்டு17உ முதல் ஒருமாத காலம் பூமிதான யக்ஞத்தில் கால்நடை யாத்திரை செய்வார்.

விஜயவாடா நிர்மாண ஊழியர் மகாநாடு

விஜயவாடாவில் படமடா என்ற இடத்தில் மே-மீ 30, 31-உயில் நிர்மாண ஊழியர் மகாநாடு நடந்தது. சமீபத்தில் ரஷ்யாவுக்குச் சென்று திரும்பிய டாக்டர் ஜே. ஸி. குமரப்பா தலைமை வகித்தார். அங்கு நிறைவேறிய தீர்மானங்களின் சாரம்:

1. உணவு உற்பத்தி பெருக உழைக்கும் மக்களுக்குப் பொருளாதார சுதந்திரம் கிட்டவேண்டும். பொருளாதார ஏற்றத்தாழ்வு நீங்கி சமத்துவம் ஏற்படவேண்டும். இதற்காக உணவு உற்பத்திக்கு ஆதாரமான நிலத்தை உழைப்பவருக்கு சமமாகவும் நியாயமாகவும் 31-3-'53க்குள்ளாகப் பங்கீடு செய்வது அவசியம். இவ்விதம் செய்யும்படி சர்க்காரையும் நிலச்சுவான்தார்களையும் தூண்டுவதற்கு சர்வ சேவா சங்கம் மக்கள் இயக்கத்தைத் தொடங்கி நடத்தவேண்டும்.

2. ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் குறைந்தது ரூ. 100 வருமானம் கிடைக்கவும் யாருடைய வருமானமும் இப்போதைக்கு இருபது மடங்குக்கும், காலக்கிரமத்தில் பத்து மடங்குக்கும் அதிகமாகாமலிருக்கும் படிச் சட்டமியற்ற வேண்டும். சர்வோதயத் திட்டத்தில் 2 வருஷங்களுக்கு முன் ஏற்றுக் கொண்ட இந்தக் கொள்கை, 31—3—'53க்குள் அமுலுக்கு வருவதற்கான இயக்கத்தை தொடங்குமாறு சர்வ சேவா சங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

3. சுதேசி தர்மத்தை மறந்து சர்க்காரும் ஜனங்களும் வெளிநாட்டுச் சரக்குகளை ஏராளமாய் இறக்குமதி செய்து உபயோகிக்கிறார்கள். இறக்குமதியைத் தடை செய்து கிராம-குடிசைத் தொழில் பொருள்களையே உபயோகிக்குமாறு பொது மக்களையும் சர்க்காரையும் கேட்டுக்கொள்கிறது.

4. இந்தத் திட்டங்களை நிறைவேற்ற இதர கட்சிகளுடன் கலந்து இயக்கம் தொடங்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அதில் டாக்டர் குமரப்பா, தலைவர்; ஸ்ரீ (கோரா) ராமச்சந்திர ராவ், வி. செல்வராஜ், வஸந்த நார்கோல்கர், ஆர். அச்சுதன் ஆகியோர் அங்கத்தினர்கள். ★ ★ ★

Edited and Published by N. Ramaswami
For Sarvodaya Prachuralayam, All India Spinners' Association, Veerapandy, Tirupur.
Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.

788

ஸர்வோதய பிரசுராலயத்தில் கிடைக்கும் இதர புத்தகங்கள்

ஆதாரக் கல்வி நூல்கள்

ஆதாரக்கல்வி என்றால் என்ன?	1	0
முதல் வகுப்பு ஆசிரியர்	1	8
சிறுவர்க்கான பாடல்	0	6
வாழ்க்கைக்கான கல்வி	0	5
இன்றைய பேச்சு ஆதாரக் கல்வி (ஆசாரிய கிருபலானி)	2	0
நமக்கேற்ற உணவு (டாக்டர் குருபாதம்)	0	10
கிராம நிர்மாணத் திட்டம் (குமரப்பா)	0	8
நிர்மாணத் திட்டம் (மகாத்மா காந்தி, ராஜன்பாபு)	0	14
பூரண சுதேசி (மகாத்மா காந்தி)	1	0
சுயராஜ்ய சாஸ்திரம் (வினோபா பாவே)	2	0
ஆதாரத் தொழில் - நூற்றல் (வினோபா பாவே)	1	0
வாழைத் தோட்டம்	1	12
பழத் தோட்டம்	10	0
ஆதாரக் கல்விப் பாடத்திட்டம் (1 முதல் 8 வகுப்பு) 5-ம் பதிப்பு	3	0
ஆதாரக் கல்விப் பாடத்திட்டம் (1 முதல் 5 வகுப்பு)	1	4
சர்வோதயத் திட்டம்	0	8

குமரப்பா எழுதிய நூல்கள்

ஸ்ரீ மீ. விநாயகம் மொழிபெயர்ப்பு

கொள்ளையோ கொள்ளை	0	12
பொறுப்பற்ற அரசாங்கம்	0	12
டாக்டர் குமரப்பா வாழ்க்கை வரலாறு (ஸ்ரீ விநாயகம் எழுதியது)	2	8

ஸர்வோதய இலக்கிய வேலைக்கு

படித்த வாலிபர்கள் தேவை

சர்வ சேவா சங்கத்தின்கீழ் ஸர்வோதய பிரசுராலயத்தின் வேலை வளர்ந்துவருகிறது. மேலும், காந்தி ஞாபகார்த்த நிதி (தமிழ்நாடு) மூலம் காந்தீய இலக்கியத்தைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் பணியையும் நமது பிரசுராலயம் ஏற்றுக்கொள்ளக்கூடும்.

இந்தப் பணியை ஆற்ற காந்தீய சர்வோதய இலக்கியத்தில் ஆர்வம், திறமை, பாஷா ஞானம் பெற்ற படித்த வாலிபர்கள் தேவை. தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் முதலியவைகளில் அனுபவம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். அத்துடன், கடிதப் போக்குவரத்து, கணக்கு, தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் முதலிய பாஷைகளில் டைப் செய்தல் முதலான காரியாலய வேலைகளில் பயிலவும் நல்ல சந்தர்ப்பம் பெறுவார்கள்.

சர்வோதய லட்சியத்திற்குத் தங்களை அர்ப்பணம் செய்துகொள்ளக்கூடிய வாலிபர்கள் முழு விவரத்துடன் இந்த விலாசத்திற்கு எழுதக் கோருகிறோம்.

ஆசிரியர், ஸர்வோதய பிரசுராலயம்

பிரசுர தெரு விற்பனைத் தொண்டர்கள் தேவை

முன் காலத்தில் கதர் மூட்டையைத் தோளிலும் தலையிலும் சுமந்து கிராமம் கிராமமாக நடந்து கதர் விற்ற தியாகிகளை மறக்க முடியாது.

இப்பொழுது காந்தீய-சர்வோதயக் கருத்துக்கள் மக்களிடையே பரவ நமது பிரசுரங்களையும் பத்திரிகைகளையும் கிராமங்களில் பரப்ப உற்சாகமுள்ள கிராமத் தொண்டர்கள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். விவரத்துடன் இந்த விலாசத்திற்கு எழுதவும்.

ஆசிரியர், ஸர்வோதய பிரசுராலயம்

ஸர்வோதய பிரசுராலயம்,
வீரபாண்டி — திருப்பூர்

எமது காந்தீய - சர்வோதய இலக்கியம்

காந்திஜி எழுதியவற்றின் மொழிபெயர்ப்பு

	ரூ.அ.
ஸர்வோதயம்	0—6
ஆசிரம வாழ்க்கை	1—4
ராட்டை — தத்துவ விளக்கம்	1—4
சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும்	1—0
ராமநாமம்	0-12
நீதி தர்மம்	0—4
சமூகத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம்	0—4

அன்னை கஸ்தூரிபாவின் சரித்திரம்

வனமாலா பரீக், சுசீலா நய்யார் எழுதியது

எமது பா பாகம் I	1—4
,, ,, II	1—4

காகா கலேல்கர் எழுதியது

காந்திக் காட்சிகள்	1—4

குழந்தைகளுக்காக காந்திஜியின் சரித்திரம்

பாப்பாவின் காந்தி (3-ம் பதிப்பு)	0-12
பாபூ என் தாய் (2-ம் பதிப்பு)	அச்சில்

வினோபாஜியின் கருத்துரைகள்

அறிவுரைகள்	0-12
பிரார்த்தனைப் பிரசங்கங்கள்	0—8
காந்திஜியின் குரல்	0—6
பூமிதான யக்ஞம்	0—2

காந்ீயத் தத்துவ சாஸ்திரம்

ஸ்ரீ கிஷோரிலால் எழுதியது

காந்திய நவநீதம் (2-ம் பதிப்பு)	2—0

தத்துவ நூல்கள்

கதர் தத்துவமும் சேவையும்	0-12
மலஜல சுத்தி	0—8
சுயம்பூரண கிராமம்	0—5

மஜும்தார் எழுதியவை

	ரூ.அ.
ராட்டைப் புரட்சி	
ஸ்வராஜ்யமும் சர்க்காவும்	0—8
தப்புரவு விஞ்ஞானம்	0—8
சுயராஜ்யத்தின் உண்மைப் போர் பாகம் I	0—3
,, பாகம் II	0—3
இதென்ன சுயராஜ்யம்?	0—3

கதர் சாஸ்திரம்

நூற்புக் கணிதம் பாகம் I	0—6
,, ,, II	0—8
,, ,, III	0-14
,, ,, IV	1—0
நூற்புக் கலையின் நுணுக்கங்கள்	1—0
தக்ளியால் நூற்பதெப்படி?	0—8
கைராட்டை	1—8
கிஸான்-பெட்டி-ஏரிழை ராட்டை	1—0
நரம்பு செய்தல்	0—8
பட்டை போட சுலப வழி	0—4
பருத்திப் பிரசினை	0—6

இதர நூல்கள்

வ. வே. சு. ஐயர் எழுதியது

புக்கர் வாஷிங்டன்	0—8
தன்னம்பிக்கை (மொழிபெயர்ப்பு)	(கைவசமில்லை)

காந்தி ஆசிரம பஜனாவளி

காந்திஜி சத்தியாக்கிரக ஆசிரமத்திற்காகத் தொகுத்தது (3-ம் பதிப்பு)	0—6

THE IDEOLOGY OF THE CHARKHA

Gandhiji's writings and speeches on Khadi— (1906—'48) compiled by Shri Srikrishnadas Jaju — As. 14

DEMAND OF THE TIMES

by Mazumdar — ,, 12

REVOLUTIONARY CHARKHA — ,, 6

தபால் செலவு வேறு

ஸர்வோதய பிரசுராலயம், வீரபாண்டி — திருப்பூர்

தந்தி விலாசம்:- "VASTRALAYA" (TIRUPUR) போன் நெ. 133

கமலா பிரஸ், திருப்பூர்.